


696
1-55
ஐ11, N4770
N55.8.11
197825

புரட்சியில் சேர்வதன் மூலம் பாட்டாளி மக்களே நீங்கள் வேறு எதையும் இழந்துவிட மாட்டீர்கள் நீங்கள் இழக்கக்கூடிய ஒரே பொருள் உங்களை இப்போது இறுகப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குதான்.

*　　*　　*

பொதுவுடமை என்றால் என்ன? இந்தக் கேள்விக்கு ஒரே வார்த்தையில் விடை கூறிவிட முடியும். தனி உடமைகள் யாவும் ஒழிந்த நிலை- ஆம்! அதுதான் பொது உடமை.

*　　*　　*

மதம் மக்களை மயக்கும் அபின்

*　　*　　*

முதலாளி வகுப்புக்கும், தொழிலாளி வகுப்புக்கும் இடையே இருக்கிற பேதம் எவ்வளவு விரைவில் மறைகிறதோ அவ்வளவு விரைவிலேயே ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்குமிடையே இப்போதுள்ள பகைமையும் மறைந்து விடும்.

—*காரல் மார்க்ஸ்.*


# பொன்னி

மலர் 8 | பிப்ரவரி 1, 1955. | இதழ் 11

திருவள்ளுவர் ஆண்டு 1986
— தைத் திங்கள் [illegible] ம் நாள் —



பொதுசன நூலகம் ... 1 FEB 1955



அட்டைப்பட விளக்கம் .... 4
தலையங்கம் .... 5
செய்தித் திரட்டு ... 6
வேதனை (கவிதை) .... 8
கண்டதில்லை ,, .... 9
உலக அரங்கில் .... 10
இலங்கைத் திருமுகம் ... 12
அந்த நாள் .... 13
வளரும் படங்கள் .... 18
நம் கருத்து ... 20
அடடா! அப்படியா? ... 22
படவுலகில பறக்குந்தட்டு .... 24
ஒளி மாடம் (தொடர் கதை) ... 25
புலிக்குப் பிறந்தவர் .... 33
வாடாதே, என்மலரே .... 38
நமது மருத்துவர் .... 40
எரியும் வஞ்சம .... 41
பாமபு ... 45
இலக்கியச் செல்வங்கள் .... 49
கறறது ஒழுகு .... 54
ச. கோபாலன் ... 57
வளரும் இலக்கியம் ... 63



விலை 4 அணா


"பொன்னி" யில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே. கட்டுரையாளர்களின் கருத்துக்கு — ஆசிரியர் பொறுப்பல்ல —

# அலுவலக அறிவிப்பு

குறிப்பிட்டிருந்தபடி 15-1-55ல் பொன்னி வெளி வரவில்லை. நிர்வாக வசதி காரணமாக இந்த இதழ் 1—2—55ல் வெளிவந்துள்ளது. அடுத்த இதழ் 1-3-55ல் தான் மலரும். பொன்னியைத் தொடர்ந்து கொண்டு வருவதற்கான திட்டங்கள் இன்னும் முற்றுப்பெருததால் இந்த இடைக்கால ஏற்பாடு. இக்குறையைப் பொன்னி அன்பர்கள் பெரிதும் பொறுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

அடுத்த இதழில் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் ஒரு அரிய சிறுகதை விருந்தும், கவிஞர் வாணிதாசன் அவர்கள் கவிதை விருந்தும் அளிக்கிறார்கள். திரு. கலைமணி பீ.ஏ. (ஹானர்ஸ்) அவர்கள் சிறுவர் பகுதியைத் தொடங்கி வைக்கிறார்கள். இன்னும் பலப்பல. விலையில் மாற்றம் எதுவுமில்லை

என்றும் போல் உங்கள் ஆதரவை நல்க வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்.

# ரூ. 59,525

( முன் ஏழு போட்டிகளில் பரிசளிக்கப்பட்டிருக்கிறது )

[போட்டி 7-ன் முழு விபரமும் போட்டியாளர்களுக்கு அனுப்பப்பெற்றுள்ளது. ஸ்டாம்பு ஒட்டிய விலாசக் கவர் அனுபபியும் பெறலாம் ]

போட்டி எண் 9 — தந்தி "NEW ERA"

## வெற்றி நிச்சயம்

( பரிசுத் தொகை உத்திரவாதமானது )



முற்றிலும் சரியான விடை ஒவ்வொன்றுக்கும், ரூ. 2500 சரியான முதல் இரண்டு நர் வரிசைகள் கொண்ட விடை ஒவ்வொன்றுக்கும் ரூ. 500; சரியான முதல் நேர்வரிசை கொண்ட விடை ஒவ்வொன்றுக்கும் ரூ. 50; முதல் வரிசையில் நேர் முதல் இரண்டு சரியான எண்கள் அனுப்பியவர்க்கு ரூ. 5. முதல் எண் சரியாக அனுப்பியவர்க்கு ஒரு ரூபாய் பிரைஸ் வவுச்சர். 16 எண்ட்ரி அனுப்பிய ஒவ்வொருவர்க்கும் 1 ரூ ப்ரைஸ் வவுச்சர் அளிக்கப்படும். இரு இதர பரிசுகள் ரூ. 200 ரூ. 100 ஒரே பெயரில் அதிகப்படியான எண்ணிக்கை கூபன்கள் அனுப்பியவர்க்கு பரிசளிக்கப்படும்.

2 (இரண்டு) முதல் 17 (பதினேழு) முடிய உள்ள எண்களைக் கொண்டு நேராகவோ குறுக்காகவோ மேல் கீழாகவோ எப்படிக் கூட்டினலும் 38 (முப்பத்தி எட்டு) வரும்படி நம்பர்களைக் கட்டங்களில் எழுதவேண்டும். ஒரு தடவைக்குமேல் ஒரு நம்பரை உபயோகப்படுத்தக் கூடாது.

**இந்தியாவில் தபாலில் சேர்க்கவேண்டிய கடைசி தேதி 3–3–55. வெளி நாடுகள்: விமான தபால் மூலம் அனுப்ப கடைசி தேதி 26–2–55 பரிசு முடிவு 12–3–55**

பிரவேசக் கட்டணம்: ஒரு கூப்பனுக்கு: ரூ. 1 (1ஷி 6 பென்ஸ்) நாலு கூப்பனுக்கு ரூ. 3 (4 ஷி. 6 பென்ஸ்) 16 கூப்பனுக்கு ரூ. 10 (15ஷி. 6 பென்ஸ்)

நிபந்தனைகள்: உரிய பிரவேசக் கட்டணத்துடன் ம. ஆ. ரசீதோ, கிராஸ் செய்த இந்தியன் போஸ்டல் ஆர்டரோ New Era Competitions, Meerut-ன் பெயருக்கு பாங்கு டிராப்டாகவோ சேர்த்தனுப்ப வேண்டும். (வெளி நாட்டு நேயர்கள், பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மணியாடர் மூலம் பிரவேசக் கட்டணம் அனுப்பலாம். மணியார்டர் ரசீதிலும் கூப்பனிலும் உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதவும். ஆங்கில எண்களையே உபயோகப்படுத்தவும். சரியான விடை என்பது மீரட் கண்ட் பஞ்சாப் நேஷனல் பாங்கில் சீலிட்டு வைக்கப்பட்டிருக்கும் வரிக்கு வரி சரியான விடையாக இருக்க வேண்டும். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் இருக்கவேண்டும். இரண்டணு தபால் தலை அனுப்புபவர்களுக்கு சரியான விடையும் பரிசு பெற்றோர் விபரமும் விடை வெளிவந்த ஒரு வார காலத்தில் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் போட்டி நிர்வாகியின் திர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். இப்போட்டிக்கு கூப்பன் அனுப்புபவர்கள் அதற்குக் கட்டுப்பட்டதாக ஆகும்.

கூப்பன்களும் மணியார்டரும் அனுப்பவேண்டிய விலாசம்

**NEW ERA COMPETITIONS (No. 9)**
**P. B. 15, THE MALL (141) MEERUT (INDIA)**

**போட்டி 7ன் விடை மொத்தம் 34**

| | | | |
|---|---|---|---|
| 6 | 2 | 15 | 11 |
| 3 | 16 | 1 | 14 |
| 12 | 9 | 8 | 5 |
| 13 | 7 | 1[illegible] | [illegible] |

We hereby certify that the above is the solution in original deposited with us by New Era Competitions No. 7 on 14-12-54 in a sealed cover which was opened in our presence today and that a copy of the above solution has been lodged with the Bank.

FOR THE PUNJAB NATIONAL BANK LIMITED,
(Sd.) M. C. Grover
13-1-55
Manager,
Meerut Cantt

# தென்றலின் குறும்பு

சிரிப்பு, முகத்துக்கு அழகும் அகத்துக்கு இன்பமும் அளிக்கிறதல்லவா? அது மலரும் இடத்தில் மட்டுமல்ல, படரும் இடத்தில்கூட இந்தப் பயனையே அளிக்கிறது. மகிழ்ந்தவன் சிரிக்கிறான். அப்படிச் சிரிப்பவனைப் பார்ப்பவன் மகிழ்கிறான். இன்பத்தைத் தரும் சிரிப்பு இனிமையைத் தரும் இசைதான். இசைவாணன் பாடும்போது உருகுகிறான். சுவைப்பவன் அந்தப் பாட்டைக் கேட்கும்போது உருகுகிறான். தோன்றும் இடத்திலும் தொடும் இடத்திலும் இனிய இசையைப் போலவே இன்பத்தைத் தருகிறது சிரிப்பு! இன்பம் மட்டுமா, சிரிப்பு சேர்க்கும் அழகு காட்சிக்கு விருந்து. மூடிய தாமரையைப் பார்க்கும் போது வாடிய உள்ளம்தான் நினைவுக்கு வருகிறது. ஆனால்........சிரிக்கும் தாமரையைப் பாருங்கள், உவகை பெருக்கெடுக்கிறது உள்ளத்தில். சிரிப்பின் வல்லமை இது. சிறு குழந்தையானாலும் சரி. சிலையை ஒத்த சிங்காரியானாலும் சரி. சிரிக்கும்போது பாருங்கள். அவர்கள் அழகே அப்போது ஒரு தனி அழகுதான்!

சிரிப்பு இன்பக் காட்சியை வழங்குகிறது என்றால், சினம் துன்பக் காட்சியைத்தான் தருகிறது. காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் கதிரவன் சிரிக்கும்போது கீழை வானத்திலும் மேலை வானத்திலும், மலர்ந்த ரோஜாச் சோலைகளோ விரித்த சிகப்பு வர்ணச் சேலைகளோ வந்து நிறைகின்றன என்பது இருக்கட்டும், அப்போது இயற்கையன்னை விரிக்கும் இன்பக் காட்சிகள் ஒன்றா, இரண்டா? இலையணைகளில் நிற்கும் தாமரைகளைப் போலவே தலையணைகளில் முகம் வைத்து உறங்கும் மாந்தர்களின் விழிகளும் மலர்கின்றன. அது மட்டுமா? வீட்டை விட்டு வேலைக்குப் புறப்படும் உழவர்களும் கூட்டை விட்டுச் சோலைக்குப் பறந்திடும் பறவைகளும்!.......இன்பக் காட்சிகள் ஒன்றா, இரண்டா? மாலை நேரத்தில் கதிரவன் சிரிக்கும் போதும் இப்படி மனதையள்ளும் காட்சகள் மலரவே காண்கிறோம். ஆனால்.......? கதிரவன் நடுவானில் நின்று கடுஞ்சினம் கொள்ளும்போது பாருங்கள். கருகும் பயிர்களும் கனலால் உருகும் உயிர்களும் துன்பக் காட்சிகளையே தோற்றுவிக்கின்றன.

கதிரவன் மட்டுமல்ல, பெரு மலைக்கும் இதே நிலைதான்—சிரிக்கும்போது இன்பக் காட்சிகள். சினம் பொங்கும் போது துன்பக் காட்சிகள்! சினந்து பொங்கும் மலையைப் பாருங்கள்—வெடிக்கிறது—வெள்ளமாக நெருப்புக் குழம்பு பெருக்கெடுக்கிறது. அக்கம் பக்கத்திலுள்ள வீடுகள், உயிர்கள் அவ்வளவும் பொடிப் பொடியாகின்றன—பாறை விழுந்தாலும் நெருப்பு வெள்ளம் பற்றினாலும்! ஆனால்....—சிரிக்கும் மலையைப் பாருங்கள். அருவிகள் ஓடுகின்றன, குருவிகள் பாடுகின்றன. சிரிக்கும் மலையெங்கும் இன்பக் காட்சிகளே தெரிகின்றன.

கல்லாலான மலையும், கனலாலான கதிரவனுமே சிரித்தால் இன்பக் காட்சிகள் மலர்கின்றன என்றால், கண்ணுக்குத் தெரியாத காற்று சிரிக்கும்போது சொல்லவா வேண்டும், இன்பக் காட்சிகளுக்கு? காற்று கண்ணுக்குத் தெரியாதுதான்—நம் கண்ணுக்கு! காற்றின் கண்ணுக்கு நாம் தெரிவோம். அதனால்தான் போலும், நாம் அதைத் தொட விரும்பினால் முடிவதில்லை. ஆனால் அது ஓடிவந்து தொடும்போது நம்மால் விலகியிருக்க முடிவதில்லை. வேடிக்கையான குணமுள்ள காற்று! காற்று சினந்தால் புயல். சிரித்தால் தென்றல்! புயல் வீசும்போது துன்பக் காட்சிகளுக்குக் கொண்டாட்டம் தான். ஆனால் தென்றல் வீசும்போது, இன்பக் காட்சிகளுக்குக் கொண்டாட்டம். காற்றின் **சிரிப்புதான்** தென்றல் என்றால், அந்தத் தென்றலும் சிரித்தால் என்ன ஆகும்? தென்றலே சிரிப்பு என்றால் அந்தத் தென்றலும் சிரிக்கிறது. எங்கே என்பீர்? அட்டைப் படத்தைப் பாருங்கள். ஓடையிலே பூத்த ஒப்பற்ற தாமரை போலுள்ள அந்த அழகியின் ஆடை பறக்கிறதல்லவா—இடைக்குக் கீழே பறப்பதையல்ல, மேலேயும் கவனியுங்கள் ;........?!! ஆமாம், குறும்பு செய்துவிட்டுத் தென்றல் சிரிக்கிறது. ஆமாம், அவள்கூடத்தான் சிரிக்கிறாள்! தென்றல் அவளிடம் குறும்பு செய்கிறது. அவள் குறுநகை புரிகிறாள். தென்றல் அப்படிக் குறும்பு செய்வதால் சிரிக்கிறாள்—நீங்களோ, நானோ அப்படி அவளிடம் குறும்பு செய்தால்—செய்வதாவது, அப்படிக் குறும்பு செய்ய எண்ணிக் கண்ணால் அதைக் குறித்தாலே போதும், அவள் சிரிப்பாளா—இல்லை—இல்லை—நம்மை எரிப்பாள்! ஆமாம்—எரிப்பாள்!! குறும்பு செய்யும் இந்தத் தென்றலின் சிறப்பை, கரும்பைவிட இனிக்கும் கனித் தமிழில் கவியரசர் பாரதிதாசன் கவிதையாகத் தருகிறார்—அழகின் சிரிப்பில்! இதோ வரிகள்........

........ ........ ........பெண்கள்

**விலக்காத உடையை நீ போய்**
**விலக்கினும் விலக்கார் உன்னை"**

கா. பா.

# பாத்தீரா? கேட்டீரா?

அண்மையில் ஆவடியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டைப் பற்றிப் பலரும் பலவிதமாக நேரில் கண்ட நிகழ்சசிகளை மறைத்தும், திரித்தும். உள்ளது உள்ளபடியும், மிகைப்படுததியும் கூறுகின்றனர். நம்மைப் பொறுத்த மட்டில், தமிழ் நாட்டவர் பொறுமைக்கு, பெருந் தன்மைக்கு எடுத்துக்காட்டானவர்கள் எனபதை ஏனையோருக்கு வெளிப்படுத்திய நிகழ்ச்சி மறகக, மறுக்க முடியாததாகும்.

அவ்வாறில்லாவிடில் மொழிக் குமப்பத்தால் நிகழ்ச்சிகளைச் சரிவரப் புரிந்துகொள்ள இயலாது திகைத்த நிலையிலும், தலையசைத்துக்கொண்டு அறியாமலே அறிந்ததாகக் காட்டிக்கொண்டு பேசாமல் இருந்திருப்பார்களா?—அதே நேரத்தில் தமிழர்கள் தம் தாய்மொழியில் பேச முயன்றபொழுது வடநாட்டவா பலர் மொழி புரியவில்லை என்பதால் வெளியே எழுந்து சென்றனரே—இது எதைக் காட்டுகிறது? புரிந்துகொள்ள வேண்டாமா?

மாநாட்டைப்பற்றிச் சிந்தித்தால் ஒரு பெரிய திருவிழா நடந்து முடிந்தது என்றுதான் கூறவேண்டும். எப்படித் திருவிழாக்களால் மக்கள் பலன் எதுவும் அடைவதில்லையோ அதேமாதிரியில் யாருக்கும் பலனில்லாத நிலையில் பல இலட்ச ரூபாய்களை விழுங்கிவிட்டு, உதவாக்கரைத் தீர்மானங்களைப போட்டு, செயல் முறையில் சாதிக்க முடியாதவற்றைப் பேசித்தீர்த்துவிட்டு ஒரு வழியாக ஆவடி ஓய்நதது

புதுமைக் கருத்துக்கள் வளர்ந்து வரும் இந்நாளில், நம்மிடம் புதுச் சரக்குகள் இல்லையே என ஏங்கும் காங்கிரஸ்காரர்களுக்கு **மாதிரி சோஷலிஸம்** தரப்பட்டுள்ளது ஆவடியில். பலன் ஏதாவது உண்டா என எண்ணினுல் ஒன்றுமில்லை. தமிழிலும், ஆங்கிலத்திலும், இந்தியிலுமாக வெட்டவெளி மேடையில் நடைபெற்ற ஒரு கதம்ப நிகழ்ச்சியைச் செல்வரும், எளியோரும் பெருஞ்செலவு செய்து எத்தனை எத்தனையோ மைல்களுக் கப்பாலிருந்தெல்லாம் வந்து பார்வையிட்டுச் சென்றனர். அவ்வளவுதான்!

# செய்தித்திரட்டு

**சீனக் கலைஞர்கள் சென்னையில்!**

சென்னை வந்திருந்த சீனக் கலைஞர்களுக்கு சென்னை தென்னிந்திய நடிசை, நடிகர்களின் சங்கத்தின் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது. சீனக் கலைஞர்கள் தங்கள் கலைத் திறமைகளை தென்னிந்தியர் கண்டு களிக்க பல நிகழ்ச்சிகளை நடத்திக்காண்பித்தனர்.

**டால்மியாபுரம்—கல்லக்குடி**

டால்மியாபுரம் கல்லக்குடியாகக் காட்சியளிக்கா விட்டால் மீண்டும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணு அறிக்கை விடுத்துள்ளார்.

**இந்தயாவின் செல்வம்**

ஆமதாபாத்தில் இருக்கும் ''விகார் கிருகா'' என்ற அனுதைகள் சங்கத்தில் பேசுகையில் ''திக்கற்ற அனுதையாக இருப்பவர்களே இந்தியாவின் செல்வம்; அதனுல் அனுதைகளைப் பாதுகாப்பது நமது கடமை'' என்று நேரு சொன்னுர்.

**வெட்கம்! வெட்கம்!!**

பிரதம மந்திரி நேரு இந்திய விஞ்ஞான மகா நாட்டுக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் ''நம் நாட்டில் தொழில் முதலாளிகள் லாபத்தின் மீதே கண்ணுகயிருப்பது வெட்க படவேண்டிய விஷயம். அவர்களின் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய புதிய யந்திரங்களைக் கட்ட அவர்கள் முற்படவில்லை'' என்று கூறினுர்.

**கேலி செய்வது குற்றமல்ல!**

பம்பாயிலிருந்து வரும் சினிமாப் பத்திரிகையான ''பிலிம் இண்டியா''வில் ராஜ்குமாரி அமிர்த கௌரியையும், பண்டித நேருவையும் கேலி செய்து கார்டூன் போடப்பட்டிருந்ததைக் குறித்து போலீசார் வழக்குப் போட்டனர். ஜனநாயக நாட்டில் அரசியல் தலைவர்களைக் கேலி செய்வதும், தலையங்கத்தில் தாக்குவதும் தவறல்லவென்று நீதிபதி அவ் வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

**நேருவுக்குப் பரிசு**

பாரசிக நிதி மந்திரி தியாஜாபர் தாம் இந்தியாவிற்கு வந்திருக்கையில் மரியாதை செய்ததற்காகத் தனது அன்பின் காணிக்கையாக நேருவுக்கு வைரக் கற்களைப் பரிசாக அளித்தார். அதைப் பொருட்காட்சிச் சாலைக்கு நேரு கொடுத்துவிட்டார்.

**எண்ணெய்த் தொழிற்சாலை**

கடலூர் தாலுகாவில் முந்திரி எண்ணெய்த் தொழிற்சாலை ஒன்று தொடங்கப் பெறுமென்று மந்திரி பக்தவத்சலம் தெரிவித்தார். அதற்காக ரூபாய் ஒரு லட்சம் செலவாகுமென்றும் கூறினுர்.

**பெரியார் வருகை!**

திராவிடக் கழகத் தலைவர் பெரியார் தமது துணைவியாருடன் பர்மா, மலேயா சுற்றுப் பிரயாணங்களை முடித்துக் கொண்டு ஜனவரி 17-ம் தேதியன்று சென்னை வந்தடைந்தார்.

**மந்திரி சம்பளத்தில் மண் விழும்!**

நாங்கள் மந்திரியாக வந்தால் மந்திரிகளுக்கு சம்பளம் ரூபாய் ஐநூறுதானென்றும், தினப்படி, அலவன்ஸ் எதுவும் கொடுக்கப் பட மாட்டாதென்றும் ஆந்திர கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சுந்தரய்யா தனது தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்தார்.

**ரகசியம் எதுவுமில்லை**

"காமராஜருக்கும், எனக்கும் எவ்வித ரகசிய ஒப்பந்தமும் கிடையாது. அப்படி இருந்து வரும் வதந்தி பொய்யானது" என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணு கூறினர்.

**இலங்கை குடியரசாகும்**

இலங்கை 1956-ம் வருஷத்தில் குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப்படு மென்றும், இது பற்றி இலங்கை மந்திரிசபை விரைவிலேயே முடிவு தெரிவிக்கு மென்றும் எதிர் பார்க்கப்படு கிறது.

**வசதி அதிகரிப்பு!**

ரெயில்வே நிலையங்களில் குளிப்பதற்கும், அதற்கான கட்டணத்தைத் தனியாக வசூல் செய்து விடுவதென்றும், இந்த வசதியை எல்லா வகுப்பினருக்கும் பயன்படுத்துமாறு செய்ய வேண்டுமென்றும் ரயில்வே ஆலோசனைக் கமிட்டி யோசனை கூறியுள்ளது.

**அணுசக்தி ரகசியம்!**

உலக மக்களின் நன்மைக்காக அணுசக்தி பற்றிய ரகசியங்களை அதாவது அணுசக்தியிலிருந்து மின்சாரம் எடுக்கும் தொழிற்சாலையை ரஷிய சர்க்கார் அண்மையில் அமைத்துள்ளனர். இம் மாதிரி மின்சாரம் எடுப்பது எப்படி? என்பதை வெளியிடத் தயாராக இருப்பதாக ரஷிய சர்க்கார் அறிவித்துள்ளனர்.

**காங்கிரஸ்காரர்கள் பற்றி.......**

ஏழு வருட காங்கிரஸ் ஆட்சியில் கண்ட பலன் என்ன? பண மூட்டைகளிட மிருந்து காங்கிரஸ் காரர்கள் பணம் வாங்குகிறார்கள். ஏழைகளிடமிருந்து வோட்டை வாங்குகிறார்கள். வேலையில்லாமல் திண்டாடும் மக்களின் எண்ணிக்கையோ ஏழு கோடி. இதைக் கவனிப்பதைத் தாமதிக்கிறது காங்கிரஸ் என்று பி. சோ. பிரமுகர் லோகியோ கூறியுள்ளார்.

**கல்யாணச் செலவு!**

இந்தியாவில் கல்யாணத்துக்காகப் பணத்தை வாரி இறைத்துச் செலவு செய்கிறார்களே என்று இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்த ஜோசப் மகோனல் என்ற அமெரிக்கப் பேராசிரியர் கூறினர். அவர் தனது கல்யாணத்திற்காக 25 ரூபாயும் 8 நிமிட நேரமுமே செலவு செய்தாராம்.

**ஆவடி மாநாட்டில்**
**தமிழும்—இந்தியும்**

வடவர் பலர் தமது இந்தி மொழியில் பேசியதைத் தமிழர்கள் பொறுமையுடனும், அமைதியுடனுமிருந்து கேட்டனர். ஆனல் தமிழர்கள் தமிழில் பேசியதைப் பொறுக்காத வடவர்கள் சலசலப்புடன் வெளியேறினர்.

**20,00,000 கார்கள்**

அமெரிக்காவில் இந்த ஆண்டில் சுமார் 20 லட்சம் கார்கள் உற்பத்தி செய்யப்படுமாம். சென்ற ஆண்டு உற்பத்தியின் விகிதத்தை விட இது அதிகமாகும். சென்ற ஆண்டில் 6,35,000 கார்கள் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்டனவாம்.



# வேதனை

—இரா. இளந்திரையன்—

கீச்சுக்கீச் சென்றது கொம்பில்அணில்—அதைக்
சேட்டுக் குதித்தது மற்றோரணில்;
போச்சுப் போச்சென்றது கொம்பில்அணில்—அது
போட்ட பழத்தைப் பிடித்ததுஆண்;
நீச்ச லடித்தது கொம்பில்அணில்—மரம்
நீட்டிய கொம்பின் இலைகளிலே
ஆச்சுதடி நேரம் ஆச்சுதடி—என
ஆத்திரப்பட்டது மற்ற அணில்
ஓடி மறைந்தது மஞ்சள்வெயில்—இருள்
ஓங்கி வளர்ந்தது ஓர்நொடியில்
பாடிப் பறந்தன வௌவால்கள்—அந்தப்
பாட்டைப் பயின்றது நீர்த்தவளை
மூடிக் கிடந்த முகமலரை—மதி
மோக வெறியில் திறந்திடவும்
ஆடி நடந்தது குள்ளநரி—அதை
அன்பாய்த் தொடர்ந்தது பெட்டைநரி
மாலைமுதல் இந்தக் கோலமெல்லாம்—வள்ளி
வாடும் முகத்துடன் கண்டிருந்தாள்
மாலை நினைவில் அயர்ந்துவிட்டாள்—அவள்
மச்சான் நினைவில் புதைந்துவிட்டாள்
சேலைதிருத்த மறந்துவிட்டாள்—தலை
சீவிமுடிக்க மறந்துவிட்டாள்
ஓலைக் குடிசையில் தூங்கிவிழும்—அந்த
ஓட்டை விளக்கையும் ஏற்றவில்லை!
சாமம் மறைந்தது தூங்கவில்லை—வள்ளி
சாப்பிடும் எண்ணமும் கொள்ளவில்லை
சாமக்கோடங்கியைப் போல்அவன்—வெகு
சாதாரணமாக வந்து நின்றான்!
"காமம் வளர்க்கும் அணிற்பிள்ளையை—அத்தான்
கையோடு நீங்களும் கொண்டுபோங்கள்
நாமும் இருக்கிறோம் மாலைவெயில்—ஒரு
நாளும் இருவராய்க் கண்டதில்லை"
பச்சைக் கிளிகளும் சிட்டுக்களும்—என்னைப்
பார்த்துச் சிரித்தன! என்றவளும்
கொச்சை மொழியிலே விம்மலுற்றாள்—அந்தக்
கூலி வேலைசெய்யும் வேலவனோ,
உச்சி வரையிலும் காதலடி—வள்ளி
ஓடிவர நான் துடிதுடிப்பேன்
வச்சு வேலைவாங்கும் சண்டாளன்—நம்மை
வாழவிடானடி!" என்றழுதான்!

# கண்டதில்லை

—மாணவமணி—



தென்றல்வரும் வெளிக்கதவைத் திறந்துவிட்டால்!
தேமலரின் மணங்கள்வரும் தோட்டம் சென்றால்!
அன்றலரும் மலர்முகத்தாள் வருவாள்! அங்கே
அலரிவரும் வண்டுவரும் அவளின்பின்னே
சென றுவரும் ஊஞ்சலைப்போல என்றன்கண்கள்;
திரும்பிவரும் அவளஇருநத திசையைநோககி
என்றும்அவள உலவிடுவாள எனினும்அநதோ!
ஏறெடுத்தும் பார்த்ததை நான்கணடதில்லை!

வழிநடக்கும் சமயமெல்லாம் விழிநடக்கும்
வகைநடக்கும் அழகிஅவள் வகுப்பில வந்தால்
விழிநடககும் யாவருககும் அவளிடத்தில்;
வேண்டுமென்றே உரைநடககும் அவளைப்பற்றி;
சுழிநடக்கும் வெள்ளத்தில துரும்பைப்போல
சுழன்றுநடக்கும் அவள்பால எனதுநெஞ்சம்;
பொழில்நடக்கும் நிகழ்ச்சிகளும் அறிவாளேனும்
புன்னகை பூத்திட்டதை நான்கணடதில்லை.

மணியடிக்கும் அவள்குரல்போல்; வகுப்பில்வந்தால்
வம்படிககும் மாணவர்க்கு வாயடிக்கும்;
துணிஅடிக்கும் வண்ணானைத் தோற்கடிக்கும்
தோகையவள் எதிர்வந்தால் எநதன்நெஞ்சம்
பணிஅடிக்கப் பொன்உருகும் தட்டார்போன்று
பாய்ச்சிவிட்டாள் தனைஉருக்கி என்உள்ளத்தில்
அணிஅடிக்கோர் முறை அணிவாளேனும்
ஆசையுடன் பார்த்ததை நான்கண்டதில்லை.

குடியிருப்பாள் என்வீட்டின் பக்கல்என்பர்
கூறுவதுபொய் இருக்கும்இடமேவேறு
வடிவிருபபாள் மலர்மகள்போல என்பர் மற்றோர்
வழிஏது? அம்மகட்கு என்னுளத்தில்!
படிப்பதுவும் கலைக்கழகத் தென்பதும்பொய்!
பயிற்றுகிறாள் பலகலையும் என்னுள்நின்று
நடிப்பதவும் அறிவாள் அப்பருவநஙகை
நயனங்கள் சுழன்றதை நான்கண்டதில்லை.

# உலக அரங்கில்

ஜீவகன்

## பார்மோசா போர்க்களமாகுமா?

கொரிய யுத்தம் ஆரம்பித்த சமயத்தில், கோமின்டாங் ஆளுகைக்குள்ளிருந்த போர்மோசா தீவையும் அதனுடன் சேர்ந்த இன்னும் சில தீவுகளையும் மக்கள் சீனம் தன் வசமாக்காமல் தடுக்கும் பொருட்டு, அப்போது அமெரிக்க ஜனதிபதியாக இருந்த ட்ரூமன் தமது 7-வது கப்பற் படையை அனுப்பி அதைத் தடுத்தார். ஆனல் கொரிய யுத்தம் முடிந்த பின்னும் அந்தக் கடற் படை இன்னும் தன் காவல் உத்தியோகத்தை மாற்றிக்கொள்ளவில்லை. இந்த போர்மோசா தீவும் அதனுடன் சேர்ந்த மற்றத் தீவுகளும், சியாங் கே சேக் குள்ளர்கள் ஆண்ட காலத்தில் அவர்கள் வசம் இல்லை. அப்போது அத் தீவுகள் ஜப்பானிய வெறியர்களிடம் இருந்து வந்தது. இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பிறகு இத் தீவுகளை ஜப்பான் நேச நாடுகளிடம் ஒப்படைத்தது. நேச நாடுகள் கெய்ரோவில் கூடி இத் தீவுகளை மறுபடியும் அதன் தாயகமான சீனவுக்குக் கொடுத்துவிடத் தீர்மானித்தன. ஆனல் அதன் பிறகு அமெரிக்கா, தான் நினைத்தபடி சீனவில் தன் ஆதிக்கத்திற்கு இடமில்லாமல் மக்கள் சீனமாக அது மாறிய பிறகு, இதையேனும் தனக்கெனப் பிடித்து வைத்துக் கொண்டு, சீனவை மறுபடியும் கைப்பற்றலாம் எனத் திட்டமிட்டது. அதன் முதற் படிதான் கொரிய யுத்தம். ஆனல், அது அவர்கள் எதிர்பார்த்ததற்கு விரோதமாக, இந்தியாவின் தலையீட்டால் முடிந்து விடவே இப்போது தன் கைப் பொம்மையான சியாங்கை முன்னே வைத்துக்கொண்டு மறுபடியும் உலக அமைதிக்கு உலை வைக்க முயற்சிக்கிறது. மக்கள் சீனம் எப்படியும் போர்மோசாவைத் தன் தாயகத்துடன் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டது. அதன்படி, சில தீவுகளையும் பிடித்துக் கொண்டது. இப்போது போர்மோசாவைக் காப்பாற்றுவது என்னுடைய கடமை அதற்காக, சீனவின் பேரிலும் படையெடுக்கத் தயங்கமாட்டேன் என்னும் பொருள்பட ஜனதிபதி ஐஸனேவர் நேற்று கூறிவிட்டார். ஆக ஓரளவிற்கு உலகத்தில் அமைதி ஏற்பட்டிருந்த சூழ்நிலையை மறுபடியும் குழப்பி எப்படியும் ஒரு யுத்தத்தைக் கொண்டு வர முயற்சி எடுக்கப் படுகின்றன. போர்மோசாவில் கிளம்பி இருக்கும் இப் போர் புகைச்சல், அப்படியே அவிந்து விடுமா, அல்லது மற்ருெரு உலக யுத்தத்திற்குத் தீப்பொறி பற்ற உதவுமா என்பது இன்னும் சில நாட்களில் தெரியும்.

## ஆப்பிரிக்க-ஆசிய மாநாடு

சமீபத்தில்—அதாவது, புது ஆண்டு பிறக்கும் நேரத்தில், கொழும்பு நாடுகளென அழைக்கப்படும் இந்தியா, பர்மா, பாகிஸ்தான், இலங்கை, இந்தோனே

ஷியா ஆகிய நாடுகள் கூடி ஏப்ரல் மாதம் எல்லா ஆப்பிரிக்கா–ஆசிய நாடுகளையும் அழைத்து ஆசிய பொருளாதார, அரசியல் ஒத்துழைப்பு பற்றி பேசுவது என முடிவு செய்தன. இதனல் மேற்கு வல்லரசுகளுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரை ஆசிய நாடுகளை தங்கள் வேட்டைக் காடாகக் கருதி அடக்கி ஆண்டுவந்த மேற்கத்திய வல்லரசுகள், தம்மைக் கலக்காமலே இப்படி ஒரு முயற்சி நடப்பது தங்கள், அரைகுறை ஆதிக்கத்திற்கும் மோசம் வந்துவிட்டதாக நினைக்கின்றன. மற்றொரு விஷயம், இதில் மக்கள் சீனம் கலந்து கொள்வது தான்.

## இரண்டு ஜெர்மனிகள்

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை மேற்கத்திய வல்லரசுகளும் மற்றொரு பகுதியை கீழ் ஜெர்மனியை ரஷ்யாவும் தம் செல்வாக்குக்குள் வைத்திருந்தன. இரண்டையும் இணைக்க எவ்வளவோ முயற்சிகள் நடைபெற்றன. அமெரிக்கா இதை அப்படியே வைத்துக் கொண்டு, பாரிஸ் ஒப்பந்தம் என்று ஒன்றை கொண்டு வந்து பிரான்ஸை அதை ஒப்புக்கொள்ளும்படிச் செய்துவிட்டது. இதன்படி மேற்கு ஜெர்மனி 50 டிவிஷன் கொண்ட படையை மேற்கு நாடுகளுக்குக் கொடுத்து உதவ வேண்டும். பதிலாக இந்த ஜெர்மனியை 'நாடடோ'வில் சேர்த்துக்கொள்கிருர்கள். இப்போது சோவியத் யூனியனும் கீழ் ஜெர்மனியை சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்தி விட்டது. ஆக, ஹிட்லர்கண்ட கனவு, நேர் விரோதமாக மாறிவிட்டது.

## டிட்டோவின் ஆசிய விஜயம்

யுக்கோஸ்லேவியா ஜனதிபதி மார்ஷல் டிட்டோ சமீபததில் இந்தியா, பர்மா ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்து தம் நாட்டிற்குத் திரும்பினர். அரசியல் நிபுணர்களும், உலக போக்கை அளந்து சொல்லுகின்ற பண்டிதர்களும் இதைப்பற்றி இன்னும் ஒருவிதமான அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை. டிட்டோ ஒரு கம்யூனிஸ்ட் இதை அவர் மறைக்கவில்லை. ஆனல் அவர் சோவியத் யூனியன் சொல்வது போல நடப்பவர் அல்ல என்பதினுலும், இவருடைய நாட்டில் தம் சூழ்நிலைக்குத் தகுந்தபடி, கம்யூனிஸக் கொள்கைகளை உபயோகிப்பதினுலும் இவருக்குச் சோவியத் யூனியனை விரும்பாத நாடுகளிலும் நல்ல வரவேற்பு உண்டு. டிட்டோ இங்கு வந்த பிறகு, சீனவிற்கும் தம் நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். நேருவின் சமாதானக் கொள்கையின் மற்றொரு வெற்றி இது.

## பாக்-ஜி ஜி. இந்தியா வருகை

பாகிஸ்தானின் கவர்னர் ஜெனரல் குலாம் முகம்மது இந்தியக் குடியரசு கொண்டாட்டத்திற்கு வந்திருந்தார். இவரோடு கூட இந்தியக் காங்கிரஸின் தலைவர்களில் ஒருவராயிருந்த டாக்டர் கான் சாகிப்பும் வந்திருந்தார். இந்தியா-பாக் நல்லுறவிற்குப் பாதகமாக எவ்வளவு சச்சரவுகள் இருப்பினும் இந்தச் சந்திப்பின் மூலம் அவை தீருவதற்கு ஒரு வழியுண்டாகும் என்று நம்ப இடமிருக்கிறது. *

# இலங்கைத் திருமுகம்

"துரைசாமி"

இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு உயிர் நாடியாகத் திகழும் எட்டு லட்சம் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளான சேம லாப நிதி வருட போனஸ், மாதப் பென்ஷன், சம்பள உயர்வு, தோட்டங்கள் கைமாறும் போது சேவைக்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுத்தல், தொழிற் சங்கத் தகராறுகளை சமரசமாகத் தீர்த்தல், 1949-ம் வருடம் விடுத்த கோரிக்கைகளை பரிசீலனை செய்தல் போன்ற ஏழு அம்சக் கோரிக்கைகளை தோட்டத் தொழிலாளரின் ஏக பிரதிநிதித்துவ ஸ்தாபனமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட முதலாளிகளிடம் சமர்ப்பித்தது.

இந்த ஏழு அம்சக் கோரிக்கைகளையும் ஏற்று இரண்டு வார காலத்துக்குள் திருப்திகரமான பதிலை கொடுக்காவிட்டால் இலங்கை எங்குமுள்ள நான்கு லட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு மாபெரும் போராட்டத்தை நடத்துவார்கள் என்று இறுதி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

தொழிலாளரின் மிகக் குறைந்த கோரிக்கைகளைக் கூட முதலாளிகள் ஏற்க மறுத்து அடம் பிடித்து வந்ததால் இலங்கையை மிகப் பெரிய கண்டம் ஒன்று எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாக சகலராலும் அஞ்சப்பட்டது.

தொழிலாளப் பெரு மக்களின் குமுறல் கும்பகர்ண நித்திரையிலிருந்த இலங்கை அரசாங்கத்தை விழித்துப் பார்க்கச் செய்தது. தொழிலாளரின் ஏழு அம்சக் கோரிக்கைகளும் பிரதமர் சர் ஜோன் கொத்தலாவலையின் மத்தியஸ்தத்துடன் முதலாளிகளினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

19—1—55-ல் கொழும்பில் கூடிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இந்த ஏழு அம்சக் கோரிக்கையின் தன்மை பற்றிய விவாதம் இடம் பெற்றது. 20—1—55ல் தொழில் மந்திரி கூட்டிய ஒரு விசேஷ மகா நாட்டில் தொழிலாளர் பிரதிநிதிகளும் சந்தித்து ஏழு அம்சக் கோரிக்கைகள் பற்றிய பூர்வாங்க பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தனர். முதலாளி-தொழிலாளி பிரதிநிதிகளால் ஒத்துப் போக முடியாத பிரச்னைகளை மத்தியஸ்தர் தீர்ப்புக்கு விடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

[ கதையமைப்பையோ, கற்பனைக் கருத்துக்களையோ, சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் தம்இசைவுபெறல்வேண்டும் ]




## காட்சி 31

[மாதவி மேன்மாட நிலா முற்றத்தில் நின்று மனப் போராட்டத்தால் புலம்புகின்றாள்]

மனம்: ஆம்! நான் நடித்தேன்! வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டேன். சோலை வனத்தைப் பாலைவனமாக்கிச் சுகம் இழந்தேன். சோகம் அடைந்தேன்!

மாதவி: ஆம்!

மனம்! கடற்கரையிலே காதலியின் பிரிவு தாளாது வருந்தும் காதலனாகக் காட்சியளித்தீர்! பெண்கள் பெரும் பேதையர் என்பரே! அதற்கு நானென்ன புறம்பானவளா? உள்ளங் கவர்ந்த காதலன் வேறொருத்திபால் மனம் வைத்தான் என்றால், எந்தப் பெண் உள்ளம் தான் பொறுத்துக்கொண்டிருக்கும்?

மாதவி: என் உள்ளமும் அப்படித்தான் ஆனது .... .... ...

மனம்: காதலன் காதலியை நினைந்து பாடும் கானல் வரியைக் கேட்டதும் என் உள்ளமும் கடுகடுத்தது. காதலனை நினைந்து கானல்வரி பாடுவதாக நடித்தேன்! நடிப்பை நடத்தை என எண்ணினீர்! அகம் அணைத்த கைவாங்கி அகன்றீர்! மானம் கெட்டவளே! என்று ஈனமொழி பேசி ஏசினீர்!

மாதவி: ஏசினால் என்ன? கொண்ட கணவன் பேசினால் என்ன?

மனம் : பிறர் நெஞ்சு புகாத பெருங் கற்புடையரன்றோ தமிழ் நாட்டுப் பெண்டிர்! பேதமையால் பிழைபுரிந்து விட்டேன். பிழை பட நடித்துவிட்டேன். மன்னித்தல் மாண்புடையோர் கடனன்றோ! மன்னிக்கமாட்டீர்களா? ஐயோ! ... .... மன்னிக்கமாட்டீர்களா?

மாதவி : குற்றத்தை மறக்கமாட்டீர்களா? குணத்தை ஏற்க மாட்டீர்களா?

மனம் : விலைமகள் என்று கூறித் தொலையிலே சென்றுவிட்டீர்களா? கணிகையர் குடிப்பிறந்து கணிகையாய் வாழ்ந்தது என் குற்றமா? கணிகையர் தொழில் மாசுடையதா; என் மாணிக்கமே! மாசுடையதென்றால் இந்த மாதவியைத் தாங்கள் விரும்பியதேன்? ஆட்டத்தைப் போற்றும் நீர் ஆடும் பெண்டிரைத் தூற்றுவது அழகாகுமோ? அண்ணலே! பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்று வள்ளுவப் பெருமகன் வழிகாட்டிச் சென்றானே! அதைக்கூடவா மறந்தீர்கள். பெருந்தமிழர் பெருங்குடியில் தோன்றியவராயிற்றே தாங்கள்.

மாதவி : ஐயோ..........!

மனம் : அன்பே! என்றீர்; அமுதே! என்றீர்; இன்பக்கனிய முதே! என்றீர்; அவற்றை யெல்லாம் ஏன் மறந்தீர்கள்? நீங்கள் மறந்தால் நான் வாழ்வதெங்கே? உயிரை மறந்து உடல் உலாவியதுண்டா? விண்ணை மறந்து வெண்ணிலா திரிந்ததுண்டா? மணமில்லா மலர், மழை பெய்யா மேகம் குணமில்லா நட்பு கொள்கையில்லா நெஞ்சம் போற்றப்பட்டதுண்டா? என் புரவலனே போற்றப்பட்டதுண்டா?

மாதவி : ஐயோ! .... .... (மயங்கி வீழ்தல்)

## காட்சி 32

[தெள்ளுநீர்க் கங்கைத் தென்கரையின்கண் செங்குட்டுவன், மாடலன், வில்லவன்கோதை முதலியோர் வீற்றிருக்கின்றனர்]

மாடலன் : என்று அழுதாள்! அலறினாள்! பொங்கியழுதாள்! புலம்பினாள்! கதறினாள்! கண்ணீர் வடித்தாள்! மனம் உடைந்தாள்! மடல் விடுத்தாள்! ஆனால் கோவலனோ மாதவியின் மடலுக்கு மதிப்பளித்தானில்லை. மனைவியுடன் மதுரை சென்றான். காற்சிலம்பைத் திருடிய கள்வன் என்று காவலனால் கொலை செய்யப்பட்டான் ... .... .... கணவனை இழந்த கண்ணகி ... .... ....

செங்குட்டுவன் : ஆம்! ஆம்! கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனார் கூறக் கேட்டோம்.

மாடலன் : கானற்பாணி கனகவிசயர்தம் முடித்தலை நெறித்தது

செங்குட்டுவன் : மகிழ்ச்சி மாடல நகைத்திறம் கேட்டு நாமும் மகிழ்ந்தோம். (அமைச்சரை நோக்கி) அமைச்சரே ஐம்பது துலாம் பொன்னை மாடலற்குப் பரிசாக அளியும். (மாடலனைப் பார்த்து) மாடல! மகிழ்ச்சி தானே!

மாடலன் : மன்னவர் இருக்கும்வரை இந்த மாடலனுக்குமகிழ்ச்சிக்கு என்ன குறை? மறையவர் வழித் தோன்றல்களுக்குத்தான் என்ன குறை? மறையவர் குறை போக்கி நிற்கும் மன்னர் மன்ன! நீவிர் வாழ்க!

செங்குட்டுவன் : (விண்மதியை நோக்கி) விண்மதியின் வெண்பிறை நம்மை யெல்லாம் பார்த்துப் புன்னதை புரிகின்றதோ?

கணி : ஆம் வேந்தே! வெற்றிப் புன்னகை புரிகின்றது வெண்பிறை. வஞ்சி நீங்கி எண்ணான்கு திங்கள் வடவர் நாட்டிலே குடவர் கோன் சூடிய வாகைப் பூவைப் பார்த்துப் புன்னகை பூக்காமல் வேறென்னதான் செய்யும்? வாழ்க வேந்தே வாழ்க!

செங்குட்டுவன் : ஓகோ நாம் வஞ்சி நீங்கி எண்ணான்கு திங்கள் கழிந்தனவோ! முப்பததிரண்டு திங்கள் முப்பத்திரண்டு நாழிகையாகக் கழிந்தன. வாகையேற்ற படைஞர் வஞ்சி நோக்கிப் புறப்படட்டும்! போரேற்ற தோள்கள் மாதர் தம் புன்னகையிலே பூரிக்கட்டும்! நாளை நாம் புறப்படுவோம்.

வில்லவன் : பிறந்த நாட்டை நோக்கிப் பெரு மகிழ்ச்சியோடு...

செங்குட்டுவன் : புறப்படுவர் .... பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவன்றோ! வெற்றிப் புன்னகையிலே நமது வீரர்கள் ... ... ...

மாடலன் : மன்னர் மன்ன! அடியேன் இன்று இரவே புறப்படுகின்றேன்.

செங்குட்டுவன் : நல்லது .......... மறு முறை.........

மாடலன் : விரைவில் சந்திப்பேன் வேந்தே! சேவை புரியக் காத்திருப்பவன் தேவையானபோது தேடி வராமலா போவான்? தேடிவருவேன் வேந்தே! தேடிவருவேன்! வாழ்க நினது செங்கோல்!

வில்லவன் கோதை : (வெளியே வந்து) மாடலற்கு முன்னேற்பாடுகள் ஏதாவது ..........

மாடலன் : ஆம்? செய்யவேண்டும்! வேந்தர் பரம்பரை வெற்றியோடு திரும்பும்போது வேதியர் பரம்பரை வரவேற்பளிக்க வேண்டாமா? (மாடலன் செல்ல மகிழ்வூட்டி வருகின்றார்)

வில்லவன் : (சிரிப்பு) முன்னேற்பாடுகள் செய்ய முனிவர் புறப் பட்டுவிட்டார் .... முடிவு என்னவாகுமோ?

மகிழ்வூட்டி : ஏதாவது ஆகத்தானே வேண்டும்!

வில்லவன் : எடுப்பது பிச்சை; என்றாலும் அதை ஏற்கும்முறை யிருக்கின்றதே .........

மகிழ்வூட்டி : நம்மினத்தாருக்குத்தான் அது தெரிவதும் இல்லை புரிவதும் இல்லை .........

வில்லவன் : அது தெரியவும் வேண்டாம்; புரியவும் வேண்டாம் பரதேசிக் கூட்டத்திற்குப் பரம்பரைப் பழக்கம் ...... நமக்கேன் அந்த நாடோடிப் பழக்கம்?

மகிழ்வூட்டி : அப்படித்தான் நானும் நினைத்தேன் ... இது வரை யிலும் ... ஆனால் இப்போது .........

வில்லவன் : நாடாளும் கூட்டத்தை கையாண்டி செய்து நாடோ டிக் கூட்டம் நாட்டை ஆளப்பார்க்கின்றதே என்கின்றீரா? அது வில்லவன் கோதை உயிரோடிருக்கும் வரை .........

மகிழ்வூட்டி : பைத்தியக்காரர்கள் அல்ல அவர்கள்! ஆட்சிப் பீடம் ஏறி அவதியுறுவதற்கு. அரசனைக் கைப்பாவையாக்கி ஆட் டும் கயிற்றைத் தான் கைப்பற்றுவர். "ஆட்டுவித்தால் ஆடாதார் யார்" என்ற நிலையில் இந்த நாடு அவதியுறும் .... அதற்கெல்லாம் அவர்கள் கையாளும் ஆயுதம் ......... சூழ்ச்சி...! சூழ்ச்சி!

## காட்சி 33

[சாலை வழியில் மாடலன் பைரவன் ஆசான் இவர்கள் சூழ்தல்]

மாடலன் : சூழ்ச்சி! சூழ்ச்சி! என்று சொல்லத் தொடங்கி விட்டது.

பைரவன் : புல்லர் கூட்டம்!

ஆசான் : மாடல! மன்னர் வஞ்சி புகுந்துவிட்டார்! கனகவிசயர் தமைச் சோழ பாண்டியற்குக் காட்டிவரச் சென்ற கஞ்சுக மாக்க ளும் வந்துவிட்டனர். சேர நாடெங்கும் வெற்றிப் பறை! செந் தமிழ் நாடெங்கும் வெற்றி முழக்கம். ஆரியர்கள் இந்நாட்டின் அவ மானச் சின்னங்கள் ஆக்கப்பட்டனர். கல் சுமந்தனர் ... கைவிலங் கேற்றனர் ... கடுஞ் சிறையில் கண்ணீர் சிந்தப் போகின்றனர் ... இவற்றை எல்லாம் கண்டும் கேட்டும் கவலையின்றி வாழ்கின்றோம் நாம்"

(தொடரும்)

கலை உலகம்



'காவேரி'யில்
லலிதா

பொன்னி
பிப்ரவரி-1955.

# வளரும் படங்கள்

## சதாரம்

'மேனகா'வை உருவாக்கிய கஸ்தூரி பிலிம்ஸார். அடுத்ததாக 'சதார'த்தைப் படமாக்க முனைந்திருக்கிறார்கள். இதில் முக்கிய பாகமேற்று நடிக்க, கே. ஆர். ராமசாமி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறார். புலவர் ஏ. கே. வேலன் இதற்குரிய வசனத்தை எழுதுகிறார். இப்படத் தயாரிப்பாளரான வி. சி. சுப்பராமனே டைரக்ட் செய்வார். 'சதாரம்' தமிழ்ப் படவுலகுக்குப் புதியது அல்ல. இதற்கு முன் இரண்டு 'சதாரங்கள்' வெளிவந்திருக்கின்றன.

## ராஜேந்திரன்

நடிகர் மகாலிங்கம் சுகுமார் புரொடக்ஷன்ஸுக்காக 'ராஜேந்திர'னைப் படமாக எடுக்க ஏற்பாடு செய்து வருகிறார். பிரபல நாவலாசிரியரான ஜே. ஆர். ரெங்கராஜு எழுதியுள்ள துப்பறியும் கதைகளில் இது ஒன்றுதான் படமாக்கப் படவில்லை! இப்படத்தில் டி. ஆர் மகாலிங்கம் முக்கிய பாத்திரமேற்று நடிப்பதுடன், சாவித்திரி, சாரங்கபாணி, தங்கவேலு முதலியவர்களும் நடிக்கப் போகிறார்கள். சியாமளா ஸ்டுடியோவில் வளரப்போகும் இப்படத்தை ஒப். வி. ராவ் டைரக்ட் செய்யப் போகிறார். இதற்குரிய வசனத்தை மா. வரம் ராஜகோபால் என்பவர் எழுதப் போகிறாராம்!

## அனார்கலி

அஞ்சலி தேவிக்குச் சொந்தமான அஞ்சலி பிக்சர்ஸின் இருமொழிப் படங்களான 'அனார்கலி' பெரும்பாலும் உருவாகி விட்டது. சுறுசுறுப்புடன், நெப்ட்யூன் ஸ்டுடியோவில் 'சுடப்பட்டுவரும்' இப்படத்தில் அஞ்சலி, ஏ. நாகேசுவரராவ், கண்ணாம்பா, நாகையா, ரங்காராவ், முதலியவர்கள் திறமையுடன் நடித்து வருகிறார்கள். சில நாட்களுக்கு முன்னால் அஞ்சலியின் அற்புத நடனக் காட்சி ஒன்றைப் படமாக்கினார்கள். வேதாந்தம் ராகவையா டைரக்ட்செய்து வருகிறார்.



## மகேசுவரி

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் 'மகேசுவரி'யை எடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். 'தேவி சௌதுராணி' என்னும் வங்க நாவலின் தழுவலான இக்கதைக்குரிய வசனத்தை 'ஸ்ரீதர்' எழுத இப்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு, நடிகர் ஏ. பி. நாகராஜன், டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி இவர்களுடைய பெயர்களெல்லாம் அடிபட்டதுண்டு. இப்படத்திற்குரிய நடிகர்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு விட்டனர்.

## நம் குழந்தை

வின்சர் புரொடக்ஷன்சின் 'நம் குழந்தை' பெரும்பாலும் முடிவடைந்து வெளிவருவதற்குரிய நன்னாளைத் தேர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. படத்தில் எஸ். வரலட்சுமி, ஏ. பி. நாகராஜன், மனோகர், டி. பாலசுப்ரமண்யம், கிருஷ்ணன் – மதுரம் நடித்து வருகிறார்கள். கே. எஸ். கோபால கிருஷ்ணன் படத்துக்குரிய டைரக்டராக அமர்ந்திருக்கிறார். இது ஒரு குடும்ப சம்பந்தப்பட்ட சுவை மிகுந்த கதை என்றும், பெண்களுக்குப் பிடிக்கும் என்றும் பேசிக்கொள்ளுகிறார்கள். அதற்குரிய வசனத்தையும், பாடல்களையும் தஞ்சை ராமையாதாஸ் எழுதியிருக்கிறார் இது இம்மாத இறுதியில் வெளியாகலாம்.

## குடும்ப விளக்கு

நாகூர்சினி புரொடக்ஷன்சின் மூன்று மொழிப் படமான 'குடும்ப விளக்கு' வெகு சீக்கிரம் வெளிவரும் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. இதில் எம். வி. ராஜம்மா, ஜமுனா, நரசிம்ம பாரதி, டி. எஸ் துரைராஜ் நடித்து வருகிறார்கள். படப்பிடிப்பு நியூடோனில் நடக்கிறது. நாகூரே இதன் டைரக்டர். வசனத்தை யாரோ எழுதி வருகிறார்கள். சுரதா பாடல்களை எழுதித் தந்திருக்கிறார்.

## செல்லப்பிள்ளை

ஏவி. எம். அவர்களுடைய நீண்டகால முயற்சியான "செல்லப்பிள்ளை"யைச் சிறுடனும், சிறப்புடனும் கொண்டுவர முனைந்திருக்கிறார்கள். கதை அமைப்பை அடியோடு மாற்றியமைத்து, அதற்குரிய வசனத்தை 'ஜாவர்' சீதாராமன் எழுதி இருக்கிறார். எம். வி. ராமன் டைரக்ஷனில் வளரும் இப்படத்தில் சாவித்திரி, கண்ணாம்பா, பந்துலு, கே. ஆர். ராமசாமி, பாலையா, தங்கவேலு ஆகியோர் நடித்து வருகிறார்கள். ஏவி. எம்மின் அடுத்த வெளியீடு இதுவேயாகும்.

அத்துடன் இந்தியில் எடுக்கப் போகும் படம் ஒன்றுக்கு வடக்கே இருந்து நிம்மி, நிருபாராய், மீனாஷோரி, கிஷோர்குமார் இம்மாதக் கடைசியில் வரப் போகிறார்கள்,

## முன்னும் பின்னும்

நாதன் பிலிம்ஸ், 'தோட்டக்கார' விசுவநாதன் எழுதி நாடகமாக நடிக்கப்பட்ட 'முன்னும் பின்னும்' என்ற மேடைக் கதையைப் படமாக்கப் போகிறார்கள். ஜெகன்னாதன் டைரக்ஷனில் உருவாகப் போகும் இப்படத்தில் மனோகர், டி. பாலசுப்ரமண்யம், வி. எஸ். ராகவன், மாலி முதலியவர்கள் நடிக்கப்போகிறார்கள். ✱

# நம் கருத்து

சரவணபவா-யூனிட்டியின்

## 'எதிர்பாராதது'

கதை-வசனம்: ஸ்ரீதர்
டைரக்ஷன்: ஸி. எச். நாராயணமூர்த்தி
நடிகர்கள்:
**சிவாஜி கணேசன், பத்மினி, நாகையா மற்றும் பலர்**

**கதை:** சுந்தர் என்ற காலேஜ் மாணவன் சுமதியைக் காதலிக்கிறான். இருவரும் மனம் ஒத்து மணம் செய்து கொள்ளத் துடிக்கிறார்கள். அதற்கு நடுவே சுந்தருக்கு அமெரிக்கா சென்று மேற் படிப்புப் படிக்கும் வாய்ப்புக் குறுக்கிடவே, திரும்பி வந்து திருமணம் செய்துகொள்வதாக வாக்களித்துவிட்டுப் போகிறான். ஆனால் அவனை ஏற்றிச் சென்ற விமானம் விபத்துக்காளாகி நொறுங்கி விட்டதாகச் செய்தி கிடைக்கவே, சுமதியின் வாழ்க்கைத் திருப்பம் வேறு விதமாகி விடுகிறது. தன் சகோதரன் கடன் சுமையிலிருந்து விடுபட, சுமதி, சுந்தரின் தந்தை தயாபரரை வலுவில் மணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறாள்.

ஆனால் முதலிரவிலேயே, தான் மணந்து கொண்ட பெண், தன் மகனின் காதலி என்ற பயங்கர உண்மையை தயாபரர் தெரிந்து கொண்டு மனமுடைந்து போகிறார், விமான விபத்துக்காளான சுந்தர் இறந்துவிடாமல் கண்களை மட்டும் இழந்து திரும்பி வருகிறான். தன் குருட்டு மகனின் நெஞ்சில் சுமதி இடம் பெற்றிருப்பதை அறிகிறார் தயாபரர். தன்னால் வஞ்சிக்கப்பட்ட சுமதிக்கு தன் மகன் மூலம் புனர் வாழ்வு அளிக்கப் பாடுபடுகிறார்.

ஆனால் சுமதியின் பெண்மை வேறு விதமாக மாறிவிடுகிறது. அதிலே தாயுணர்ச்சி மலர்ந்து, சுந்தருக்கு அன்னை அன்பை அளிக்கிறாள். —இதுவே 'எதிர் பாராதது.'

முடிவிலே 'எதிர் பாராதது' இருந்தபோதிலும் ஓர் புதிய சீர் திருத்தக் கருத்தோ, துணிவான நெஞ்சுறுதியோ புகுத்தப்படவில்லை. தன் காதலன் சுந்தரின் மீது சுமதிக்கு உண்மையான காதல் இருக்குமானால், தன் வாழ்நாள் முழுதும் அவனுக்காகக் காத்திருக்க வேண்டுமே தவிர, திடீரென்று 'பணத்துக்காக' வயதான மனிதரை மணந்து கொண்டு விட்டதாகக் கதையைக் கொண்டு போயிருப்பது அசம்பாவிதமாக இருக்கிறது! 'பண்பாடு' என்ற பெயரால், ஒரு யுவதியின் வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக்கியிருக்கும் ஸ்ரீதரின் பேனாவின் ஒடுக்கம், காலத்தின் விழிப்புக்குத் தக்க வழி காட்டவில்லை.

வசனம்: 'பரவாயில்லை' என்ற ரகத்தில் அமைந்துள்ளது. 'கற்புக்கரசி கண்ணகி பிறந்த நாட்டிலே' என்று எழுதிவிட்டால் படம் பார்ப்பவர்கள் கை தட்டும் காலம் மலையேறி விட்டது என்பதை அவர் தெரிந்து கொள்ளவில்லை.

நடிப்பு: சிவாஜி கணேசன், பத்மினி, நாகையா மூவரும் நல்ல முறையில் உணர்ந்து நடித்திருக்கிறார்கள். கொட்டுகிற மழையில் சொட்டச் சொட்டத் தன் காதலியை நாடி வந்து, தன் உள்ளத்தைத் திறந்து காட்டிப் பேசும் இடம் ஒன்றில் 'சிவாஜி' சிறப்புடன் நடித்திருக்கிறார்.

பாடல்கள்: பன்னிரெண்டு இருக்கின்றன. "சிற்பி செதுக்காத பொற்சிலையே" என்ற கே. பி. காமாட்சியின் பாடல் ஒன்றின் கருத்து சிறப்புடன் அமையாவிட்டாலும் பாடும் விதமும், மெட்டும் நன்றாக இருக்கின்றன. மற்றவை மட்டம்.

டைரக்ஷன்: ஸி. எச். நாராயணமூர்த்தி, தன்னுடைய டைரக்ஷன் திறமையை அதிசயமாகக் காட்டாவிட்டாலும் படம் விறுவிறுப்புடன் ஓட 'எடிட்டிங்' நன்கு செய்திருக்கிறார். சில காட்சிகளும், சம்பவங்களும் மனதிலே நின்று நிலவும்படி செய்திருக்கிறார். இந்தச் சிலவற்றிற்காக அவரைப் பாராட்டலாம்.

ஒளி, ஒலிப்பதிவுகள் பரவாயில்லை. நடிகர்களது சிறந்த நடிப்பினால் இப்படம் பார்க்கும்படி அமைந்திருக்கிறது. கதையிலே சுமதியைக் கொண்டு துணிவாக ஒரு சீர்திருத்தம்—அதாவது சுந்தர்–சுமதியைத் தம்பதிகளாகப் பிணைத்திருந்தால் ஒன்றும் குடிமுழுகிப் போகாது! ஏனென்றால் படம் பார்ப்பவர்களது நெஞ்சிலே, அப்படிப்பட்ட சீர்திருத்த நினைவு எழுகிறது.

"பாவம்! சுமதி? சுந்தரை அவள் மீண்டும் மணந்துகொண்டால் என்ன?" என்று எத்தனையோ குடும்பப் பெண்கள் அங்கலாய்த்துக் கொண்டே போனதை நான் காதாரக் கேட்டேன்.

'கேயம்'



எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் 'மாங்கல்யம்' மூலம் நேயர்களின் புகழைப் பெற்ற

**ராஜ சுலோசனா**

'நல்லதங்கை' 'பெண்ணரசி' இவைகளில் அந்த நிரந்தரப்படுத்தி விடுவாரெனத் தெரிகிறது.

# அடடா! அப்படியா?

★

எடுத்த படங்களையேத் திரும்ப எடுக்கும் மோகம் தற்போது தமிழ்ப்பட உலகில் மிதமிஞ்சிப் போய்விட்டது. அந்தப் 'புண்ணிய'த்தைத் துணிந்து முதன் முதலாக அருணா பிலிம்ஸார் கட்டிக் கொண்டார்கள்! அவர்களுடைய 'தூக்கு தூக்கி' பிறகு எண்ணிக் கொள்ளுங்கள்: மேனகா, சந்திரகாந்தா, குலேபகாவலி, ராமதாஸ், விப்ர நாராயணா, சதாரம்!—வரையில் வந்து நிற்கிறது! இந்த வேகத்தைப் பார்த்துவிட்டு ஜெமினி வாசனும் தம்முடைய "நந்தனார்", ஔவையார்—முதலிய படங்களை மீண்டும் படமாக்க எண்ணுவாரோ என்னமோ!

அப்படி ஒரு நினைவு அவரிடையே பிறந்து வளருமானால் 'நந்தனாரில்' பழைய நந்தனாராக நடித்த தண்டபாணி தேசிகர் நடிப்பது சந்தேகம்தான்! ஆனால் கே. பி. சுந்தராம்பாளை விட்டால் 'ஔவை'யாக நடிக்க யாரிருக்கிறார்கள்? இனிமேல் தெரிய வேண்டும்!

* * *

தென்னாட்டில் உள்ளவர்கள் வடக்கே சென்று தமிழ்ப் படங்களை எடுத்து வந்த காலம் ஒன்றுண்டு. இப்போது என்னவென்றால் நம்மவர்கள் இங்கேயே இந்திப் படங்கள் எடுக்கத் துவங்கிவிட்டார்கள். வடக்கே இருந்து நட்சத்திர ஒளி சென்னை கோவை முதலிய இடங்களுக்கு வீசவாரம்பித்து விட்டது! இனி தொடர்ந்து சென்னையிலேயே அவர்கள் முகாமிட்டு விடுவார்களோ, 'வடக்கத்திய வாசனை' மிதமிஞ்சிவிடுமோ என்று அஞ்சும்படி இருக்கிறது!

அதுமட்டுமல்ல; மீனா குமாரி என்ற வட நாட்டு நடிகையின் கணவரான கமல் அம்ரோகி, "கோவை பட்சிராஜா ஸ்டுடியோவை எனக்கு மிகவும் பிடிக்கிறது! இங்கேயே வந்து நானும் சொந்தப் படங்களை எடுக்கப் போகிறேன்!" என்று சொல்லுகிற அளவுக்கு 'நம்பலூர் ஆசை' அவர்களைக் கவ்வி விட்டது!

இந்த பரபரப்புக்கு நடுவே பத்மினிக்கு நமது ஊரில் பல படப்பிடிப்புக்கள் இருப்பதை முன்னிட்டு, அவர் நடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "அப்சாரா" என்னும் இந்திப் படத்துக் காட்சிகளைச் சென்னையிலேயே எடுத்து விட பம்பாய் பட முதலாளி தீர்மானித்திருக்கிறார் என்று ஒரு செய்தி கூறுகிறது! இந்த வடநாட்டுப் படையெடுப்பு எதில் போய் நிற்குமோ? எது எப்படிப் போனாலும் நமது இட்டிலி–மிளகாய்ப் பொடிக்கு அவர்களினால் திடீர்க் கிராக்கி ஏற்பட்டுவிடக் கூடாது!

* * *

"சென்னைக்கு வந்திருந்த சீனக் கலைவாணர்கள் பற்பல நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்

கொண்டு பேரானந்த மடைந்து திரும்பிப் போனார்களல்லவா? அவர்களை மிகவும் பிரமிக்க வைத்து விட்டது, நம்ம ஊர் வாத்தியமான 'கடம்' ஒரு பானையிலிருந்து எப்படி விதம் விதமாகச் சத்தம் எழும்புகிறது என்று அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். அவர்களில் சிலர், அந்தப் பானைக்குள் கையை விட்டுப் பார்த்தார்கள்! கூர்ந்து கவனித்தார்கள்! சீனாவிலுள்ள 'மண்' உலகப் பிரசித்திப் பெற்றது; அதிலிருந்து எத்தனையோ நாதனப் பானைகளைச் சிருஷ்டித்து உலகமெங்கும் அனுப்புகிறார்கள். அப்படிப்பட்டவர்களை நமது ஊர் 'கடம்' வியப்படைய வைத்தது, வியப்பிலும் வியப்பேயாகும்!

* * *

எந்த ஒரு புதுப் படத்துக்காவது துவக்க விழா என்று நடந்தால் அப்படத்துக்குரிய கதையின் பெயரைப் பகிரங்கமாக இங்கே அறிவிப்பது இல்லை. 'ப…த்துக்குச் [illegible] 'பர்–1' என்று [illegible] பெயர் [illegible] கதை எந்த ஒரு இந்தி வங்காளி, மராத்திப் படத்தின் தழுவலாகவே இருக்கும். சொந்தச் சரக்குக்கு விசேட மதிப்புத் தர இன்னும் நமது படவுலகில் யாரும் சரிவர முன்வரவில்லை. நம்மிடையே சொந்தமாகச் சினிமாவுக்குக் கதை தருபவர்கள் இல்லை என்ற அசட்டு எண்ணம் என்று தொலையும் என்று கேட்கிறேன். வடக்கே இருந்து வருகிற எந்தப் படத்துக் கதையையாவது முழு உரிமை பெற்று இங்கே தமிழ்ப் படங்களை எடுத்துக் கொண்டிருக்கிற வரையில் முன்னேற்றம் என்ற வார்த்தைக்கு இந்த 1955-ம் ஆண்டில்கூட இடமிருக்காதுபோல இருக்கிறதே! *

## யார் தெரியுமா?

1. கிரிக்கெட் என்றால், "ஐயோ! நான் போகமாட்டேன்" என்று அலறுகிற நடிகர் யார் தெரியுமா?

2. நமது பிரபல நடிகை ஒருவருக்கு "பாப்பா" என்ற செல்லப் பெயர் வீட்டில் உண்டு. அவர் யார் தெரியுமா?

3. ஆண் நடிகர் ஒருவர் வீட்டில் டெலிபோன் இருக்கிறது. ஆனால் அது பணம் கட்டாமல் 'டிஸ்கனெக்ட்'டில் இருக்கிறது. அந்த நடிகர் யார் தெரியுமா?

4. பின்னணிப் பாடகர்களில் 'எம். ஏ.' பட்டம் பெற்றவர் யார் என்று தெரியுமா?

5. இன்று பல படங்களில் நிகரற்ற கதாநாயகனாக விளங்கி வருகிற ஒரு பிரபல நடிகர், சில வருஷங்களுக்கு முன்னால் டி. கே. எஸ். நாடக சபையில் பெண் வேஷம் தரித்தவர். அவர் யார் தெரியுமா?

விடை: அடுத்த இதழில்

படவுலகில்

# பறக்கும் தட்டு

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வரையில் வந்து, கீழே இறங்காமல் ஏமாற்றி விட்டுப் போய் விட்டாரல்லவா, ஆவா கார்டனர் என்னும் ஹாலிவுட் நடிகை? அதை மனதிற் கொண்டு ராகினி ஹாலிவுட்டுக்குச் சென்று அவரைப் பார்க்காமல் திரும்பி வரத் தீர்மானித்திருக்கிறார்!

* * *



ஆவா கார்டனர்

தனனுடைய "கடவுள்" என்ற படத்தில் நடிக்க எம்.ஆர். ராதாவை கண்டசாலா அழைத்திருக்கிறார்.

* * *

ஜெமினி வாசன் இராமாயணத்தை வர்ணப் படமாக எடுக்க முன் வந்தால் அதற்குரிய வசனத்தை எழுதித் தர 'கோடையிடி' மகாலிங்கய்யர் தயாராக இருப்பதாகத் திருச்சிச் செய்தி ஒன்று கூறுகிறது.

* * *

கோடம்பாக்கம் 'இரயில்வே கேட்'டுக்கு மேலே ஒரு மேம்பாலம் போடத் தீர்மானித்து விட்டதாகவும், இரயில்வே தண்டவாளத்துக்குக் கீழே பாதாள ரஸ்தா ஒன்று போட்டு, அதைச் சினிமா நட்சத்திரங்களுக்கு ஒதுக்கிவிடப் போவதாகவும் சமீபத்தில் சென்னைக்கு வந்த இரயில்வே உதவி மந்திரி திரு. அளகேசன் ஒரு பேட்டிக்குப் பதில் அளித்திருக்கிறார்.

* * *

திருமதி விஜயலட்சுமி பண்டிட்டை, தங்களுடைய 'சினிமாஸ்கோப்' படமொன்றில் நடிக்க இஷ்டமா என்று 20-வது நூற்றுண்டு நரிக் கம்பெனியார் எழுதிக் கேட்டிருக்கிறார்கள்.

* * *

சமீபத்தில் கொச்சிக்கு வந்திருந்த திலீப் குமார், அங்குள்ள பல 'மலையாள' அணங்குகளைப் பார்த்துவிட்டு, இனிமேல் எர்ணுகுளத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிடத் தீர்மானித்து விட்டார்!




'நரா'

# 3

## செல்வம்

அன்று என் நண்பன் ஒரு சிறு கதை சொன்னான். அது வெறுங்கதையா என்பது எனக்குச் சந்தேகம்தான். அதுமாதிரி எத்தனையோ இடத்தில் நடந்திருக்கும் என்பதே எனக்குப் பட்டது. எத்தனையோ இடம் என்ன, இன்று நானே அதில் மாட்டிக் கொண்டேனே!

ஏதோ காரியமாக ஒருவன் வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தானும். அவனைப் பொறுத்த வரையில் அவன் நல்லவன்தான். ஆனால் உலகத்தின் போக்கிற்கும் நல்லவர்களின் போக்கிற்கும் தான் என்றும் வேறுபாடாயிற்றே! அவனுக்கு எதிரே ஒரு புதுமணத் தம்பதிகள் வந்துகொண்டிருந்தார்களாம். பாவம், அவன் படிக்காத முட்டாளோ என்னவோ? பாருங்கள், ஒருவனுக்கு சந்தர்ப்பம் எவ்வளவு சதி செய்கிறது என்பதை! அந்தச் சமயதததில் ஒரு காற்றடிக்கத் தொடங்கியது. புழுதியும் தூசிகளும் பறந்தன. புதுமணத் தம்பதிகள் இவனைப் பார்ப்பதற்கும், இவன் கண்களில் தூசு விழுவதற்கும் மிகப் பொருத்தமாய்ப் போய்விட்டது. விழுந்த தூசு கண்ணை உருத்தாமல இருக்குமா, என்ன? அவன் கண்ணைப் படபடவென்று அடித்தபடியே அவர்களைப் பார்த்து விட்டானும். இது போதாதா அந்த சந்தேகப் பேர்வழிக்கு, தன் மனைவியைப் பார்த்துத்தான் கண்ணைச் சிமிட்டு

கிறான் என்று நினைத்துக்கொண்டு உடனே அவன்மேல் சீறி விழுந்தானும்.

"கண்ணில் தூசு விழுந்து விட்டதய்யா. உண்மையில் எனக்கு அந்த எண்ணமே இல்லை" என்று அவன் சொன்னால், இந்த உலகம அவன் பொய் பேசுகிறான் என்றுதான் சொல்லும் அந்தப் பரிதாபத்திற்குரியவன் வேறு என்னதான் செய்ய முடியும்? உண்மையை உரைக்கலாம், ஆனால் அதற்குள் உதை கிடைக்கிறதே! பாவம்! அவன் என்னதான் செய்வது? உண்மை சொன்னாலும், பொய் சொன்னாலும் பேசாமல் இருந்தாலும் உதையா?

அவனோ படிக்காதவன்—உலகத்தைப் பற்றியோ இயற்கையைப் பற்றியோ சிறிதும் அறியாதவன. அதனால் அவன் அவனை அடித்தான், நடு வீதியிலே அவனை அவமானப்படுத்தினான், பள்ளிக்கூடத்தில் என் வகுப்பிலுள்ள மாணவர்கள் அத்தனைபேரும் சரித்திரம் ஓரளவு தெரிந்தவர்கள். இயற்கையைப் பற்றி கொஞ்சம் உணர்ந்தவர்கள். அவர்கள் யோசித்துப் பார்த்திருப்பார்கள். அதனால்தான் நான் அடி வாங்காமல் உதை வாங்காமல் தப்பித்தேன். நானும் அந்த முட்டாள் கூட்டத்தில் இதைச் செய்து மாட்டியிருந்தால், என் கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொன்று, குழி தோண்டிப் புதைத்திருப்பார்கள்!

நல்ல வேளையாக இது பள்ளியில் நடந்தது. வேறு இடத்தில் நடந்திருந்தால், ஐயோ, என்னால் நினைக்கவே முடியவில்லையே!

என்னை அறியாமல் செய்துவிட்டேன் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் எத்தனை மாணவர்கள் என்னைப் பள்ளியிலேயே வெறுத்துப் பார்க்கிறார்கள். மாணவர்கள் என்ன அதிசயம்? என்னுடன மிக நன்ருகப் பழகும் அந்த விஞ்ஞான ஆசிரியர் வேணுகோபாலன், அப்படி முறைத்துப் பார்த்தாலாவது பரவாயில்லை. என்னிடம் சொல்லியே விட்டார்!

"செல்வம்! நீ வேண்டுமென்றுதான் அப்படிச் செய்தாய்!"

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "சார்! நான் ஏதும் அறியாதவன். வந்த வேகத்தில் தவறிவிட்டேன்; இப்போது இருக்கும் நிலையைப் பார்த்தால் எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. விழிக்க வேண்டி யிருக்கிறது. தலைமை ஆசிரியரிடம் போகாதபடி நீங்கள்தான் இதைச் செய்ய வேண்டும்!" என்று நான் உருக்கமாகச் சொன்னேன்.

"இங்கு வெட்ட வெளிச்சம், பட்டப் பகல்தான்!" என்றார் கடுமையாக.

வேறு வழியில்லாமல் நான் வந்துவிட்டேன். அவரிடம் பேசப் பேச வார்த்தை முற்றிவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமே என்னை அங்கிருந்து விரட்டியது. ஆனாலும் எனக்கொரு நம்பிக்கை! ஏதோ ஆறுதலுக்காக ஒருவித நம்பிக்கை! 'என்ன இருந்தாலும் அவர் நெடுநாளாக என்னிடம் பழகியவராயிற்றே! அன்பு என்மீது அவருக்கு இருக்க வேண்டுமே! யாருடைய தூண்டுதலோ, இப்படிப் பேசு

கிருர்' என்று நினைத்தேன். அந்த நினைப்புத்தான் என்னை வேதனைக் கடலிலிருந்து 'என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ?' என்று அலட்டும் துன்பச் சுழலிலிருந்து மீட்டு வந்து, சிறிது அமைதியோடு உலவ விட்டது.

'வேண்டுமென்றுதான் நீ செய்தாய்' என்று இவர் என்னைப் பார்த்துக் கூறுகிருரே, இவர் மட்டும் என்ன யோக்கியதையாம்!

அன்ருெரு நாள் பள்ளிக்கூடம் விட்டதும் மாணவர் பலருடன் பேசிவிட்டு படியை விட்டுக் கீழே இறங்கும்போது, ''செல்வம் நில்'' என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். வேணுகோபாலன் என்னை அழைத்தார்.

''ஏன் சார்?'' என்றேன் நான்.

''இப்ப என்ன வீட்டுக்கு அவசரம், வாயேன் மெதுவாய் கடைத் தெருவுக்குப் போய்விட்டு வருவோம்'' என்று மிகச் சாதாரணமாய் பேசினுர். நடைபாதையின் ஓரத்தில் நடந்து கொண்டிருக்கும்போது நொண்டி ஒருவன் எங்களை நோக்கி வந்துகொண்டிருநதான். வாத்தியார் ஆடமபரமான—மேல் நாட்டு உடையில் இருநதார். அதைப் பார்த்தவுடன் இவர் 'பெரிய மனிதர்' என்று நினைததுக்கொண்டு விட்டான். வந்தவன் எதுவுமே சொல்லாமல் அவர் முன் கை நீட்டினுன். பாவம்! போயும் போயும் அவரைப் பார்த்தானே! என்னை நோக்கி கையை நீட்டியிருந்தாலாவது, தொலைகிறது செலவோடு செலவு ஆகட்டும் என்று ஒரு காலணு எடுத்துப் போட்டிருப்பேன். ஆனுல் ஆடம்பரததைப் பார்த்துத்தானே யாரும் மயங்குகிருர்கள். அவர், ''சீ...சீ...போடாபோ'' என்று கூறினுர். ஒரு நாளைக்கு 7½ அணுவுக்கு சிகரெட்வாங்கி ஊதித்தள்ளும் இவர், ஒருபிச்சைக்காரனுக்குக்காலணு போட கைகூசிற்று. போடாவிட்டால் தான் போகட்டும், அன்பாய் ''இல்லையப்பா, போ''என்று கூறும் பண்புமனம் இவருக்கு இல்லையே! இவர் எப்படி விஞ்ஞானததில் தேர்வு பெற்ருர். புகை வண்டி என்ஜினைப் பற்றி படிதத இவர்—வானெலிப் பெட்டியைப் பற்றி அறிந்த இவர்—சூரியன், சந்திரன், பூமி இவைகளின் உற்பத்தி உண்மையை உணர்ந்த இவர்—தாவரங்களின் தன்மை—மனிதர்களின் தன்மை இவைகளைத் தெரிந்த இவர்-இந்தச்சிறு உண்மையை-நாம் ஆதரிக்கா விட்டால் அந்த நொண்டி வாழமுடியாது என்ற உண்மையை மறந்து விட்டாரே. அவன் தடியனுய் இருந்தால் அவர் செய்வது முற்றும் சரிதான். பாவம்! அவன் நொண்டி! என்ன செய்ய முடியும்? அவனுடைய நிலை என்னை மிகவும் வருத்தியது. எப்படியாவது ஆசிரியருக்குத் தெரியாமல் அவனுக்குக் காலணு கொடுத்துவிட வேண்டும் என்று என் மனம் தூண்டியது. அதன்படி செய்தும் விட்டேன்.

பிறகு ஏதாவது பேசலாம் என்று பேச்சை ஆரம்பித்தேன்.

''ஏன் சார், 'இரக்கம்' யாருக்கு அதிகமாய் இருக்கும்?'' என்றன் நான்.

"டாக்டர்களுக்கு அது மிக அவசியம். நீதிபதிகளுக்கும், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் அது கூடவே கூடாது. ஏழைகளுக்கு அது சர்வ சாதாரணம். என் போன்றவர்களுக்கு அது ஒரு 'டார்ச லைட்' மாதிரி! வேண்டும்போது உபயோகிப்போம்; வேண்டாதபோது நிறுத்திக் கொள்வோம்"



மிகவும் அலட்சியமாய் சொல்கிறாரே! இவருக்கு ஒரு நிலையான மனமே கிடையாதா? 'இரக்கம்' இவருக்கு 'டார்ச் லைட்' மாதிரியாம். அதையும் கூசாமல் அல்லவா சொல்கிறார். ஏன் சொல்ல மாட்டார். மாதம் பிறந்தவுடன் கை நிறையச சம்பளம் கிடைக்கும்போது எதைக் கூறினால்தான் என்ன? இதையும் கூறுவார், இன்னமும் கூறுவார்.

பிறகு கொஞ்ச தூரம் பேசாமல் ஆசிரியரும் நானும் நடந்தோம். ஐயன் கடைத் தெருவை வந்தடைந்தோம். அங்கு எப்போதுமே கூட்டம் அதிகமாகத்தானிருக்கும். அன்று மிகக் கூட்டமாகவே இருந்தது. கூட்டத்திற்குள் நுழைந்து நுழைந்து செல்வதற்கே மிகத் துன்பமாக இருந்தது. ஆசிரியர் திடீரென்று ஓரிடத்தில் நின்றார். திரும்பி நான் இருக்கிறேனா என்று பார்த்தார். நான் இதைக் கவனித்துக்கொண்டே பத்தடி பின்னால் கும்பலோடு கும்பலாக இருந்தேன். அவர் நிற்பதையும் சுற்றுமுற்றும் பாரப்பதையும் கவனித்தபோது எனக்கு அவர் மீது இலேசாகச் சந்தேக எண்ணம் ஏற்பட்டது. அப்போதுதான் நான் பார்த்தேன், அவருக்குப் பக்கத்தில் ஒரு நாகரீக நங்கை நின்று கொண்டிருந்ததை!

அதற்குள் ஒரு பையன் என்னை இடித்துக் கொண்டு ஓடினான். அவன் இடித்த வேகத்தில் நான் வேறு ஒருவர் மேல் அப்படியே சாய்ந்து விட்டேன். உடனே அவர் என்னை மிகக் கடுமையாகவே பார்த்தார். "அறிவிருக்கிறதா, உனகது?" என்று சட்டென்று கேட்டுவிட்டார் அவர். அறிவிருந்தால் நான் அவர் மேல் விழமாட்டேன் போலும்! யாரோ ஒருவன் முடடாள்தனமாகக் கும்பலில் நுழைந்து ஓடினான். அவனால் வந்த வினை என்மேல் பழி சுமத்தியது. யாரோ செய்த குற்றத்திற்கு யாரோ தண்டனை அனுபவிக்கும் காலம் தானே இது! மனததைத் திடப்படுத்திக் கொண்டு "மன்னிககணும். சார்" என்றேன். அவரும் அதே கோபப் பார்வையோடு திரும்பி விட்டார்.

ஆசிரியர் எங்கேயாவது போய் தடுமாறப் போகிறார் என்ற எண்ணத்தோடு நானும் சிறிது வேகத்தோடு முன்னேறினேன். ஆசிரியர் அங்கு நின்றுகொண்டிருந்தார். அப்போது அந்த நங்கை அவரிடமிருந்து விடைபெற்றாள். அவள் போன பிறகு நான் கேட்டேன்: "ஏன் சார், அந்த அம்மா யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா, சார்" என்றேன் மெதுவாக.

"தாராளமாகத் தெரிந்து கொள்ளலாம். அவள் வேறு யாருமில்லை. என்னுடன் படித்தவள் தான்" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு என்னை உற்றுப் பார்த்துவிட்டு இலேசாகச் சிரித்தார். ஏதோ ஒரு காரியத்தைச் செய்யத்தானே சிரிக்கிறார்கள். வேண்டுமென்றே சிரித்து, ஏதோ ஒன்றுக்காக அழும் குழந்தையை அடக்கி விடுகிறார்கள் பலர். இவர் அப்படிச் சிரித்து என்னைப் பார்த்ததும் ஏதோ ஒன்றுக்குத்தான். இவருடன் வந்ததே தவறு என்று உணர்ந்தேன். அதை அவரே சொல்லி விட்டார்.

"செல்வம், இங்கே என் பழைய நண்பர் ஒருவர் இருக்கிறார், நான் அவரைப் பார்க்க வேண்டும். வர நேரங்கூட ஆகும். நீ நேரத்தோடு வீட்டுக்குப் போ" என்றார். எனக்கு ஒரு யோசனை தோன்றியது. ஆசிரியரைச் சோதனை செய்தால் தான் என்ன? என்பதுதான் அது. சே! சே! எவ்வளவோ சோதனைகள் செய்து காட்டிய இவரையா நாம் சோதனை செய்வது? என்று வேறொரு எண்ணம் தலை நீட்டியது. உண்மையை அறியத்தானே சோதனை! அதில் என்ன தவறு இருக்கிறது?

"நானும் அங்கே வரலாமா சார்" என்று துணிவோடு கேட்டே விட்டேன். ஒரு நிமிடம் அவர் விழித்ததை நான் புரிந்து கொண்டேன்.

"போகின்ற இடத்தில் எப்படியோ, செல்வம். தங்க நேர்ந்தாலும் நேரும். 'அதனால்தான்........'" என்று ஆசிரியர் இழுத்தார், வேண்டா வெறுப்பாக. என்னை எப்படியும் விரட்டிவிட அவர் தீர்மானித்து விட்டார், படித்தவள் என்று பொய் சொன்னாரே அவளோடு சுற்றித்திரிய வேண்டும் என்றும் முடிவு கட்டி விட்டார். அதனால் என்னைத் துரத்தியடிக்கவும் துணிந்து விட்டார். இவனை அழைத்து வந்தோமே என்பதையும் மறந்து.



இப்படி இருக்கிறது இவருடைய யோக்கியதை! இவருடைய நட்பு எப்படிச் சிறந்த நட்பாகும்? பேச்சுத் துணைக்காக என்னைக் கூப்பிட்டார், பிறகு அவருக்கு ஏற்ற ஒரு ஆள் கிடைத்தவுடன் என்னை விரட்டி விட்டார். இவரை எப்படிக கடைசிவரை நம்பி ஒரு பெண் வாழ முடியும். என்னை நீக்கியதுபோல் விலக்கியும் வெறுத்தும் விடலாமே!

இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது. வேண்டாததை—பிடிக்காததை விலக்குவது மனித இயல்பு தான என்றும் சிலர் நினைக்கலாம். சரி, ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நான் அவருக்கு வேண்டாதவன் அல்லவே! பிடிக்காதவன் அல்லவே! அவர்தானே என்னை வேண்டுமென்று அழைத்தார்—பிறகு ஏன் என்னை விரட்ட வேண்டும்? இப்படியே சென்றவிட மெல்லாம் மனத்தை விட்டுவிட்டால் அதன் முடிவு. மலைமேலிருந்து தவறி விழுந்தவன் கதிதான்.

நானாவது தவறுதலாக செய்துவிட்டேன், சந்தர்ப்பத்தால் அது நடந்துவிட்டது. அதற்கே இவர் என்மேல் பழி போடுகிறார். ஆனால் இவர் தான் செல்வது தவறான பாதை என்பதை மறந்து விட்டாரே! ஆசிரியர் தான் ஒழுங்காக நடந்து காட்ட வேண்டும். அப்போதுதான் பிள்ளைகளும் அந்தப் பாதையைப் பார்க்க முடியும். ஆசிரியர் நடப்பது முள் நிறைந்த பாதை என்றால், பிள்ளைகள் நடப்பது புதர் நிறைந்த பாதையாகத்தானே இருக்க முடியும்? இதைக் கண்டுதான் என்னவோ யாரோ ஒரு அறிஞர், "நான் சொல்வது போல் செய். ஆனால் நான் செய்வது போல் செய்யாதே" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

எது எப்படி யிருந்தாலும் யார் எப்படி நடந்தாலும் நான் இன்று ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டேன். எல்லாம் அவள் கருணை! என்மேல் ஏற்பட்ட இரக்கமோ என்னமோ? அவள் மட்டும் ஒரு வார்த்தை தலைமை ஆசிரியரிடம் சொல்லி இருந்தால், என்பாடு அதோகதிதான். பள்ளி முழுதும் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கும். இன்னும் ஏதேதோ நடந்திருக்கும்.

எவ்வளவோ நாள்—ஆண்டு ஆண்டாக நான் பள்ளியில் ஒழுங்காக நடந்துகொண்டதனால் "செல்வம் நன்றாகப் படிப்பான்; கடமைகளை ஒழுங்காகச் செய்வான்; நல்லவன்" என்று பெயரெடுக்க முடிந்தது. எவ்வளவோ நாள் பாடுபட்டு எடுத்த அந்த நல்ல பெயரை அந்த ஒரு சிறு சம்பவம்—எதிர் பாராத சம்பவம் அடியோடு மாற்றிவிட்டதும் ஆக்குவது என்றுமே மிக மிகக் கடினம். ஆனால் அதை அழிப்பது மிக மிக எளிது. இதை நிரூபித்து விட்டது, இந்த நிகழ்ச்சி.

அன்று பள்ளிக்குப் புறப்பட சிறிது நேரம் ஆகிவிட்டது, காரணம், இளங்கோ வீட்டுக்குச் சென்றதுதான். அவன் என்னுடைய உயிர் நண்பன். பள்ளிக்குப் போகும் போது அவனைக் கூப்பிடுவது வழக்கம். அன்றும் அவனைக் கூப்பிட்டேன். ஒரே பிடிவாதம் செய்தான், ''நான் வரவில்லை'' என்று. ஏன் ஒரு நாள் வீணாகப் போக வேண்டும் என்பதற்காக அவனிடம் சிறிது பேசினேன். முடிவில் அவன் வெற்றி பெற்றான்.

அப்போதே மணி 9-55 ஆகிவிட்டது. அவனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வேகமாக நடந்தேன். நேரங் கழித்து எவனாவது வந்துவிட்டால் தலைமை ஆசிரியருக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும். பள்ளிக்குள் நுழைந்தேன். எங்கே தலைமை ஆசிரியர் பிரம்பை வைத்துக் கொண்டு காத்திருக்கிறாரோ என்று பயந்து கொண்டே நடந்தேன். என் வகுப்பு அறைக்குப் பக்கத்தில் வந்து விட்டேன். அப்போது பாவம், முதல் படிவ மாணவன் ஒருவன், என்னைப் போல் நேரங் கழித்து வந்து அவரிடம் மாட்டிக் கொண்டான். பிரம்பை எடுத்து ஓங்கினார் ஆசிரியர். பையன் அலறியது எனக்குக் கேட்டது. எப்படியோ நாம் தப்பித்து விட்டோம் என்று எண்ணினேன். ஆசிரியர் மாறி மாறி அடிப்பதையும், பையன் துள்ளுவதையும் பார்த்துக் கொண்டே வகுப்பிற்குள் நுழைந்தேன்.

அப்போது—அதே நேரத்தில் என் வகுப்பில் படிக்கும் ராஜம், ஆசிரியரிடம் சொல்லிவிட்டு வாயிற்படியை சீக்கிரம் கடக்க விரைந்தாள். நானும் அப்போது 'அவள் வருகிறாள்' என்பதைக் கவனிக்காமல் விர்ரென்று உள்ளே நுழைந்து விட்டேன், 'மட்'டென்று ஒரு சத்தம்! ராஜம் 'தடா'லென்று கதவில் போய் சாய்ந்தாள். எனக்குப் பயமாகப் போய்விட்டது, கீழே விழுந்து ஏதாவது காயம் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் எனக்கு எற்பட்டது. சாய்ந்த அவளை கீழே விழாமல் தடுப்பதற்காக, என்னையும் அறியாமல் என் கரங்கள் திடீரென்று அவளைப் பிடித்துவிட்டன. அப்போது அவளிருந்த நிலை—நான் இருந்த நிலை எல்லாவற்றையும் மாணவர்கள் ஆசிரியர் உட்படப் பார்த்துவிட்டார்கள்.

ஒரு வினாடிக்குள் என் சட்டை முழுவதும் நனைந்து விட்டதை உணர்ந்தேன். தட்டுத் தடுமாறிக் கொண்டு குழறினேன், ''மன்னிக்க வேண்டும்'' என்றேன். அவள் ஏதும் பேசாமல் போய்விட்டாள்.

வகுப்பில் நுழைந்து என் இடத்தில் போய் உட்கார்ந்தேன். பாடம் நடக்கவில்லை. ஆசிரியர் என்னை முறைத்தார். மாணவாகள் அத்தனை பேரும் என்னை வெறித்துப் பார்த்தார்கள். எனக்கு என்னமோ பெரிய அச்சமாய் இருந்தது. பிறகு ஒருவாறு மனத்தை தேற்றிக்கொண்டு மேசைமேல் சாய்ந்தேன்.

இதுதான் அன்று எதிர்பாராமல் நடந்தது!

அரசியல் வானில் கொந்தளிப்பு !
சீனுவுக்குச் சென்று வந்த நேரு சோஷலிசம் என்கிறார் ....
நேரு எங்கள் மேரு என்றவர்கள் அதைக் கேட்டு நேருவையே
எதிர்க்கின்றனர் ....
பழமைக்கும் புதுமைக்கும் பலத்தப் போராட்டம் ...
தென்னாட்டின் கதி என்ன ?
பொதுவுடமை வாதிகளின் நிலை என்ன ?
புதிய சமுதாயம் வடக்கிலா தெற்கிலா ?
பொது மக்கள் பதில் சொல்லுங்கள் ....
இதோ நல்லதோர் மாமருந்து !

# திராவிட முன்னேற்றக் கழகமும் —கம்யூனிஸ்ட் கட்சியும்!

விலை 0—2—0

படித்துப் பார்த்து விரைவில் முன்னணி யமையுங்கள் !

**தாய்மைப் பதிப்பகம்**

89, சாமிநாய்க்கன் தெரு,

சென்னை-2.

புத்தாண்டிலே !
உங்களது பொற்கரங்களிலே !

○

# தென்னாட்டுச் சிங்கம்

by

"சிலம்பின் செல்வன்"

பூரித்து விளையாடுகின்றானா ?

இன்றேல்

ரூ. 1—8—0 மணியார்டர் செய்யுங்கள்

விலை ரூ. 1—4—0

○

விபரங்கட்கு :

**இளங்கோ பதிப்பகம்**

கோவை சக்தி காரியாலயம்

கோயம்புத்தூர்.




'தென்குமரன்'

*[கோட்டை வாயலில் புலிக்கொடி பறக்கிறது. உள்ளே அரசவை குழுமியிருக்கிறது வைரங்களும் மாணிக்கங்களும் முத்துக்களும் அரியாசனத்தை ஒளி மயமாக்கிக் கொண்டிருக்கின்றன — வானத்தை வண்ண ஓவியமாக்கும் விண் மீன்களைப்போல! இரவுக்கழகு தரும் மதியைப் போல அந்த இடத்தைக் கோலம் செய்து கொண்டிருக்கிறார் மன்னர் தென்றல் வளவன். நாட்டின் செல்வம் என்று புகழப்படும் தென்னகத்துச்செம்மல் வீரவளவன் குற்றவாளிக் கூண்டிலே சீறும் சிங்கமென — பாயும் புலியென நின்றுகொண்டிருக்கிறான். வெடிக்கப் போகும் எரிமலை அமைதியாய் இருப்பதைப் போல அவன் நின்றுகொண்டிருக்கிறான். கோட்டை வாயிலின் மேலே 'பாய்ந்து கொண்டிருந்த 'புலி' 'எங்கள் உலகத்து மக்களை வந்துபாருங்கள்! கோழைகளான உங்களுக்கும் வீரமுண்டாகும்!" என்று உறுமிக்கொண்டிருந்தது! காவலர் கழறவாரம்பிக்கிறார்]* .... .... ....

மன்னர் :-வீரா! நாடு உன்னைப் பற்றி நவில்கிறது நீ நல்லவன் என்று. என் உள்ளம் உவக்கிறது இதைக் கேட்க. தமிழ்ப் புலியான உன்னை, தமிழர் சமுதாயத்தின் தளபதியான உன்னைத் தான் கேட்கிறேன். சொல்! நீ செய்த தவறை ஏற்றுக்கொண்டு மன்னிப்புக்கேள்! மன்னித்து விடுகிறேன்!

வீரன் :-மன்னிப்பு நான் கேட்க வேண்டுமா? வேடிக்கையாக இருக்கிறது அரசே!

மன்னர் :-என்ன வேடிக்கையை கண்டுவிட்டாய் நீ?

வீரன் :-நானா வேடிக்கை செய்கிறேன்? எது வேடிக்கை? நான் செய்துவிட்ட குற்றத்தைக்கூற மறுக்கிறீரே அது வேடிக்கையா? அல்லது செய்யாத குற்றத்தை நான் எப்படி ஏற்பேன் என்று கேட்கிறேனே அது வேடிக்கையா? தமிழகத்தைத் தாழ்வுப் பாதைக்கு அழைத்துச் சென்ற உங்களைத் தடுத்து நிறுத்தினேனே, அது வேடிக்கையா? எது வேடிக்கை வேந்தே, எது வேடிக்கை?

மன்னர் :-கொலைகாரா! வேடிக்கையாகப்பேசி வேந்தன் என்னை ஏய்த்திடலாம் என்று எண்ணிடாதே! உனக்கு நான் மரண தண்டனை விதிக்கிறேன்!

வீரன் :-மரண தண்டனையா? எனக்கா வேந்தே? மண்ணாள் வேந்தர் மட்டரகமான வழியிலே செல்லக்கூடாது: புவியாள் வேந்தர் பெண்ணின் புன்சிரிப்பிலே

மயங்கிவிடக் கூடாது; அது நம் தமிழர் மரபுக்கு ஆகாது என்று நான் செய்ததற்குப் பரிசு மரண தண்டனையா?

மன்னர் :-(எரிச்சலுடன்) பிதற்றும் பேயனே! அணைபோட்டுப் பேசு அரசன் முன்னே! நீயிருப்பது அரசவை! என் முன்னே நிற்கிறாய்! நான் மன்னன்! எது வேண்டுமானாலும் செய்யமுடியும் என்னால்!

வீரன்:-ஆமாம்! நீர் எதுவேண்டுமானாலும் செய்வீர்! அதனால் தான் எனக்கும் சாவுக் குமாரிக்கும் மணவினை செய்து வைக்கப் போகிறீர்!

மன்னர் :-(கடைசியாக) வீரா! உன் வாழ்க்கை மரம் பட்டுப் போவதற்கு முன் ஒரு தீர்மானத்திற்கு வா! நீ புரிந்துவிட்ட மாபாதகத்தை மன்னியுங்கள் என்று மண்டியிடு. மன்னித்து விடுகிறேன் உன்னை! நீ இந்த நாட்டின் உயர்வுக்காகக் காட்டிய வீரம் வீணாய்விடக் கூடாது என்ற எண்ணத்தால் வீரத்தைப் போற்றும் தமிழரசர் மரபில் வந்த நான் இவ்வளவு தூரம் உனக்குக் கருணை காட்டுகிறேன்,

வீரன்: அரசே! எனக்கா நீங்கள் கருணை காட்டுகிறீர்கள்? கருணை யுள்ளம் படைத்த காவலர் நீர் என்றால் பொன்னனை தமிழ் நிலத்தைப் புரக்கும் புரவலர் நீர் என்றால் நான் புரிந்துவிட்ட அந்தக் குற்றத்தைக் கூறுங்களேன். அவை அறிந்து கொள்ளட்டும்!

மன்னர் :-என் காதல் கிழத்தியைக் கொன்றதாக உன்மீது குற்றம் சாட்டுகிறேன்! இப்போது நீ என்ன சொல்லப் போகிறாய்?

வீரன் :-விநோதமான குற்றச் சாட்டு! (சிரிக்கிறான் பின் அவையை ஒருமுறைபார்க்கிறான் அந்தப் பார்வையின் காந்தி அவையைக் கலக்குகிறது. பின்)

அன்பும், அறிவும், வீரமும், நீதியும் நிறைந்த அறிஞர்களே! கேளுங்கள் கொலை நடந்த கதையை, அரசரின் அந்தப்புரத்திலேயே அடங்கிப் போயிருக்க வேண்டிய இந்தத் திருவிளையாடல், இன்றுஅவையிலே அரங்கேற்றம் செய்யப்பட்டிருக்கிறது மன்னரின் தயவால்!

வடநாட்டிலே யிருந்து வந்த வனிதை குசலாவின் கண்வீச்சிலே இத்தமிழ் மாநிலத்தின் காவலர் கருத்திழந்தார். அவளது கண்ணிலே கடவுளையும்,



பேச்சிலே தேமதுரத் தமிழை யும், அவளின் மூச்சிலே தென்ற லையும் இதயத்திலே இன்பத்தை யும் கண்டுவிட்ட மன்னர் பெரு மான் புலிக்குப் பிறந்தவரை— வீரத் தமிழர்களை—இமயங்கண்ட இன்பத் தோன்றல்களை மறக்க வாரம்பித்தார், இல்லை, இழித் துரைக்கவாரம்பித்தார்—குசலா வின் கொஞ்சுமொழி செய்த வேலையினால்.

தமிழகத்தில் உலவிய அந்தத் தேவதையை நீங்கள் பார்த் திருக்கக்கூட மாட்டீர்கள்! ஆனால் அவள் பிணத்தைப் பார்த்துத் தான் பிரமித்தீர்கள்.



வந்தாரை வாவென்றழைத்து அதனால் நம் நாட்டிலே வறுமை யேற்பட்ட வேளையது. மக்கள் செய்வதறியாது மானங்காக்க வேண்டி மாண்டு கொண்டிருந்த வேளையிலே, மக்களின் நொந்த உள்ளத்திற்கு உற்சாகம் ஊட்டு வதற்குப் பதில் வடநாட்டுச் சரக் கில்தான் சாரம் இருக்கிறது என்று எண்ணி இந்த நாட்டைப் புறக்கணித்து விட்டார். உடலைக் கொடுத்து மன்னரின் உயிரைக் கெடுத்து, வளமையற்று வட நாட்டிலே வாழ்பவருக்கு இந்த நாட்டிலே வாழ்வும் வளமையுந் தந்து இன்பமடையும் அந்தத் தற்குறியாளின் எண்ணத்தை அறியாது நம் தமிழ் நாட்டைக் காக்கப் பிறந்தவர் தமிழகத்து வாழ்வை மறந்துவிட்டார்.

நாம் யார்? புலிக்குப் பிறந்த வர்கள் நாம்! திக்கெட்டும் நம் இலச்சினையை நாட்டி, விண்ணி லேயும் மண்ணிலேயும் தமிழைப் பரப்பினவர்கள் நாம்! போர்க் களத்திலே மகன் புண் சுமந்து மாண்டான் என்ற மங்களகர மான சேதிகேட்டு மகிழும் தாய் வயிற்றிலுதித்தவர்கள் நாம்! ஆம் நம்மைத்தான் நந்தமிழ்க்கோ அலட்சியம் செய்துவிட்டார்!

கொஞ்ச காலமாக நமதரசர் இத்திருவவைக்கு வராமலிருந் தாரே. உங்களுக்கு நினைவிருக் கிறதா? நம் நாட்டினர் இருந்து பணிபுரிந்த இடங்களிலெல்லாம், இறந்து போனவளின் உலுத்தர் சமுதாயத்தினர் நிரம்பிக் கிடந்

தனரே. ஏன்? தமிழ்த் தலைவர்—தமிழ்க் களஞ்சியம்—சிங்காரத் தமிழ் நாட்டின் முதன் மந்திரி வேலையினின்றும் ஏன் நீங்கி விட்டார்என்று உங்களில் யாருக் கேனும் தெரியுமா? உங்களுக் கெப்படி தெரியும் மன்னரின் மாளிகையினுள் நடந்தவை யெல் லாம்?

ஓர்நாள் திட்டமொன்று திட்டப் பட்டது, பாலில் விடம் கலந்து மன்னருக்கு அளிப்பதென்று. யாருமேயற்ற ஓர்நாள் பாற் செம்பு ஒன்று மன்னருக்கு எடுத்து வந்தாள் குசலா. இதனை எப்படியோ அறிந்து கொண்ட முதன் மந்திரி அறிவுடையார் அவண் சென்று பாற்செம்பைத் தரையில் ஊற்றிவிட்டார். விட யத்தையும் மன்னர்க்குத் தெரி வித்தார். பாலைச் சோதனை செய்ததில் விடமொழிந்த பால் அவள் கொண்டுவந்தது என்று தெரிந்தது. மன்னர் வெகுண்டார் சீறினர்; தன் வாழ்வின் இன்பத் தைத் தொலைத்துச் சித்திரவதை செய்யத் திட்டம் தீட்டுகிறார் அமைச்சர் என்று சொல்லொ ணாத சொல்லம்புகளை அமைச்சர் மீது எய்தார். நல்லவர்களைக் கொன்றுவிட அதுபோதாதா?

இந்த நாட்டின் காவலர் இப் படிக் கருத்திழந்தாரே என்று கலங்கினர் அமைச்சர். மன்ன ரிடத்தில் நம்பிக்கையை யிழந்து விட்டபின் வாழ்வதா என்று எண்ணி வேலை நீக்கம் செய்து கொண்டார். அன்று வெளி யேறினவர் இதுநாள் வரை அவ ரைக் காணவே முடியவில்லை. நீங்களும் அதற்காகக் கவலைப் படவில்லை....

ஒருநாள் சோலையிலே நான் உலவிக் கொண்டிருக்கையில் குசலா என்னை அணுகி காதல் செய்ய வாரம்பித்தாள்! என் வீரத்தை—வீரர்களின் வீரத்தைத் தனக்கு அடிமையாக்கிக்கொள்ள விரும்பினள், அந்தப் பெண் பேய்! வடநாட்டுச் சரக்குதானே. எப்படியிருக்கும் புத்தி? அரசரின் இதயத்திலே நச்சைக் கலந்து விட்ட அந்த நச்சுப் பாம்பைப் பழிவாங்கும் சந்தர்ப்பம் அது தான் என்று எண்ணி, மங்கள கிரியின் உச்சிக்கழைத்துச் சென் றேன் அவளை. அங்கேதான் அவளின் பேயுருவத்தை வடநாட் டின் வஞ்சகத்தைக் கண்டேன்.

தமிழர்கள் பேய்களுக்கா அஞ்சுவார்கள்? தமிழ்த் தாயைத் தவிர வேறெந்த தெய்வங்களை யும் வணங்கி அறியாதவர்களா யிற்றே தமிழர்கள்!

நடுநிசி நெருங்கிக் கொண்டிருந் தது...

நான் உறங்குவதுபோல நடித் தேன். அவளோ என்னை அம் மலையுச்சியின் மீதிருந்து உருட்டி விட முயற்சி செய்தாள். நான் முந்திக்கொண்டேன். அதன் விளைவு இன்று நான் கைதியாய் நிற்கிறேன் இங்கே!

தமிழ்ச்சகோதரர்களே! புலிக் குப் பிறந்தவர்களே! அன்று நான் அடங்கும் பூனையாய்ப் போயிருந்தால் இன்று தமிழன் வீரம் வீழ்ந்து போயிருக்கும்.

நான் அவளைக் கொன்றேன் ஏன்? ஏன்? இந்நாட்டின் நல்

வாழ்வு, மன்னரின் மதிமயக்கம் மாயவேண்டுமென்ற எண்ணம்— இவைதான் குசலாவைக்கொல்ல என்னைத் தூண்டின.

அந்நியர்கள் இந்த நாட்டிலே அதிதிகளாய் வாழலாம்; ஆனால் அதிகாரிகளாய் விடக்கூடாது. எந் நாட்டவர்களும் தென்னாட்டிலே-தமிழ் நாட்டிலே வாழலாம்; ஆனால் தமிழர்களின் வாழ்வைக் கொலை செய்யக்கூடாது. எந்த மொழியினரும் இந்த நாட்டிலே வாழலாம்; ஆனால் தமிழ்தான் இந் நாட்டின் தாய்மொழி—அரசியல் மொழி. இத் தொன்மொழிக்கு ஊறேதும் ஏற்படக்கூடாது.

இந்த நாட்டின்—கன்னித் தமிழரின் கலாச்சாரத்தை வீழ்த்த வந்தவள் குசலா. அதனால் நான் அவளைக் கொன்றேன். நான் குற்றவாளியா? தமிழ்ப் பெரியார்களே! அறிஞர்களே! கருணை நிதிகளே! குசலாவை நான் கொன்றேன். ஏன்? ஏன்? ஏன்?

(இந்தச் சமயத்தில் மன்னர் மயக்கமுறுகிறார். ஒரு பெரியவர் எழுந்து)

பெரியவர் :—புலிக்குப் பிறந்தவனே! வீரனே! எத்தனை பெரிய காரியம் சாதித்தனை நீ! மன்னர் உனக்கு மரண தண்டனையே விதித்திட்டாலும், உன்னை—புலிக்குப் பிறந்தவரின் வீரத்தை இந்த நாடு என்றும் மறவாது வீரா! வாழ்க தமிழரின் வீரமும் தமிழ் நாடும்!

(இந்தச் சமயத்தில் அரசர் கண் விழிக்கிறார். சின்னேரத்திற்குள் அறிவும் தெளிகிறது.)

மன்னர் :—வீரா! என்னை மன்னித்திடு! இந்தநாட்டின் வாழ்வை மீட்டிட்ட வீரா! உன் வீரத்தை வாழ்த்தத் தவறியதற்கு மன்னித்துவிடு என்னை!

பெரியவர் :—அரசே! வாழி நின் கொற்றம்! விண் வரையில் பறக்கட்டும் நம் புலிக் கொடி!

(மன்னர் பெரியவரை உற்று நோக்குகிறார். உடனே ஓடிப் போய்)

மன்னர் :—அமைச்சரே! தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன் உம்மைப்பற்றி. மன்னிப்பீரா என்னை?

அமைச்சர் :—செந்தமிழ்த் தென்றலே! யார் யாரை மன்னிப்பது?

மன்னர் :—தமிழ்க் குடிப் பெருமக்களே! விழிகண் குருடனாய் வாழ்ந்துவிட்ட என்னை மன்னிப்பீர்களா? இன்று முதல் வீரன் தான் உங்கள் தலைவன்! உங்கள் புலி வடவர் மீது பாயும் புலி! மீண்டும் அறிவுடையாரே இந்நாட்டின் அமைச்சராயிருந்து உங்கள் ஆக்கத்திற்கு ஆவன செய்வார்!

வீரன் :—வாழ்க புலிக் கொடி! நம் மன்னர்க்கு வெற்றி பல நல்கட்டும்! வடவரின் வஞ்சகம் ஒழியட்டும்! வாழ்க தமிழ்ப் பெரியார்! (அவை கலைகிறது) —

[திரை]

உருவகச் சித்திரம்

# வாடாதே, மலரே...!

'கரிகாலன்'

என் இதய மலரே!

என் அன்பு முத்தம் உன் பட்டு இதழுக்கு! நான் உன்னை முதன் முதல் காணும்போது நீ சிறிய மொட்டுவாக இருந்தாய்! இன்று? கூம்பியிருந்த உன் இதழ்கள் தளதளத்து விரிய - மலரும் எல்லையில் இருக்கிறாய். தோழிகளின் மத்தியில் தென்றலின் தழுவலில், புதுமைப் புலரியில் நீ ஆடி அசைந்து எழிலுடன் அழகு பொலிய காட்சியளிப்பதை - நான் அன்று ஆர்வத்துடன் பார்க்கவில்லை. ஆனால் உன் தோழிகள் அனைவரையும் விட உனக்கு ஒரு தனிக் கவர்ச்சியை-அழகை-இயற்கை அளித்திருந்தது அன்று! ஏன் இன்றும்?

அன்று, நீ; உன் இல்லத்தின் முற்றத்தில் அந்த கருங்கல் சுவற்றின் மேலே தலை தூக்கி - என் வரவை எதிர் நோக்கி நிற்பாயே, அந்நிலை! ஆம்! அந்தப் பார்வை. ஆ! அதை நினைக்கும் போது இன்னும் என் இதயம் வேகத்துடன் துடிக்கிறது.

காலம் முன்னே சென்றது - சட்டென்று உன் நிலையில் சில மாற்றங்கள் வந்தன!

இளமையின் திரையைக்கிழித்துக்கொண்டு, உன் 'தளதளத்த' இதழ்கள் ஒவ்வொன்றாக விரியத் தொடங்கின!

பேதைப் பருவமுதல் உன் நோட்டத்தைப் புரிந்துகொண்ட நான், உன் ஆழமான நினைவின் ஆசைபோல, என் வாழ்வை உனக்காக அர்ப்பணித்தேன்.

இன்ப வாழ்வின் எழிலழகை தேனூறும் இளமைத் துடிதுடிப்பை - அந்த இன்பச் சிகரத்தை - எழில் நினைவைக் கனாக் கண்டேன். ஆம்! என் அன்புக் கனவு! ஆனால்.......

பூஞ்சோலையில் தத்திக் களித்து சுவர்க்க லோக இன்பம் நுகர்கிற பூங்குயிலின் மதுர

> ஒரு சிறந்த புத்தகத்தை முதல் முறையாக கண்டெடுத்துப் படிப்பது ஒரு சிறந்த நண்பனைப் புதிதாக அடைவது போன்றது. ஏற்கெனவே படித்து மகிழ்ந்த புத்தகத்தை மீண்டும் படிப்பது கண்டு பழகிய நண்பனை மீண்டும் பார்த்து பேசுவது போன்றது.
>
> —கோல்டுஸ்மித்

கீதம் கேட்டவன் போல - என் இதயத் துடிப்புகளில் இளந் தென்றல் வீசியது!

அன்று, உன்னைச் சுற்றி சில சிறிய முட்செடிகள் மட்டும் வேலியிட்டிருந்தன.

என் மலரே! அன்றொரு நாள் உன் முன்னால் நான் எனை மறந்து உன் எழிலில் மயங்கி நின்றது உன் நினைவிற்கு வருகிறதா? மது நிறைந்த பூம்பொடிகளைத் தேக்கித் தேன்குடம் போல உன் செவ்விதழ்கள் படர்ந்திருந்தன!

நான் உயிர்த்துடிப்புடன் ஒரு ஆசை முத்தமிட்டேன்—காலத்தால் நீ எனக்குச் சொந்தமாவாய் என்ற ஆனந்த நினைவுடன். "இன்னும் ஒன்று" என்ற நம் இதய ஒலியை, சந்தர்ப்ப சூழ்நிலையை நினைத்து நிராகரித்தேன். நீ, உன் மலரிதழ்கள் அனைத்தும் மலரட்டும்— படரட்டும் என்ற வாடாத நினைவை நெஞ்சிலிருத்திக் கொஞ்ச தூரத்திலிருந்தே எதிர்கால எழில் வாழ்வை நினைத்து வாழ்ந்தேன்! ஆனால் நொடிக்குள் ஒரு சோக வலை நம்மை வளைத்துக் கொண்டது - வளைத்துக் கொள்ளப் பட்டோம்!

பொறாமையும், கெடு நினைவும், வஞ்சனையும் நிறைந்த சில கள்ளிச் செடிகளும்-காட்டு ரோஜாக்களும் உன்னைவிட உயரத்தில் வளர்ந்து உன்னை சவக்குழியில் தள்ளும் நினைவுடன் ஆக்கிரமித்துக் கொண்டன.

உன்னை நட்டு வளர்த்த நல்லவர்களின் பொல்லாச் சொல்லின்படி கருத்துத் தடித்த சால் வயிறு சாடிய சில வண்டுகள் இதோ. இவ்வளவு காலம் உன்னைத் தாங்கித் தூக்கிக் கொண்டிருந்த தண்டிடமிருந்து பிரித்தெடுத்துவிட துடிக்கின்றன.

கொடிது! கொடுமை! ஆ! என் இதய மலரே!

> உண்மைகளைக் கண்டறிவதில் நீ உண்மையான ஆசை கொண்டிருக்கிறாயா? ஆம் எனில் உன் வாழ்க்கையில் ஒரு முறையிலாவது நீ உலகத்தால் உண்மை என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள அத்தனை தத்துவங்களையும் சந்தேகித்து ஆகவேண்டும்.
>
> —டெஸ்கார்டஸ்

பூ நிலாவின் புன்னகையில் தவழ்ந்திருந்த உன் இதழ்களில்- கார்முகிலின் சாவிருள் படர்கிறதா. கண்ணே?

பூவே, நீ ஏன் வாடுகிறாய்?

முகிலின் திரையில் மறைந்த முழுமதியைப் போல, துடிதுடிக்கும் இதயத்தின் வாடாத ஆசை உந்த உன்னைச் சுற்றியிருந்த முட் செடிகளைத் தகர்த்து இதோ, உன் முன்வந்து விட்டேன்!

பொறுமைக்கும் வஞ்சனைக்கும் இடையே தாழ்ந்து கிடக்கிற நம் வாழ்வின் சத்தியம் வெளி வரும்போது - அதை உலகம் நம்பும் - அப்போது நீ என் நெஞ்சில் அணைவாய்!

நம் எழில்வாழ்வு! அது அழகு பொலிய வந்தே தீரும்!

வாடாதே, என் அன்புமலரே! வருகிறேன் விரைவாக! ✱



# நமது மருத்துவர்

G. வெங்கடப்பா M. B. B. S. (Ex) I. A. M. C.

வினா: பொன்னி மருத்துவரே எனக்கு மஞ்சள் காமாலை வந்து துன்பப்படுகிறேன். என் பார்வையும், சிறுநீறும் மஞ்சளாக இருக்கின்றன. தயவுசெய்து மருத்துவம் கூறுங்கள்? ப. ஜங்கநாதன், மன்னார்குடி

விடை: கரிசலாங்கண்ணி (கையாந்தரை) இலைகளோடு கீழாநெல்லிச்செடியையும், சற்று மிளகும் சேர்த்து, சுண்டக்காய் அளவு உருட்டி வைத்துக்கொண்டு காலை, மாலை ஒரு உருண்டை வீதம் வாயில் போட்டு பால் குடிக்கவும். ஆங்கில மருநதுக் கடையில் "சோடா சாலிஸிலாஸ் மிக்சர்" வாங்கி வைத்துக்கொண்டு தினம் மூன்று வேளை ஒரு அவுன்ஸ் வீதம் குடிக்கவேண்டும். தினம் இரண்டு மூன்று முறை மலம் கழிய இலேசாக பேதிக்கு அரை அவுன்சு பேதி உப்பை வெந்நீரில் போட்டுக் குடிக்கவேண்டும்.

வினா: மருத்துவரே, தெரியாமல் செய்த கரபிரயோகத்தினால் என் ஆண்குறி பத்துவயது பையன்களைப்போல் இருக்கிறது. திருமணம் செய்ய வீட்டில் ஏற்பாடு நடநதுவருகிறது, செய்து கொள்ளட்டுமா? வேண்டாமா? தயவுசெய்து உங்கள் மருத்துவ யோசனையை கூறுங்கள்? மா. குருசாமி, பட்டுக்கோட்டை

விடை: நீங்கள் உங்கள் திருமணத்தை சில வருடங்களுக்கு ஒத்தி வைத்துக்கொள்ளுங்கள். வாரம் இருமுறை ஆண் விதை சத்தை ஊசி போட்டுக்கொள்ளவும். சில மாதங்களில் பெரியதாகும். இதனால் செலவு அதிகரிக்கும். ஆங்கில டாக்டரிடம் காட்டி நேரில் யோசனை கேட்கவும். குறியை பெரிதாக்க ஒரு கருவிக்கு ஏற்பாடு செய்வார். உணவில் அடிக்கடி ஆட்டு விதையையும், மூத்திரக்காய்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். சித்தவைத்தியரிடம் கேட்டுத் தேற்றான் கொட்டை லேகியம் செய்து சாப்பிடவும்.

வினா: பொன்னி மருததுவரே நான் தினந்தோறும் சோப்புபோட்டு குளித்தும் முகததில் எண்ணெய்ப் பசை இருந்து கொண்டே இருக்கின்றது.
நான் என்ன செய்யவேண்டும்? அ. துரை அரசு, பாளையம்கோட்டை

விடை: உங்கள் உணவில் கொழுப்புப் பொருளாகிய பால், நெய், வெண்ணெய், எண்ணெய் முதலியவைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும். உபயோகிக்கும் சோப்பை மாற்றிக்கொள்ளுங்கள், குளிக்கும் பொழுது இரண்டுமுறை சோப்புப் போட்டுத் தேய்க்க வேண்டும். மாலையில் வேர்வை வர விளையாடிய பிறகு குளிக்கும் பொழுது சவுக்காரச் சத்து அதிகமாக உள்ள சீயக்காய் அல்லது பூச்சிக்கொட்டை அரைத்துத் தேய்த்துக் குளிக்கவும்.




—இரா. இளஞ்சேரன்—

பரம்பொருளே!

இருள் கொப்பளிக்கும் மேக மண்டலத்திற்கு கடைசியாக வந்திருக்கிறேன். இறுதி என்னை இங்கே அழைத்து வந்துவிட்டது. பிறவிப் பெருங்கடலின் அலைகள் என்னைப் 'பாபாத்மாவாக' உரு மாற்றி விட்டன!

நீ எங்கே யிருக்கிறாயோ, தூரத்து மேகத்தின் நீர்த்துளிகளில், தாரகைகளின் வைர இடுக்குகளில், நிலவின் களங்கத்தில் எங்கே ஒளிந்திருக்கிறாயோ தெரியவில்லை. என் பாதங்களின் நிழலில் மறைந்திருக்கிறாயோ என்னவோ?

உலகங்களைத் தோற்றுவித்தவனே! உன்னிடம் சில சேதிகளை சொல்ல மனம் துடிக்கிறது. நான் மனித வம்சாவளியிலிருந்து நழுவி விழுந்தவன். எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கிறேன். உன்னைப் பார்ப்பதற்கே வெட்கம் என்னைப் பிடுங்கித் தின்கிறது! எனக்கு உணவில்லை; உடையில்லை; இருக்க இடமில்லை. என்னைப்போல கோடான கோடி நெளியும் உயிர்கள் உலவ முடியாமல்......வேதனையை அழுது தீர்க்கக் கூட நாதியற்றுப்போய் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அந்த வேதனைப் புலம்பலை சொர்க்கத்துச் சிங்காரிகளின் பாதச் சிலம்புகளின் சோபித ஒலியில் நீ கேட்டிருக்க மாட்டாய்!

என்னால் இதை நம்ப முடியவில்லை. உன் சித்தமின்றி தளிரும் அசையாதாம்! எல்லாவற்றிற்கும் நீயே ஆதி காரணமாம்! உலகின் ஒவ்வொரு அணுத்துளியையும் உன் கட்டளைதான் ஆட்டிப் படைக்கிறதாம்! உனது 'புனித வாரிசுகள்' குவித்துப் போட்டிருக்கும் புண்ணிய ஏடுகள் 'பிலாக்கணம்' பாடுகின்றன, இப்படியெல்லாம். அண்டசராசரங்களைச் சிருஷ்டித்து அவையின் அணுக்களில் கண்ணின் மணிபோல—கண்மணிக்குள் பாவை போல—ஒளிந்து கொண்டிருக்கும் உனக்கு மறதியா?

நீ படைத்துப் போட்ட பாப உலகை நீயே மறப்பதென்றால்...

மறதி!

யுக யுகாந்திரங்களாக நினை வில் திரை விரித்திருந்த மறதி....

நீ எதையும் மறப்பவனல்ல வாம்! மகா காவியங்கள்—மார்க்க தத்துவங்கள்—வேதப் பொருள்கள்—புனித பிரசங்கங் கள் எல்லாமே இப்படி அலறு கின்றன.

பின் இந்தத் தவறு எப்படிப் பிறப்பெடுத்தது?

பூவுலகில் அமைதி வற்றிவிட் டது. பைசாச வெறியின் 'பொம்மலாட்டத்தில்' புனிதங் கள் வெந்து கருகி விட்டன. இறைவனே! விஷவாய் பிளக்கும் பெரும் பாம்பும், ரத்த வேட்கை கொண்ட வேங்கையும், பிளிறும் யானையும் கண்ணும் கருத்துமாக நீ படைத்த உன் அனாதைக் குழந் தைகளை அரைத்து மெழுகின. உன் திருப் புத்திரர்கள் கொடு மையின் எல்லைக் கோட்டை கிழித்துக் காட்டியிருக்கிறார்கள். நினைத்தாலே நெஞ்சம் எரியும் பயங்கரங்களை உன் 'சீடப் பிள் ளைகள்' சடங்குகளாக நிகழ்த்தி யிருக்கிறார்கள். எத்தனை ரத்தக் குட்டைகள் — சதை மலைகள் — எலும்புக் குன்றங்கள்.........எல் லாமே கருணாமூர்த்தியான உன்னைத் 'திருப்தி'ப் படுத்த.

உன்னை வெறுத்தவர்கள் எதையும் செய்யவில்லை. உன்னை விரும்பியவர்கள் தான் வேத னையை விதைத்து அறுவடை செய்திருக்கிறார்கள்! எம்மைப் படைத்தவனே! அப்போதெல் லாம் ஏழைகளின் வற்றுது வழி யும் கண்ணீரைத் துடைக்க உன் திருக் கரத்திற்கு 'வேளை' வர வில்லை! இந்த கோர விளையாட்டு களை நீ ரசித்தாய், வெறி ததும் பும் குடிகாரனைப் போல! கொடு மைகள் புனிதங்களை விழுங்கிக் கொழுத்தன. 'தேவ கன்னியர் களை சைத்தான் குஞ்சுகள் முத்த மிட்டுக் கொக்கரித்தன!' எளி யோரின் அபயக் குரல் உன் இரக்க மனதை அசைக்கவில்லை. ஏன் தெரியுமா?

சொர்க்கத்துச் சோமரசத்தில் —அதன் இன்பச் சுவையில் நீ திளைத்துக் கிடந்தாய்!

அனாதி காலத்திலிருந்து அந்த ரத்தக் கடல், அலை எழுப்பிப் புரண்டு கொண்டிருக்கிறது. நீ தான் மறந்துவிட்டாயே எல்லா வற்றையும்.

ஆபத்பாந்தவா, அனாதைரட் சகா, தீனதயாளா, கருணா சாகரா, காருண்யமூர்த்தி, உனக் குத்தான் எத்தனைத் திருப்பெயர் கள்....எல்லாமே சிறப்புத் தன் மையின் மறு பதிப்புக்கள்! நீ வெளிச்சத்தின் சந்தானமாம்! நல்லவைகளின் வாரிசாம்! பொய்மையற்ற புனிதமாம்! இதுமட்டுமல்ல — எங்களுடைய பெருமை மிக்க பிதாவாம் நீ!

'நல்லவைகளின் புகலிடமே! நாதியற்றோரின் ஆறுதலே! எங்களுக்குப் பசிக்கிறது. நெருப் புக் கொழுந்தையும் பழமென விழுங்கும் நிலையில் நாங்கள் தவிக்கிறோம்!

'தயாபரனே! தாகம் மீறு கிறது. தொண்டைக்குள் தீத் துண்டுகள் புகைகின்றன! வாழ் வும் சாவுமற்ற நிலையில் நாங்கள் வதைகிறோம்!'

'கருணைக் கடலே!' கொடுமை கள் எங்களை விழுங்கத் துடிக்கின் றன. வெறி கொண்டோரின் ஆசை விழிகள் எங்களைக் கொத் தித் தின்கின்றன. உன்னையே

நம்பும் எங்களுக்கு இத்தனை இன்னல்களா?'

எரிமலையின் தணல் குழம்புகள் உருகியோடியபோது—

—பெருங்கடலின் அலை கரங்கள் நிலப் பகுதியை விழுங்கிய போது

இரக்கமற்ற கொடுமையாளனின் கோணல் சிந்தை விசித்திர சித்திரவதைகளைச் சிருஷ்டித்த வேளையில்,

உன் பெயர் சொல்லி ஏதுமறியா மக்களை நெருப்புக் குண்டத்தில் இழுத்தெறிந்த நேரத்தில்,

எம்இறைவா, இன்னலுக்காளானோர் இப்படியெல்லாம் உன்னை அழைத்தார்கள், கண்ணீர்சோர, உதடுகள் துடிக்க....

இத்தனைக்கும் நீ என்ன செய்தாய்?

அதே கண்ணீர் ததும்பும் கோரிக்கைகள் இன்றும் ஒலிக்கின்றன! கொடுமைகளின் 'கதைகள்' திரும்பவும் நிகழ்கின்றன! ஆமாம், அதே கோர நடப்புகள், அதே உருகும் வேண்டுதல்கள், அதே இன்னல்கள்........என்ன இதன் பொருள்?

வெறியும் கொடூரமும் நிரம்பி வழியும் இரக்கமற்ற பைசாசப் பொருளா நீ? கருணை வள்ளல் என்கிறார்களே உன்னை? உன் அடியார்கள் எதையெல்லாமோ 'இட்டுக் கட்டி' ஏமாற்றுகிறார்களே, பாமரர்களை!

கருணையின் வடிவமே, கடவுளாம்!

பஞ்சத்தையும், நோயையும், துன்பத்தையும் படைத்த நீயா கருணையின் வடிவம்?

எரிமலையையும் புயலையும், பூகம்பத்தையும் சிருஷ்டித்த நீயா உதார குணத்தின் உருவம்?

கொடியவர்களையும், எதேச்சதிகாரிகளையும் உருவாக்கிய நீயா நேர்மையாளன்? எப்படி நம்புவது இதனை? உன்னைப் பிரார்த்திக்க வேண்டுமாம்! உன் பெயரை நாத் தழுதழுக்க உச்சரிப்பது பிறப்பின் இலட்சியமாம்!



விந்தையிலும் விந்தை!

எங்களது விருப்பமில்லாமலே எங்களை நீ படைத்துக் குவித்தாய்! அதில் சோபித வாழ்வைச் சில 'செல்லப் பிள்ளைகளுக்கு' மட்டுமே பங்கிட்டு கொடுத்து விட்டாய்!

இதுவா நியதி? பசி பசி என்று நாங்கள் தணலில் புழுப்போல

தவித்து நெளிய வேண்டும். அப்படித்தானே?

உனது திருவருளைப் பெற்றவர்கள் 'தத்துவார்த்தம்' பேசுகிருர்கள்! வேதப் பொருளின் சூட்சமத்தை விளக்கிக் கொண்டிருக்கிருர்கள்! நீ உணர வேண்டும், ஆயிரமாயிரம் குழந்தைகள் நாங்கள் அவதியில் உழல்கிரேம்........துன்பத்தை தொட்டுத் தொட்டு துவண்டு போன ஜீவன்கள்........

உன் நியாய வாதங்களை, சட்ட திட்டங்களை நாங்கள் பொருட்படுத்தப் போவதில்லை.

உன்னை நாங்கள் மதிக்கவுமில்லை.

நீ உருவாக்கிய நரகமும் சொர்க்கமும்........! யாருக்கு வேண்டும்?

இப்போது புரிகிறது உண்மை. நாங்கள் அழிந்தால் உன்னைப் போற்றிப் புகழ யார் இருப்பார்கள்? பிரார்த்தனையை, புகழ்ச் சொற்களை உனக்கு எப்போதும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அப்படித்தானே! அதோ, அந்தக் குரலோசைகள் வான மண்டலத்தை மெல்ல மெல்லத் தழுவுகின்றன. நன்ருகக் கேள்; தேவாலயத்தின் மணிமுழக்கம்....

'நர ஜன்மங்களே! தெய்வ வணக்கத்திற்காக விரைந்து வாருங்கள்!'

தொலைவிலிருந்து ஒலிக்கிறது வேறொரு குரல்:

'பாபாத்மாக்களே! படைத்தவனின் பாதார விந்தங்களில் விழுந்து அழ எல்லோரும் வருவீர்!'

இவையின் இடையே சங்கொலி கேட்கிறது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சாந்தியாம்! கண்ணீரும் குருதியும் ஒழுகியோடும் கோர இரைச்சல்!

கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள், இவையெல்லாம் என்ன தெரியுமா? உன் 'செல்வ சந்தானங்கள்' சுவைக்கும் துன்பங்களின் அளவு திட்டுகள்! இதை மட்டும் மறந்துவிடாதே! தீக்கங்கு போன்ற சிவந்த கண்கள்.......ஆமாம் எங்களுடைய கோடிக்கணக்கான நெருப்பு விழிகள் பகைப்புலமான உன் சன்மார்க்கத் தத்துவங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

உன்னிடம் நாங்கள் எதற்காக சிரம் தாழ்த்த வேண்டும்? வதைபட்டுப் போன, எங்கள் நொந்து போன நெஞ்சங்களில் ஒரே ஒரு உணர்ச்சியை மட்டுமே நாங்கள் தேக்கி வைத்துக் கொண்டிருக்கிரேம். என்ன தெரியுமா? வஞ்சம்.... .... ...'சிரஞ்சீவித்வம்' பெற்ற எரியும் வஞ்சம்—இறவாத பழி உணர்ச்சி......

சோபித இன்பங்கள் குவிந்திருக்கும் சொர்க்கம் எங்கள் ஆசையைத் தூண்டிவிடவில்லை. கொடுமைகளின் பிறப்பிடமான நரகம் எங்களுக்கு அச்சத்தைத் தரவில்லை.

புகைந்த உள்ளங்களில் கொழுந்து விட்டெரியும் அந்த காலாக்னி மெல்ல, மெல்ல.......

இதோடு நிறுத்துகிறேன். ஏன் தெரியுமா?

கேட்கும் 'திராணி' உனக்கில்லை!

*[பஷீரின் மலையாளக் கதை இதன் கரு.]*

*

# பாம்பு

— பி. எல். சாமி, B.Sc. —

நான் போய்க் கொண்டிருக்கும் போது முன்பின் பார்த்தறியாத ஒருவர் பேச்சுக்கிழுத்தார். "மணமாகி விட்டதா?" என்ருர் 'இல்லே' என்றேன். "நேற்றுப் பேப்பரைப்பார்த்திர்களா, அதில் ஒரு அருமையான செய்தி இருந்தது" என்ருர். "பார்க்கவில்லே" என்றேன்.

"நியூயார்க்கில் ஒரு திருமணமான தம்பதிகள் திறந்த காரில் உயரமான கமான்களுள்ள பாலத்தின் வழியாகச் சென்றுகொண்டு இருந்தார்கள். அப்போது கமான் வளையத்திலிருந்து ஆணும் பெண்ணுமாகப் பிணைந்திருந்த பாம்புகள் காரில் விழுந்து மணமகனைக் கடித்துவிட்டன. அவன் இறந்துபோனுன். ஆனுல் மணப் பெண் அதைப் பற்றிக் கவலேப்படவில்லேயாம்"

"சே சே இது நம்ப முடியாது" என்றேன்.

"குறையும் கேளுங்கள். அவள் ஏன் கவலேப்படவில்லே? காரணம் அந்த மணமகன் (இப்பொழுது பிணமகன்) 1000 டாலருக்கு இன்ஷ்யூர் செய்திருந்தான்"

"நீங்கள் இன்ஷ்யூரன்ஸ் ஏஜன்ட்தானே" என்றேன்.

அவர் விடவில்லே.

"அடுத்த நாள் இன்னெருத்தனைக் கட்டிக்கொண்டு 'ஜாம் ஜாம்னு'......" அதற்குள் நான் நழுவி விட்டேன்.

இதுபோல பாம்பைப் பற்றி பல புளுகுகள். தற்கால மெருகிட்ட பொய்களும், பழங்காலப் புராணப் புளுகுகளும் நம் நாட்டில் பல நடமாடுகின்றன. பாம்பின் தலேயில் மாணிக்கம் பிறக்கிறதாம். இது ஒரு மணியான புளுகு. சந்திர கிரகணத்தின் போது சந்திரனேக் கேது என்ற பாம்பு விழுங்குவதாக நம்பி குட்டை, குளத்துக்குப் போய் மூச்சைப் பிடித்துக்கொண்டு முழுக்குப் போடும் 'மு(மு)ஆட்களுக்கு' நம் நாட்டில் பஞ்சமில்லே. எகிப்தில் கூட சந்திரனே முதலே கவ்வுவதாகக் கருதி வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுடுவார்களாம்.

பாம்பு பசுவுக்கே தெரியாது பாலே மடியிலிருந்து உறிஞ்சிக் குடித்துவிடுமாம். மனிதனுக்கே தெரியாது தூங்கும் மனிதனின் உயிரைக் குடித்துவிடுமாம் மற்றெரு பாம்பு. கண் பார்வையினலேயே ஆளேக் கொல்லும் பாம்பை கம்பர் கூறுகிருர். பாம்பு கண்ணேக் குத்துவது, நத்தை பாம்புக்கு தண்ணீர் கொண்டுபோவது, சாரையும் நல்ல பாம்பும் ஆண் பெண்ணுக பிணேந்திருப்பது ஆகியவைகளெல்லாம் பச்சைப் புளுகுகள். நல்ல பாம்பு துரத்திஞல் வளேந்து வளேந்து ஓடு. ஏனெனில் நேராக ஓடிவரும்; சாரை துரத்திஞல் நேராக ஓடு. ஏனெ

னில் வளைந்து வளைந்து வரும் என்பது பெரும் பொய். முதலில் பாம்பு துரத்தாது. இரண்டாவது எல்லாப் பாம்புகளும் வளைந்துதான் செல்லும். நல்ல பாம்பை அடித்துப் பொசுக்கு! இல்லாவிட்டால் உயிர் பெற்று உன்னையே திரும்பவும் கடிக்க வரும் என்பார்கள், அதில் அணு வளவு கூட உண்மையில்லை.

பாம்பார் புராணம் மிகப் பெரிது. சிவபெருமானுக்குக் கங்கணமானார். மகாவிஷ்ணுவுக்குப் படுக்கையானார். தேவாசுரர்களுக்கு நல்ல மத்துக் கயிருனார். நளனுக்கு மாறுவேடம் போட்டு விட்டார்! இது போலப் பல விருதுகள் பாம்பாருக்குண்டு. ஆயிரந்தலை ஆதிசேடன் எப்படி அட்டைப் புளுகோ அது போலவே ஐந்தலை நாகமும். இரட்டைப்பட நாகமுண்டு. ஆனல் அது இரட்டைத் தலையல்ல. பாம்பைக் கல்லில் செதுக்கி நட்டுத் தொழுதால் குழந்தை பிறக்குமென்பது ஆல மரத்தைச் சுற்றி வந்தால் அடி வயிறு கனக்கும் என்பது போன்றதே. நாக லோகம் இல்லை. ஆனல் நாகத்தின் பேரால் நாடு, ஊர், இனம் உண்டு. நாகர்கள் அசாமில் உளர். கோதுமை நாகம் என்று ஒன்று உளதாம். சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளது, அது அந்தணச் சாதியாம்! மணியிலும் சாதியுண்டு. மைனவிலும் சாதியுண்டு, எழுத்திலும் சாதியுண்டு, பாவிலும் சாதியுண்டு, கழுகிலும் சாதியுண்டு, நாயிலும் சாதியுண்டு, ஆதலால் 'பாம்பிலும் சாதியுண்டு, அதைத் தொழுது கும்பிடடி பாப்பா' என்று அந்தக் காலத்தில் பிராமணர்கள் சொன்னுர்கள். 'நல்ல, நல்ல பாம்புகள்' தங்கள் சாதி என்று சொள்ளிக்கொள்ளட்டும் என்று பிறரும் விட்டுவிட்டனர். ஆனல் டாக்டர் நாயர் சட்டசபையில் 'பிராமண நாகப் பாம்புகள்' (Brahmin Cobra) என்று சொன்னதற்கு அவர்களே கோபித்து 'வாபஸ்' என்று கத்தினுர்கள். நாயர் அப்படி யொன்றும் இழிவாகக் கூறவில்லையே. அவர்களே அக்காலத்தில் சொன்னதைத்தானே சொன்னுர். நாயரும் நயமாக நாகப் பாம்பு நஞ்சை 'வாபஸ்' பெறுமானல் நானும் 'வாபஸ்' வாங்குகிறேன் என்ருர். இந்தக் கோதுமை நாகம் அழகானது. சிறியது தாழங் குருத்தில் வாழ்வது. ஆனல் கடுவிஷ முடையது. இதைத் தங்கள் வருணம் என்று அன்று சொல்லிக் கொண்டதில் யாரே குறை கூற முடியும்!

பாம்பிற்கு காது உண்டா இல்லையா என்பது பெரிய கேள்வி. பாம்பைக் 'கட்செவி' என்றனர் நம் முன்னேர். ஆனல் பாம்புக்கு கண்ணுண்டு. செவி கிடையாது. கண்ணும் காதும் ஒன்ருகவும் கிடையாது. மகுடி ஊதும் போது காதால் கேட்பதால் பாம்பு ஆடுவதில்லை. மகுடியின் அசைவையும் பாம்பாட்டியின் அசைவையும் கண்டு அதுபோல் ஆடுகின்றதே யொழியக் கேட்டல்ல. மகுடியை ஆட்டாது மகுடி ஊதுபவனும் ஆடாதிருந்தால் மகுடி ஓசை வந்தாலும் பாம்பு ஆடுவதில்லை. மற்றும் பாம்பின் கண்ணை மூடிவிட்டு அருகில் மேளத்தைத் தட்டினலும் ஓடிப் போவதில்லை என்பதை ஒரு

ஆங்கிலேயர் செய்து காட்டினர். ஆனால் தரையில் சிறிது அசைவு ஏற்பட்டாலும் பாம்பு உணர்ந்து கொள்கிறது. பாம்பு உடலால் அதிர்ச்சியை உணரக்கூடியது.

நமது நாட்டில் 100,000 பேர் பாம்பினுல் ஒரு ஆண்டில் இறப்பதாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். 1000-க்கு மேற்பட்ட பாம்பினங்கள் உள. ஆனுல் 300 வகைகள் தான் நஞ்சுடையவை. நல்ல தண்ணீர் பாம்புகள் எல்லாம் விஷமற்றவை. கடற் பாம்புகள் பெரும்பாலும் விஷமுடையவை. பறக்கும் பாம்புகளும், விஷத்தை வீசியெறியும் பாம்புகளும், ஆப்ரிக்காவில் உள்ளன. தமிழ் நாட்டில் பொதுவாகக் காணப்படும் நஞ்சுடைய பாம்புகள் நல்ல பாம்பு, கட்டுவிரியன், கண்ணாடி விரியன் ஆகியவைகள். கண்ணுடி விரியனைப் பளபளப்பான செதிள்களால் உணரலாம். கட்டுவிரியனைக் கட்டுகளால் அறியலாம். கட்டு விரியன் கடித்தால் பிழைப்பது மிகவும் அருமை. நாகத்தின் நஞ்சு நரம்புகளைத் தாக்கினுல் இதன் நஞ்சு இரத்த சிவப்பு வடிகங்களைத் தாக்கி, மூச்சை நிறுத்தி விடுகிறது. பாம்பு கடிச்குத் தற்காலத்தில் எதிர் விஷம் (Antiserum) வைத்திருக்கிருர்கள். தூய வாயால் கடித்த வாயில் வைத்து உறிஞ்சி விஷத்தை துப்பிவிடுவது சிறந்த முறை. மூலிகைகளில் உண்மையுள்ளவை சில. புரட்டுகள் பல.

பாம்பு கடித்து இறப்பவர்களில் பாதிக்கு மேல் பயத்தால் சாகிருர்கள். பாம்பு தனது வாயை அகலத் திறந்து மேல் தாடையில் மடித்து வைத்துள்ள பல்லை நிமிர்த்தி கடிப்பதற்குள் பலரும் தப்பித்து விடலாம். பலர் விஷயத்தில் பல் பட்டிருக்கும், ஆனல் விஷம் ஏறியிருக்காது. ஆனல் பயம் அவர்களைக் கொன்று விடுகிறது. பாம்பாட்டி பல்லைப் பிடுங்கி விடுகிருன் அல்லது பல்லுக்கும் மேல் தாடைக்கும் இடையில் நச்சுப் பையை அழுத்தும்படி தடித்த துணியை சொருகி விடுகிருன். ஊறும் நஞ்சு உறிஞ்சி எடுக்கப்பட்டு துணியில் சென்றுவிடும். பாம்புக் கடி வேர் பெரும்பான்மை பொய்யே.

வழலைப் பாம்புக்கு விஷமில்லை ஆனல் விஷமுள்ள விரியன் போல் கட்டுகளைக் கொண்டு பயமுறுத்தித் தப்பிக்கிறது. பச்சைச் செடிகளில் பச்சைப் பாம்பு மறைந்து பறவைகளைப் பிடித்துத் தின்கிறது. மலைப் பாம்பு விழுது போல் தொங்கும். மான் முதலியன மரத்தடியில் சென்ருல் குதித்து அவைகளின் உடலைச் சுற்றிக்கொண்டு இறுக்கி எலும்புகளை 'நற நற' வென்று ஒடித்துவிடும். பின்னர் விழுங்கி விடும். சிங்கத்தைக் கூட இவ் விதமாகக் கொன்று ஏப்பம் விட்ட மலைப் பாம்புகளை ஆப்ரிக்காவில் ஆராய்ச்சியாளர் கண்டனர். இவைகள் ஒரு தடவை உணவு கொண்டால் பல மாதங்கள் அசையாது உறங்கும்.

கீரிப்பிள்ளை பாம்போடு சண்டை செய்யும்போது நெளிந்து வளைந்து பல் படாதபடி பார்த்துக்கொள்கிறது. பல் பட்டால் கீரி இறந்துவிடும். அது போலவேதான் மயிலும், நாயும் பூனையும்கூட பாம்பைக் கொன்று விடுகின்றன.

பாம்பாரென்றால் குரங்காருக்கு மிகவும் பயம். மிருகங்களில் குரங்கு ஒன்றுதான் பாம்பைக் கண்டு பயப்படுவதாக உயிர் நூலறிஞர் கண்டுபிடித்துள்ளனர். குரங்கின் கையில் செத்த பாம்பைக் கொடுத்தால், அது ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு — முகத்தை அந்தப்புறம் நீட்டிக்கொண்டு, பிடித்த பிடியை விடாது நிற்கும். 'குரங்குப் பிடி' என்பது இதுதான். "பைங்கணூரகம் பாம்பு பிடித்தன்ன" என்ற சிறுபாணாற்றுப்படை வரி இதையே குறிக்கின்றது. பஞ்சாப் குன்றுகளில் வளரும் ஒரு செடியின் தண்டு பட்டை, பட்டையாய்ப் பாம்பு போல இருக்குமாம். அதை எடுத்துக் கூண்டில் வாழும் குரங்கிடம் கொடுத்தால் அதைப் பிடுங்கித் தரையில் தேய்த்துத் தேய்த்து கிரீச்சிடுமாம். பாம்பென்றால் அவ்வளவு பயம் குரங்காருக்கு!

சங்க இலக்கியத்தில் மூன்றே பாடல்களில் 'பாந்தப் படாஅர்' என்ற ஒரு செடி கூறப்பட்டுள்ளது. இதன் தோற்றத்தைப் பார்த்து பாம்பென்று யானைகள் கதறுமாம். "அருவரை யிழிதரு வெருவரு படாஅர்க் கயந்தலை மந்தி யயுங்குபசி களைஇயர் பாம்பின் தந்தை பழச்சுளை தொடினு நனியோ யேய்க்கு பனிகூ ரடுக்கத்து" என்ற அகநானூற்று வரிகளில் பாம்புச் செடியைப்பார்த்த குரங்கு பலாச்சுளையைத் தொட்டாலும் நடுங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. இது ஒரு அருமையான செய்தி. தற்கால இயற்கை நூல் அறிஞர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இச் செடியை போலி நிறமுடையவை (Plant mimicry) என்பர் தாவர நூலார். புராணப் புளுகுகளைக் கூறுது இவ்விதமான – அருமையான உண்மைச் செய்திகளை நமது சங்கப் புலவர்கள் தான் கூறியிருக்கிறார்கள்.

'பாம்பு வெகுண் டன்ன தேறனல்கி' என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. பாம்பின் விஷம் மதுபானங்களின் போதை ஏறுவது போல் ஏறுகிறது என்று கூறப்பட்டுள்ளது. இதையே சாலமோனின் பழமொழிகளில் காணலாம். இந்த உவமை மிகவும் நயமானது, ஆழமானது.

மரணத்தின் முத்தம் பலவிதமானது. கரடி ஆளைத் தழுவிப் பிடித்து மரணத்தின் முத்தம் தரும் என்பார்கள். ஆனால் பாம்பின் முத்தத்தை வேண்டினவர் உண்டா? ஏதோ ஒரு மொழியில் பாம்பு கடித்தது என்று சொல்லமாட்டார்களாம், முத்தமிட்டது என்பார்களாம். போர்க்களத்தில் புறமுதுகிடாத அண்டோனியோவைப் போகக் களத்தில் புறமுதுகிடும்படிச் செய்தாள், கிளியோபட்ரா. முத்தங்களாலேயே பல யுத்தகளத்தில் வென்ற அந்த எகிப்துப் பேரழகி அண்டோனியோவைத் தேடிச் செல்ல தனது மார்பகத்தில் இரு பாம்புக் குட்டிகளை முத்தமிடும்படி வைத்தாளாம். அப் பாம்புக் குட்டிகளுக்கு உலகப் பேரழகியின் உயிர் கசக்குமா என்ன! சீசரும், அண்டோனியோவும் மற்றும் பல முடி மன்னர்கள் பார்க்க ஏங்கிய அந்த மார்பகங்களில் கிளியோபாட்ராவின் உயிரைக் குடித்து அக்குட்டிகள் உறங்கின. அந்தப் பாம்புகளுக்கு வந்த பேறுதான் என்னே! *

# இலக்கியச் செல்வங்கள்

## ஓடும் நிழலும் துரத்தும் நிழலும்

''தமிழ்த்தும்பி''

கதிரவனின் கடுமையான வெம்மையாட்சி உச்சநிலையில் இருக்கும்போது பெருமரங்களின் அடர்ந்த நிழல்கள் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றன! நாம் போகுமிடமெல்லாம் நமது நிழல்கள் நம்மைத் தொடர்கின்றன! மருள் மிக்கவன் 'நிழல் பட்டுவிட்டது' என்று பேய் பிடித்ததைக் குறித்து பயந்தவர்களை மேலும் பயப்பட வைக்கிறான். இருளின் இருப்பைக்கொண்ட நிழல்கள் கைதேர்ந்த கவிஞரின் கையில் எப்படிப்பட்ட அழியாத் தன்மை பெறுகிறது என்பதை இங்கு காண்போம். நாம் காணவிருக்கும் இரு காட்சிகளும் கலிங்கத்துப் பரணியில் வருகின்றன.

* * * *

வெய்யோனின் கொடுமை வாழும் ஒரு பாலைக்காடு. விவரமறியாது ஒருமனிதன் அங்கு தவறி வந்துவிடுகிறான். கதிர்ச் செல்வன் என்று செங்கதிரோனை எவன் அன்பாகப் பெயரிட்டானோ அவனை வாய் வலிக்க அவன் திட்டினான். வெம்மையின் முழுக் கோரத்தை உடம்பு அனுபவிக்கும் போது அவன் கதிரவனைச் செல்வன் என்று அழைப்பான்? கதிர்க் கொலைஞன் என்று யாராவது வெங்கொடுமைக்காரனை விளித்திருந்தால் அவனைக் கொண்டாடி மகிழ்ந்திருப்பான் அவன். வெக்கையில் வெந்து மாளும்போது அவன் வேறென்ன நினைக்கக்கூடும்? பாலையின் கொடும் பரிதி இவ்வாறெல்லாம் அவன் சிந்தனைக்கு வேலை தந்தது.

பருக நீர் கிடைக்காது என்பதை எள்ளளவும் ஐயமின்றி அவன் அறிந்தான். வியர்வைமணிகளைத் தாங்கிக் கொண்டுபோக இனிய இளம் தென்றல் அங்கு வீசக்கூடும் என்று எண்ண அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடவில்லை. தனிமையை மறக்க மக்கள் துணை வேண்

டாம் அவனுக்கு; தங்க இனிய பாலைவனச்சோலை வேண்டாம்; உண்டு களிக்க உணவு வகைகள் தரும் செடிகள் வேண்டாம; மணம் தந்து மயக்கும் மலர் வகைகள் வேண்டாம். ஆனல் இளைப்பும், களைப்பும் தீர அமர்ந்து ஆசுவாசப்படுத்திக்கொள்ள தரு தரும்நிழல் வேண்டியிருந்தது அவனுக்கு. புண்ணியத்திலும், நல்வினையிலும் நம்பிக்கையிருந்தால் அவனுக்கு வெறும் நிழல் கிடைக்கட்டும், வேறென்றும் வேண்டாம் என்று அவன் நினைத்தான் அவ்வெறு நிழல் அவனுக்கு இன்பக்குளிர் நிலவாக, கண்ணையும், கருத்தையும் கவரும் புதையலாக, இன்பம் வாழும் சுரங்கமாக இருக்கும்.

சோர்ந்து தள்ளாடிக்கொண்டே முன்னேறினன் அவன். நம்பிக்கையின் துணையில்லாவிட்டால் வீழ்ந்து விட்ட எவன்தான் வாழமுடியும்? நல்விருந்து பசித்தவன் முன் பரப்பியது போல, திடீரென்று அவன் முன் ஒரு நிழல் விரிந்தது. அவ்வளவுதான், மகிழ்ச்சியின் எல்லைக் கோட்டை அவன் அடைந்தான். தன்னையும் மறந்து, தன் களைப்பை மறந்து, தன் தாகத்தை மறந்து அவன் கூவிக் கூத்தாடினன். நிழலை நோக்கி மான்போல அவன் பாய்ந்தான். புலி வாயைக்கண்டு புள்ளிமான் விரைவது போல நிழல் நகர்ந்து கொடுத்தது. பேராசைக்காரன் முன் புதையல் போல அவன் முன் நிழல் இருந்தது. அவன் சும்மா இருக்க முடியுமா? மீண்டும் நிழலைக் குறிவைத்து ஓடினன்! நிழலும் இன்னும் ஓடியது! அவன் துரத்தத் துரத்த நிழல் ஓடிஓடி அவனைப் பயங்கரமாகச் சோதித்தது.

கானல் என்ருல் நீர் போல அல்லவா தோன்றும், நிழல் கானலைப் போல ஏய்க்கிறதே என்று பிரமித்தான். விடாமுயற்சியில் இடைவிடாது தோற்றவன் போல அவன் பெருமூச்சுவிட்டான். தன் தீவினை இன்னும் தொடருகிறதே, என்று அவன் வருத்தத்தில் ஆழ்ந்தான். இதைவிட ஒரேயடியாகச் செத்துவிடுவது நல்லது! எல்லாவற்றுக்கும் ஒரே முடிவு!

கண்ணைக் கூசவைக்கும் வானத்துப் பரிதியை நோக்கி உயிர் போகுமட்டும் திட்டிவிட்டுச் சாகலாம் என்று அவன் ஆகாயத்தை நோக்கினன். கேட்கும் தன்மை மங்கி வந்த அவன் செவிகள் சிறகுகளின் படபடப்பை இலேசாகக் கேட்டன. என்ன விந்தை! சிறகு விரித்த ஒரு பருந்து

பேராவலோடு அவனைப் பார்த்துக்கொண்டே அவன் முன் பறந்தது. ஓடும் நிழலின் காரணத்தை நகரும் பருந்தின் விரிக்கப்பட்ட சிறகுகள் அவனுக்குச் சொல்லிற்று. அவனால் இன்னும் சிந்திக்க முடிந்ததை நினைத்து அவனே பிரமித்துப்போனான்.

இவ் வெப்பநிலத்திலே காலந்தள்ள முடியாதுதான். நிழல் ஓடுகிறதோ என்ற அவன் பழைய எண்ணம் மாறிற்று. "இவன் உயிர் இன்னும் ஊசலாடுகிறது; கொத்தித் தின்னக் காலம் வரும்" என்று அப்பருந்து காத்திருந்து அவனைச் சுற்றி வட்டமிட்டது. இந்த அசையும் நிழலுக்குப் பதிலாக ஆடாதநிழல் தென்பட்டால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! நிழல் என்ற சொல்லுக்கே இது ஒன்றுதான் விளக்கமாக இருக்கிறதே இக்கோர பூமியில்! ஏ, பாலையே! என்னைச் சித்திரவதை செய்யாது மாய்த்துவிடு!

ஆடுகின்ற சிறை வெம்பருந்தின் நிழல்
அஞ்சி அக் கடுவனத்தை விட்டு
ஓடுகின்ற நிழல் ஒக்கு நிற்கு நிழல்
ஓரிடத்தும் உள அல்லவே.

[ஆடுகின்ற-அசைகின்ற; சிறை-சிறகு.]

*      *

அடுத்த காட்சி, கலிங்கப் போர்க்களம். கலிங்க மன்னன் அனந்தபதுமன் இருமுறை குலோத்துங்கச் சோழனுக்குத் திறை செலுத்த மறுத்தான்; நாட்டின் மானம் காக்க கருணாகரன் தலைமையில் சோழன் படைகள் கிளம்பின. கடலிரைச்சலைவிடப் பேரொலியை அன்றுதான் கலிங்கம் கேட்டிருக்கும். புயலின் பயங்கரம் இப்போருக்கு முன் எம்மட்டு என்று கலிங்கம் எண்ணியிருக்கும். ஊழிக்கூத்தின் தொடக்கமோ?

சந்திப்பு இவ்வளவு கடுமையாக இருக்கும் என்று எண்ணிப் பார்க்க அனந்தபதுமன் தவறி விட்டான். ஆழம் தெரியாது காலைவிட்டால் பெருகிவரும் வெள்ளத்தின் ஓட்டம் என்ன செய்யும்? அக் கேள்வியின் தீர்மானமான விடையைக் கலிங்க மன்னன் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அனந்தபதுமனின் ஆயுதக் கணக்கு இலட்சக் கணக்கான கலிங்க வீரர்களின் வாழ்க்கையுடன்

காரமாக விளையாடி விட்டது. நடுக்கம் கண்ட படைத் தலைவன் செய்வதறியாது திகைத்தான். மலைபோல எதிர்ப்பும், மாற்றானின் வெற்றியும் வளரும்போது எத்தனை கணம் திகைக்க முடியும்? தலைவன் ஓடினான். சேனை சிதறிச் சின்னாபின்னமாயிற்று.

நோக்கும் திக்கு எங்கணும் தமிழரின் வீரத் திருமுகங்கள்! பூத்த புது ரோஜாவின் மலர்ச்சிப் பொலிவுடன் இளநகை புரியும் வதனங்கள்! வெற்றிப் பண்களை இனிக்க இசைக்கும் குரல்கள்! பட்ட வேதனையும், காயங்களும் மறந்த வீர உடலங்கள்! வெற்றி முரசொலி தமிழ் வீரர்களைக் கிளுகிளுக்க வைத்தது..

அதே முரசொலி கலிங்க வீரர் உள்ளங்களில் பீதியையும், திகிலையும் புகுத்தியது. கண்ட கண்ட திக்குகளில் கலிங்கர், தித்திக்கும் இன்னுயிரைக் காத்துக்கொள்ள ஓடினர். சாவின்கை வாழ்க்கை வீட்டின் கதவைத் தட்டும் போதுதானே உயிர் மேலும் மேலும் இனிக்கிறது! உயிரை விடக்கூடாது என்று ஓடினர் பலர். எதிரியின் கரங்களில் சிக்கி அவமானப்படலாகாது என்று ஓடினர் பலர். தோல்வியைப் பகிரங்கமாக ஒத்துக்கொள்ளக் கூடாது என்று ஓடினர் பலர். வாழும் உயிர் எக்காரணம் கொண்டும் பிரிந்துவிடலாகாது என்று தலைகால் தெரியாது அவர்கள் ஓடினர். இறந்துபோன வீரர்களின் உடல்களை மிதித்தும் பிணங்களில் சறுக்கி விழுந்தும், தேர்ப் பாகங்களின் உடைந்த பகுதிகளை இடித்துக் கொண்டும் அவர்கள் தலை தெறிக்க ஓடினர்.

ஒருவரை முந்தி ஒருவர் ஓட முயன்றனர். சோழப் படையின் வெற்றி ஆரவாரம் விண்ணை முட்டிற்று. ஆரவாரம் பெருகப் பெருக ஓட்ட வேகம் மிகுதிப்பட்டது. ஓட ஓட யாரோ அவர்களை விரட்டி விரட்டியடித்தனர். ஆவேச ஓசையில் அச்சமிகுதிவளர்ந்தது. துரத்துவோரிடமிருந்து தப்ப அவர்கள் ஓடிக்கொண்டேயிருந்தனர்.

இனி ஓட இயலாது என்ற நிலை ஏற்பட்டபோது 'வருவது வரட்டும்' என்ற சுடுகாட்டு வைராக்கியம் அவர்களுக்கு உண்டாயிற்று. மிரண்ட கண்களோடு சுற்றுமுற்றும் பார்த்தனர். குலோத்துங்கன் படைகள் கண்ணுக்குத் தெரியவேயில்லை. புழுதி கிளம்பிப் பார்வையை

முற்றும் மறைத்தது. வெற்றி முழக்கம் மிக மிக லேசாகக் கேட்டது. நிம்மதியாக மூச்சுவிட வேளை கிடைத்தது அவர்களுக்கு. ஓட ஓடத் துரத்தியது யார் என்று அவர்கள் சிந்தித்தனர். ஒரு தமிழ் வீரனுவது கண்ணுக்குத் தெரியவில்லை. ஓடிவந்த களைப்பால் பெருமூச்சு விடும் போது தம் நிழல்கள் பயங்கரமாக ஆடும் காட்சியை அவர்கள் கண்டனர். அந்த நிழலசைவே கணநேரம் அவர் தம் நெஞ்சங்களை அழுத்தியது. துரத்தின நிழலுக்குத் தான் தாங்கள் பயந்து ஓடியிருக்க வேண்டும் என்று ஊகித்தபோது அவர்கள் வெட்கினர்; எண்சாணும் ஒரு சாணகக் குறுகினர். தம் அசட்டுத்தனத்துக்கு அவர்கள் மிக வருந்தினர்.

"அருவர் வருவர்" என இன்னும் சிலர் ஆவி சோரக் கூவி 'கிடு கிடு'வென நடுங்கினர்; நடுங்கி கற்பனை காட்டினத் தமிழ் வீரரை வணங்கினர். 'அபயம், அபயம்' என்று சிலர் கூவி மண்டியிட்டனர்!

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை ஓட அஞ்சினர்
'அருவர் வருவர்' என ஆவி இறைஞ்சினர்
'அபயம் அபயம்' எனு நடுங்கியே.

[அருவர்-தமிழர்; இறைஞ்சினர்-வணங்கினர்.]

* * *

ஓடும் நிழலில் பாலை வெம்மையையும், துரத்தும் நிழலில் போர்க் கிலியையும் எவ்வளவு ஆழமாக, தத்ரூபமாக வர்ணிக்கிறுர் சயங்கொண்டார்! அசையும் நிழல் தவிர ஆடாத நிழல் இல்லை என்னும்போது பாலை வெய்யில் கொடுமை எவ்வளவு பயமுறுத்தும் தன்மையைப் பெறுகிறது! திகில் குடிகொண்ட தோற்றவர்களின் மன நிலையை மிகத் திருத்தமாகத் துரத்தும் நிழலில் அவர் காட்டுகிறுர். உண்மை பாவம் பெரும் அளவில் இருக்கும் அற்புதமான இரு கவிதை ஓவியங்களை நாம் இங்கு அனுபவித்தோம். அழகான கற்பனையில் அனுபவச் சாயலை ஓடவிட்டிருக்கும் சயங்கொண்டாரை எவ்வளவு பாராட்டினுலும் தகும், எவ்வளவு ஊடுருவும் பார்வைதான் கவிஞனுக்கு! அருவர் எனும் சொல் இன்றும் நம்மைக் குறிக்கிறது தெலுங்கு நாட்டில். எப்படி தமிழ்க் கவிதையின் இன்பம்?

# “கற்றது ஒழுகு”

“வாழ்நன்”

●

கல்வியின் பெருமை குறித்து, கற்றலின் இன்றியமையாமை குறித்து, நாடாளும் தலைவர்களும் ஏடாளும் எழுத்தாளர்களும், நாட்டு முன்னேற்றத்திலே நாட்டங் கொண்டோரும், கல்வி அமைச்சர்களும் கண்ணியம் வாய்ந்த பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும், பாவலர்களும் பெரு நாவலர்களும், நாளும் பேசியும் எழுதியும் வருகினற இற்றைய நாளிலே, படித்துப் பட்டங்கள் பெற்றும் பதவி கிடைக்காது தவிக்கும் பரிவுக்குரியவர்கள் தொகை பல்லாயிரக் கணக்கிலே அமைந்திருக்கும் இந்தக் காலத்திலே, சற்றதைக் காற்றில் பறக்க விட்டுவிட்டுப் பண்பிலாப் பதடிகளாய்க் கயமையைப் பின் பற்றி யொழுகும் ஆடவரும் மகளிரும் செறிந்து காணப்படும் இவ்விருபதாம் நூற்றுண்டிலே, “கற்றது ஒழுகு” என்று கவிஞன் பாரதி கூறியதை எடுத்துக் கூறுவது சற்று கசப்பாகத்தான் இருக்கும். குடலைத் தூய்மை செய்யும் தமிழ் நாட்டு ஆமணக்கு நெய் கூட கசப்பாகத்தானிருக்கும். கசக்கும் என்பதாலேயே கண்மூடித்தனமாய் அவற்றைத் தள்ளி விட முடியுமா? அதுபோன்றதுதான் கற்றது ஒழுகு என்ற கவிஞன் கூற்றும்.

ஏனெனில் பலவற்றையும் பயில்பவர்களின் தொகை மிகுதி. ஆனல் சிலர் தான் அதன் செம்பொருள் காண்பர். அதிலும் ஒரு சிலர் தான், ஆயிரத்திலொருவர் தான் அதன் வழி ஒழுகுவர். இந் நடைமுறையைக் கொண்டே கற்றபடி நடப்பது என்பது நேர்மையாய் ஒழுகுவதென்பது இன்றைய சமுதாய அமைப்பிலே கடினமா யிருக்கிறதெனத் தெரிய வருகிறது. காரணம் கணக்கிலடங்காதன. முதலில் பயிலத் தகாதவற்றையே பலரும் விழைந்து பயின்று வருகின்றனர். இந்நிலை அவர்களைப் பயனற்ற வீணர்களாக்குகின்றன. விபரீதச் செயலிலே ஈடுபடுத்துகின்றன. ஆதலின்

கற்க கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத் தக”

என்ற பொன் மொழிக்கேற்ப வரையறை செய்து கொண்டு பயில வேண்டியவற்றையும் பயின்றதன் பயனையும் தெள்ளத் தெளிய உணர்தல்வேண்டும்.

வள்ளுவர் இத்துடன் விட்டாரில்லை. ஏன் வையக மாந்தர் வழி தவறிச் சென்றுவிடுவாரோ? என ஐயுற்றே கல்வி கற்கும் முறையைப் பற்றியும் பேசுகின்றூர்; பொருளுடையார் முன்னர் அஃதில்லா ஏழை எவ்வாறு அதனைப் பெறுதற்கு ஆசையால் தாழ்ந்தும் பணிந்தும் நிற்பானே! அதுபோல் மாணவர்கள் ஆசிரியர்களிடத்து ஆசை

யால் பணிந்து கற்றல் வேண்டு மென்னும் பொருள்பட

"உடையார்முன் இல்லார்போல்
ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லாதவர்"

என்று கூறுகின்றார்.

நடைமுறையிலே இந் நன்னெறிப்படி ஒழுகின் நாட்டு மக்கள் நல்வாழ்வுபெற வழியில்லை என்று கூறி நாச வழியிலே சென்ற நீசர்களைக் காண்கிறார் நம் கவிஞர் பாரதியார். பிற மொழியினைத் தலைமேல் வைத்தாடும் தருக்கர்களைக் காண்கிறார் நம் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த நிலைகெட்ட மாந்தரை
நினைந்துவிட்டால்"

என்று நெஞ்சம் குமுறுகின்றார். கவிஞரின் கருத்தையுணராது, கற்றபடி நில்லாது பொல்லாங்கு செய்திடும் பொறுப்பற்றவர்கட்கு அறிவு வருமாறு சிறுவர்க்கான செந்தமிழ் மொழியில் சீரிய கருத்தோடு "கற்றது ஒழுகு" என்று கனிவுடன் கூறுகின்றார் கன்னித் தமிழ் நாட்டார் முன்னேற வேண்டுமென்று. பயன் என்ன?

பாரதியார்க்குப் பளிங்கு மண்டபம் கட்டினார்கள். அவரது பாக்களை அச்சிட்டுப் பணம் தேடிக் கொண்டார்கள் சில பண முதலைகள். டி. கே. சியைப் போன்றவர்கள் பாவம் காட்டினார்கள், குமாரி கமலாவைக் கொண்டு கூத்தாடச் செய்தார்கள். கல்கியார் மலர் வெளியிட்டு மனதை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டார். இவை யாவும் கடலிலே கரைத்த பெருங்காயம்போலப் பயனற்று முடிந்ததே ஒழிய, இவர்களது போக்கினால் பாரதியின் கோட்பாடு மண் மூடிப் போயிற்றே ஒழிய மக்களின் மனத்திலே என்றும் அழியாத இடம்பெறவில்லை. ஏன் தெரியுமா? அவர்கள் கொண்டாடும் பகுத்தறிவற்ற பல விழாக்களோடு, அறிவற்ற முறையிலே அமைத்திடும் ஆயிரம் கற்கோவில்களோடு ஆழ்வார்களின் பொருளற்ற பல பொய்மொழிகளோடு இதுவும் கலந்து எவை கொள்ளத் தகுவன? எவை தள்ளத் தகுவன? என்றறியாத எழுத்தறிவற்ற மக்களும், படித்ததாக நடிக்கும் பட்டதாரிக் கூட்டங்களும், பைந்தமிழ்ப் பெண்டிர்களும் சித்தம் கலங்கித் திகைப்புற்றுச் செம்பொருள் காணாது, செப்பம் நில்லாது சிதைந்து சிறுமைப்பட்டுக் காணப்படுகின்றனர்.

உழுதொழிலை உயிரினும் உயர்ந்ததாகப் போற்ற வேண்டும். உழவே உலகில் தலையாயது என்பது தமிழ்மறை. அதனைப் பயின்றும் முழங்கால்சேற்றிலே முக்கிப் பயிர் விளைக்கும் பாட்டாளித் தமிழ் மகனை மூடவுலகம் பள்ளப் பயலென்றும், குடியானவன் என்றும் கூறிச் சேரியிலே ஒதுக்கிவைத்துத் 'தீண்டாதீர்' என்று இழித்துப் பேசுவதைக் கேட்ட பாரதியார் வள்ளுவர் வழங்கிய வானமிழ்தக் குறளாகிய

"சுழன்றும் ஏர்ப்பின்னதுலகம்
அதனால்
உழந்தும் உழவே தலை"

என்ற குறளை நினைக்கின்றார். குறள் படிப்பவரையும் அதனை எடுத்து ஓதுபவரையும் பார்க்கின்றார்! அம்மூடரைப் பார்க்கும்

போது "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்று தாயுமானவர் கூறியதும் "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையிற் பேதையாரில்" என்ற வள்ளுவர் வாக்கும் நினைவுக்குவரவே வாட்ட முறுகின்ருர். வருந்துகின்ருர். இவ்வாறே நன்மொழி பல இருக்கவும் நாட்டிலே பயிலப்பட்டும் நடைமுறையிலே கொண்டு நானிலம் புகழும் நல்வாழ்வு வாழத் தெரியாத நற்றமிழர் கூட்டம் எதிர்காலத்தில் எந்நிலையுறுமோ என்று ஏங்கியே "கற்றது ஒழுகு" என்று கனன்று உரைத்தலோடு நில்லாது உரிமைத் தமிழகத்தில் உழவு போற்றப்பட்டால் தான் உண்டியாகிய உயிரளிக்கும் உழவர்கள் உற்சாகத்துடன் உழைப்பார்களென்பதை, வள்ளுவர் கருத்தை நினைப்பூட்டும் நேரிய முறையிலே "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று தம்மையும் அதில் சேர்த்துத் தன்மைப் பன்மையில் தண்டமிழ்ச்சொல்லால் விளக்குகின்ருர். தமிழ் இலக்கியத்திலே கட்டிலடங்கா அளவு காதலும் வீரமும் செம்மை முறையிலே சித்தரிக்கப்பட்டிருந்தும் சிறப்புறப் பேசப்பட்டிருந்தும் வாழ்விலே காதல் இலாது வீரம் இலாது குழந்தைக்கு மணம் செய்து கொள்வதைப் பார்த்த பொழுது ஏட்டிலே எவ்வளவு தான் நல்லது சிறந்தது, உயர்ந்தது நவிலப்பட்டிருந்தாலும் நாட்டிலே நன்மக்கள் வாழ்விலே இடம்பெறவில்லை என்ருல் பயனில்லை என்பதை அறிந்தே "கற்றது ஒழுகு" என்று கனிவுடன் கூறுகின்ருர். ஆதலின் தென்னுட்டுச் சிங்கங்களே! திராவிட வீரர்களே! நீங்கள் யாவரும் அந்நன்மொழியைப பொன்னெனப் போற்றிப் புரைதீர்ந்த வாழ்வினிலே சென்று இன்புற்று இலங்குவீர்களாக.


# மாதவிடாய்




நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) இந்தியா கவர்ன்மெண்ட் செண்ட்ரல் டிரக்ஸ் லாபரட்டிரியாரால் பதிவு செய்யப்பட்டது. No. (CDL 688) எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாயை அதிக சுலபமாக தவருமல் உடனே வெளியாக்கும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள் சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0. மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0. (த. சி. தனி)




# கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Regd. No. 266 12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். உத்திரவாதமுள்ளது. போலிமருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். பில்ஸ் விலை ரூ. 12-0-0. (தபால் செலவு தனி)

**SEENU & Co., P. B. No. 1638. ( 26 ) Madras-1.**

கிளை. 134, Serangoon Road, Singapore.

இலங்கை ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main Street, கொழும்பு-11.




முன்னுரை :

யாரும் பயப்பட வேண்டாம். பெர்னர்ட் ஷாவின் முன்னுரைகளைப் போல இதுகதையை விழுங்கிவிடாது. உபசாரத்துக்காக இல்லாவிட்டாலும், உவமானத்துக்காக ஒரு வார்த்தை! திருடர்கள் ஜாக்கிரதை என்ற எச்சரிக்கைப் பலகை முன்பெல்லாம் பெரும்பாலும் ரயில் வண்டிகளில்தான் தூங்கிக் கொண்டிருக்கும். இப்போது அதற்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விட்டது. மெதுவாகத் தபால். தந்தி நிலையங்களிலிருந்து காப்பி ஹோட்டல் வழியாக இலக்கிய உலகத்திலும் புகுந்து விட்டது. ஒரு பிரபல பத்திரிகை ஆபீஸின் கதை இலாகாவிலே, திருடர்கள் ஜாக்கிரதை!' என்ற பலகை மாட்டப் பட்டிருக்கிறதாம்! என் பேனா மை கொட்டிச் சிரிக்கிறது ; தேவசுந்தரி, இரத்தக் கண்ணீர் வடிக்கிறாள்! இதில் வேடிக்கை என்னவென்றால் திருடியவன் வழக்குத் தொடருகிறான் ; திருட்டுக் கொடுத்தவன் தண்டனை அடைகிறான். எவனோ ஒரு எலும்புருக்கியின் மூளையிலே அபாரமான கற்பனை ஒன்று உருவாகிறது அதைத் திருடி ஒருவன் நாவல் எழுதுகிறான். அந்த நாவலைத் திருடி இனனொருவன் நாடகம் தீட்டுகிறான் ; அந்த நாடகத்தை வேறொரு ஆள் 'திரி-டி' சினிமாப் படம் எடுக்கிறான் இங்ஙனமாக இலக்கியத் திருட்டு எழுத்துத் திருட்டு, கதைத் திருட்டு, கவிதைத் திருட்டு, 'செய்தித் திரட்டு களில் ஒன்றாகத் தினசரி வந்துகொண்டிருக்கின்றன. தொலையட்டும்! கண்ணியமாகத் திருடியதை. திருடுவதை ஒப்புக்கொண்டு விட்டால் எத்தனை தொல்லைகள் இல்லையாகும்? இதோ, நீங்கள் பரபரப்போடு படிக்கப் போகும் கதை (கதையாவது) ஓரங்க நாடகமொன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஒருசில சீன்கள்) பழம் பெருங் கதை ஒன்றின் கழுத்தை முறித்துக் களவாடியது தான்! அது, எது என்று கண்டுபிடியுங்கள்! அந்தக் கதையோடு இந்த ஓரங்கத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். அப்போதுதான் இங்கே புதைந்து கிடக்கும் 'புரட்சி' புலனாகும்! இது தான் முன்னுரை! இனி என்னுரை தேவையில்லை......]

நடு நிசி! மண வீடு! எல்லோரும் ஆழ்ந்த நித்திரையிலிருக்கிறார்கள். மறு நாள் சா(ந்)தி முகூர்த்தம்! மணப் பெண் காஞ்சனாவும், மண மகன் கோபாலனும் தூங்கவில்லை. தூக்கம் எப்படி வரும்? கோபாலன் மெதுவாகப் பூனை போல எழுந்து சென்று தோழிகளுக்கு மத்தியில் துயிலுறும் காஞ்சனாவின் கரம் பற்றி எழுப்புகிறான்!

## முதல் காதல்

"காஞ்சனா........"

"யாரது ........என்ன?"

"எழுந்திரு...."

"ஏன்?"

"வா, சொல்கிறேன்"

"எங்கே?"

"மொட்டை மாடிக்கு"

"ஊஹூம், யாராவது விழித்துக்கொண்டால்......"

"ஏதோ இன்பமான கனவு என்றெண்ணிக் கொண்டு கண்களை இறுக்கி மூடிக்கொள்வார்கள்".

"எனக்குப் பயமா யிருக்கிறது"

"பயப்படாதே, கூடத்து விளக்குகள் அனைத்தையும் அணைத்து விட்டேன். வா........"

"முடியாது........கையை விடுங்கள்...."

"உரக்கப் பேசாதே. உன் தோழிகள் விழித்துக் கொள்வார்கள். பிறகு அவர்களுக்கும் தூக்கம் வராது"

"ஐயோ....நான் மாட்டேன்.... சரி, சரி, உடையை விடுங்கள்.... வருகிறேன்"

களவொழுக்கத்திற்குக் கைலாகு கொடுப்பதற்கென்றே மொட்டை மாடிகள் அமைக்கப் பட்டன போலும்! அதிலும் பட்டணத்து மொட்டை மாடிகளுக்கு ஸ்தல புராணங்கள் ஏராளம்! வாழ்க, மொட்டை மாடி! அங்கே நிலா வரவேற்றது அவர்களை! சந்தர்ப்பம் சௌகரியமா யிருந்தது.

## மொட்டை மாடியில்

"காஞ்சனா..."

"அத்தான்..."

"அத்தை மகளே, மேலே எதைப் பார்த்துக் கொண்டிருக்கிருய்? உன் நீலக் கண்களால் வானத்தையே விழுங்கி விடலாம் என்று எண்ணுகிருயா?"

"இல்லை: அந்த விண் மீன்களைப் பாருங்கள். அவை ஏன் கண் சிமிட்டுகின்றன?"

"உன்னை நான் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கேலி செய்கின்றன.

"நிலா ஏன் இவ்வளவு விரைவாகப் போகிறது?"

"உன்னருகில் நான் நிற்கிறேனல்லவா,.... வெட்கம், விரைந்து ஓடுகிறது."

"நீல வானில் கரு மேகங்களையே காணோமே........"

"ஏன் இல்லை—உன் கூந்தலின் வண்ணம் கரு மேகங்களின் கருமையை மறைத்து விட்டது. ஆச்சரியத்தால் மேகக் கூட்டம் வெளுத்து விட்டது."

"அத்தான்......"

"காஞ்சனா...."

"இப்படியே நாம் தனித்து நின்றுகொண்டிருப்பது ஆபத்து"

"ஆஹா......அந்த ஆபத்து' நேரும் நேரத்தைத் தான் நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"நாசமாய்ப் போச்சு. நாம் நிலை தவறி...உணர்ச்சி வயப் பட்டு..."

"ஒழுக்கம் தவறி விட்டால் என்ன என்று தானே கேட்கிருய்?"

"இல்லை, பயப்படுகிறேன்"

"அதனாலென்ன. நாளை நமக்கு இரண்டாவது இரவாக இருக்கும். அவ்வளவுதான்."

"என்ன......"

"ஆம். இந்த இரவு ஏன் நம் முதல் இரவின் முன்னுரையாக இருக்கக கூடாது."

"அய்யோ....பெரிய தவறு";

"அதற்குத்தான் உன் கழுத்திலே தாலி கட்டச் சொன்னார்கள். தடையே இல்லை"

"இடுப்பை விடுங்கள்...... எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"எனக்கும் ஒன்றும் தெரியவில்லை."

"அத்தான்....நீங்கள்..."

"உம்......நீ ஒன்றுமே பேசக் கூடாது. ஆமாம், உன் உதடுகள் இனி அசையவே கூடாது".

விடிந்தது. எல்லோரும் துயில் நீங்கித் திருப்பள்ளி எழுந்தார்கள்! இந்தக் கதிரவன் மேல் திசையிலேயே உதயமாகி, அங்கேயே அஸ்தமித்து விட்டால் எவ்வளவு சீக்கிரத்தில் எரிச்சலைக் கொடுக்கும் பகல் தொலைந்து போகும்? இன்ப இரவு எத்தனை அன்புடன் ஓடி வரும்? திருடர்கள் செய்யும் பிரார்த்தனையை ச. கோபாலனும் காஞ்சனவும் செய்தார்கள். இப்போது இரவு அவர்களது உடமையல்லவா? சடங்குகள் முடிந்தன. கதவுகள் சாத்தப் பட்டன, உள்ளே......



## இரண்டாம் இரவு

"இதோ, பால்..."

"சாக்கடையிலே கொட்டு"

"பழம்...?"

"அதுதான் நேற்றே கனிந்து விட்டதே!"

"நீங்கள் மகா குறும்புக்காரர்"

"நீ பெரிய ஏமாற்றுக்காரி".

"ஆமாம். அப்படித்தான் தெரியும். நான் என்ன உங்களை அப்படி ஏமாற்றி விட்டேனும்".

"ஒன்ரு, இரண்டா, ஒரே வரியில் சொல்ல—கேள், நீ மகா அழகியாம்; உன் பற்கள் முத்துக்களாம்; கண்கள் நீல மணிகளாம். கார் மேகக் கூந்தலாம். ரோஜா நிறக் கன்னங்கள், தங்க நிற மேனி, அன்ன நடை, அப்படி இப்படி—அப்பப்பா, இந்தக் கிழவிகள் சொன்ன பொககை வால் வர்ணனைகள் எல்லாம் பொய்—

"ஆமாம். ஆணழகன்-பரந்த மார்பு-விரிந்த தோள்கள்-பச்சிளங் குழந்தையும் பார்க்கப் பரவசமூட்டும் கனிவுப் பார்வை —இன்மொழிகள்—ஏறு நடை—பீடு தோற்றம்— இப்படித்தான் தாத்தா உங்களைப் பற்றிப் பீற்றினர். எல்லாம் முரண்பாடு"

"அடடா, நான் கூறி முடிப்பதற்குள் நீயுமுன் ஈரடி வெண்பாவைப் பாடி முடித்துவிட்டாயா? அந்தக் கிழவி விடு கலம்பகத்தை விட ஒரு படி மேலாக உன்னை மதிக்கிறேன் என்று சொல்ல வந்தேன்."

"அதையும் பாடி முடித்து விடுங்கள்."

"பாகு மொழி பேச யோசனையா?—கிளி மொழியே, கேலியல்ல; அம்மையப்பன் அருள் பெற்றவர்கள் கூட எங்கே சுகம் என்று தேடியலைகிருர்கள்; ஓடி மயங்குகிருர்கள். அவர்களுக்கு இந்த இடம் தெரியாது. என்

இதய காவியம் நீ, தென்றலமுது, காதல் பாடி வரும் கவின் நிலா! நல்ல பருவ மங்கை! எண்ணத் திற்கும் கற்பனை வண்ணத்திற் கும் எட்டாத இசை உரு. என் உயிர்.......

"போதும்...நானும் அப்படித் தான் கூறவந்தேன்."

"கண்ணே, உன் கற்பனையை யும் கூறு."

"கற்பனையல்ல, அன்பரே! அது உங்கள் கடைச் சரக்கு. காவாணிபம் செய்யும் உங்களைப் போன்ற கலைஞர்களின் கை முதல்! இது என் உள்ளத்தின் மொழி பெயர்ப்பு."

"மூலம் எந்த மொழியில் வேண்டுமானாலும் இருந்து விட் டுப் போகட்டும். மொழி பெயர்ப்பு இன்பத் தமிழில் இருக்கட்டும்."

"இசைத் தமிழில் வேண்டு மானாலும் கூறுகிறேன்"

"சினிமாத் தமிழில் சொன்னா லும் கேட்கச் சித்தமா யிருக்கி றேன். கண்ணே. இரவு நமக்காக விழித்துக் கொண்டிருக்கிறது. இந்த வரண்ட வையகத்தை மறந்து வர்ணனைகளுக்கும் வார்த்தைகளுக்கும் அப்பாற் பட்ட அந்த உலகத்தை நோக்கிச் செல்வோம். வா, கண்ணே, வா!"

ஆசை அறுபது நாள்—மோகம் முப்பது நாள் என்று சொல்லு வார்கள் ஒரு பழமொழி, ஆனால் ச. கோபாலன் அதற்கு விதி விலக்கு. அவன் சரியாக மூன்று நாட்கள் கூடத் தங்கவில்லை. நாட் டியம் பார்க்கப் போன ஆசாமி அவள் பின்னாலேயே 'கூசா' தூக்கிக்கொண்டு போய் விட் டான். காலம் 'ரோல்ஸ்ராய்ஸ்' வேகத்தில் பறந்தது. இப்போது அவர்கள் காதலர்கள்! கருத் தொருமித்த காதலர்கள்! தாசி லோலன் என்று விஷயமறியாத உலகம் வம்புக்கிழுக்கிறது. அதையெல்லாம் கவனித்தால் சன்னியாசிகளுக்குத்தான் இந்த உலகம் சரி.

## திருமணம்

பொன்னி விற்பனையாளர், திரு. இரா. பழனிச்சாமி அவர்கட் கும், திருவாட்டி இரே. அகிலாண் டத்திற்கும் மணமகள் இல்லத்தில் இரே. இளம்வழுதி M. A., B. L., அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் கா. அப்பாத்துரை M. A., L. T., அவர் கள் மணமக்களை வாழ்த்திச் சொற் பொழிவாற்றினர்கள்.

## இளவேனில் போதை

"எங்கே எங்கே என்று தேடி னேன், அதுதான் இதுவா?

"இளங் காற்றில் இல்லாத புதுமை, அருவியிலே காணாத குளுமை, சந்தணத்தில் தோன் றாத மணம் எல்லாம் இங்குதானா?

"கண்ணாடிக் குப்பையிலே வைரத் துண்டு—கடல் சிப்பியிலே வெண் முத்து. நாலாந் தெருவில் நான் கண்ட 'புதையல்!' தேடிய திரு —இதோ.........மல்லிகா...... இல்லை......மலர்ந்த ரோஜா!

"பருவத் துடிப்பே! இதயப் புன்னகையே எழில் குன்றமே! இன்பத் தென்றலே! நீலவான்,

நான்—அதில் நீந்தி விளையாடும் நிலா, நீ!''

கள்ளின் போதையைக் காட்டிலும் காமத்தின் போதைக்கு விசையதிகம். அந்த உலகத்திலே கோபாலன்—மல்லிகா—இருவரைத் தவிர வேறு யாரும் இருக்க விரும்ப வில்லை அவன். ஆனால் பெண்ணுள்ளம் ஆழமான கடல். அதன் அடித்தளத்திலே ஓடிக்கொண்டிருக்கும் எண்ணச் சுழல்களை இதுவரை அறிந்தவர்கள் யார்? கோபாலன் வறட்சியிலே, மல்லிகாவின் வனப்பு மங்கியது. காஞ்சனாவின் நிழல் தோற்றம் காட்சியளித்தது.

## சலனம்

"அன்பரே, ரோஜா வாடிவிட்டது, முகர்ந்து பாருங்கள்.''

"இல்லை. மொட்டுகள் கூட இன்னும் கட்டவிழ வில்லை. மோகனத்தில் உள்ள குறும்பு, முறுவலில் காணும் புதுமை.... மல்லிகா, எங்கே கற்றாய் இத்தனை வித்தைகளை!''

"இங்கே, இதோ—இந்த இமய மார்பில்!''

"மங்கையர் திலகமே, நெற்றியிலுள்ள திலகம் எனக்கு—என் அதரமுதம் உனக்கு.''

"காஞ்சனாவைப் போல், வற்றிய கிண்ணமா நான்?''

"ஆ......வற்றாத அருவியல்லவா! வளமார்ச் சோலையல்லவா! வாடாத மலரல்லவா, என் காஞ்சனா! மல்லிகா, அந்த எண்ணச் சோலைக்குள் என்னையேன் விரட்டுகிறாய்?''

"முதலில் காஞ்சனா! இப்போது மல்லிகா, பிறகு...

## திருமண அழைப்பு

தோழர் V. கலைமணி B.A. (Hons) அவர்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1985 தைத் திங்கள் 29ம் நாள் (11—2—55) வெள்ளியன்று விழுப்புரம் கச்சேரி ரோட்டில் தமது தம்பி

V. பாலசுந்தரத்திற்கும்

திருமதி சரசுவதிக்கும்

நடக்கும் திருமண விழாவிற்கு இதனையே அழைப்பாகக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்.

"பிறகு....மீண்டும் காஞ்சனா!''

"காஞ்சனா மாறிவிட்டால்....''

"உண்மை. காஞ்சனாவைப் பற்றி எனக்குத் தெரியும். என்னை நினைப்பாள்......நான் இருக்க மாட்டேன். அப்போது என்ன நினைப்பாள்...என்னையும் உன்னையும் நினைத்துப் பார்ப்பாள். நிச்சயம் அவள்...தனியாக இருந்திருக்க மாட்டாள்....'

"காஞ்சனா செய்திருந்தால், அது தவறு....அப்படித்தானே.''

"இல்லை. நானும் தகாது செய்து விட்டேன். நான் உடனே மாளிகைக்குப் போகவேண்டும்.''

"இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகா?''

"ஆம். ஆண்டுகள் தான் ஓசவிட்டன. ஆனால் என் காஞ்சனா

ஓடியிருக்க மாட்டாள்....காஞ்சனு ....காஞ்சனு!

## சந்தேகம்

"உங்களை எதிர் பார்க்கவே இல்லை"

"கதவை உடைத்துக்கொண்டு வந்திருக்கிறேன்."

"உங்கள் உடலில் ஒரு மாற்றமும் இல்லை. மாற்றுக் குறையாத தங்கம்! நீறு பூத்த நெருப்பு."

"வரவேற்கும் அழகா இது."

"படுக்கை விரித்தே இருக்கிறது."

"மலர், குங்குமம், சந்தனம், வாசனைத் தைலங்கள்—....நான் இல்லாத நாட்களில் அதிகம் பயன்படுத்தப் பட்டிருக்கும் போலிருக்கிறதே".

"உண்பதற்குத்தானே சோறு."

"சபாஷ்! முதலிரவுக்கு முன்னிரவு நான் அழைத்த கரங்களா இவை?"

"ஆம்".

"அந்த முத்துப் பற்களா, முல்லை மலர்களா, இவை?"

"ஆம்."

"கருநீலமெங்கே....கண்களில் கேணிகள்..........உதட்டிலே வெடிப்பு! காஞ்சனு, என்னை விட்டு நீ வெகு தொலைவுக்கப் பால் சென்றுவிட்டாய். மல்லிகை நோக்கிச் சென்றிருந்தேன். என் மனையில் மாடுகள் புகுந்திருப்பதைக் காண்கிறேன். காஞ்சனு, களி, உன்னைச் சூழ்ந்துவிட்டது. களிப்போடு இருக்கிறுய். வண்டு வந்திருக்கிறது, மயக்கத்தோடு. ஆனுல் சேறு, சகதி இவற்றுல் நிரம்பிய தாமரை! இனிப்பூட்டும் தென்றல் எங்கே....இசை பாடும் வீணையெங்கே...எழில் சிந்தும் நிலவு எங்கே....என் காஞ்சனு எங்கே...எங்கே...."

தனது இளமை, செல்வம் முழுவதையும் விலைமகளிடம் ஈடு வைத்துவிட்டுத் தமியனுக வந்த கோபாலன் தன் மனைவியைச் சந்தேகப்பட்டு விட்டான். உலகிலே எந்த மனித ஜந்துவும் இந்தப் பிடியிலிருந்து தப்பவே முடியாது. காஞ்சனு—அவளை எப்படி பத்தரை மாற்றுந் தங்கம்—பத்தினித் தெய்வம் என்று ஏற்றுக் கொள்வான்? ஒழுக்கம் உயர வானில் பறக்கும் காற்றுடி! உறுதியான மலைச் சிகரமல்ல; காற்று பலமாக வீசினுலும், கயிறு அறுந்துவிட்டாலும், காற்றுடிக்கு ஆபத்துதான்!

கோபாலன் மிதக் குடியன்; அவனுக்கு காஞ்சனு மட்டும் போதவில்லை. மல்லிகாவின் போதையும் தேவையிருந்தது. அந்தப் போதையிலே, காஞ்சனுவின் நினைவை அழித்துவிட்டான். அந்த வேளையிலே—காஞ்சனு—கயிறறுந்த காற்றுடி—அதை எண்ணும்போதுதான் சம்போகக் கோபாலன், சந்தேகக் கோபாலனுகி விட்டான்.

# வளரும் இலக்கியம்

## பண்டைக் கிரேக்கம்

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். வெளியிட்டோர்: திராவிடப்பண்ணை, திருச்சி. விலை ரூ. 1–0–0

பண்டைத் தமிழகத்தோடு வாணிபத்திலும், நாகரீகத்திலும் பங்கு கொண்ட பழமை நாடு கிரேக்கம். நம் தமிழகத்தின் வரலாற்றை எண்ணும் போதும் எழுதும் போதும் அவற்றிற்கு எடுத்துக் காட்டாக எகிப்தும், கிரேக்கமும் நம் கண் முன்னே வந்து நிற்கின்றன. அரசியல், தத்துவம், பொருளாதாரம், பகுத்தறிவு இவற்றைப் பறை சாற்றிய அறிஞர்களான சாக்ரடீஸ், பிளேட்டோ போன்றவர்களை உலகிற்குப் பெற்றுத் தந்த பெருமையும் கிரேக்கத்தையே சாரும். மதவாதிகளினாலும் சீமான்களினாலும் நடந்த சீர்குலைவுகள், மக்கள் வாழ்வு, அவர் தம் பண்புகள், கலை, இலக்கியம், தொழில்கள் இவற்றின் தன்மைகள், இவைகளை நன்முறையில் தம் சிந்தனைத் திறத்தால் குறைந்த அளவில் நிறைந்த கருத்துக்களைத் தெளிவுபட விளக்கியுள்ளார் இந்நூலாசிரியர் நெடுஞ்செழியனார்.

## திருக்குறளின்பம்

ஆசிரியர்: சுத்தானந்த அடிகள். வெளியிட்டோர்: காவேரிப் பதிப்பகம், புதுக்கோட்டை. விலை ரூ. 3–0–0.

ஏற்கனவே ஐந்து பதிப்புகள் வெளிவந்து ஆறும் பதிப்பாக வெளிவந்துள்ள இந்நூல் அழகுற அமைந்துள்ளது. "தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத் தூறுமறிவு" என்று வள்ளுவரைத்தது அவர் தம் நூலுக்கே சாலப்பொருந்தும் பெண்பு. யார், யார் அதை ஊன்றிப் படித்து அதன் உயர்வும், உண்மையும் அறிய அவாவகின்றனரோ அவரவர்க்குத் தனித்தனி இன்பம் தரும் தகைமை சான்ற நூல் திருக்குறள். அவ்வழியில் சுத்தானந்த அடிகளார் தாம் பெற்ற பேறு இவ்வையம் பெறுக என்ற எண்ணத்தால், வையத்து மாந்தரெல்லாம் வாழ்வின் செம்பொருள் காணுமாறு எளிய நடையில் ஆழ்ந்த கருத்துக்களை அழகாகத் தொடுத்துள்ளார்.

## அற்புதப் பெண்மணி

ஆசிரியர்; சுத்தானந்த அடிகள். வெளியிட்டோர்: காவேரிப் பதிப்பகம், புதுக்கோட்டை. விலை ரூ. 1–0–0.

பிரெஞ்சு நாட்டு விஞ்ஞான மேதையான கூரி அம்மையாரின் வரலாற்றைத் தரும் நூல்தான் இது. இவ் அம்மையார் தம் வாழ்நாளில் கற்றுத் தேர்ந்த முறைகளையும், முயற்சியினால் மேம்பட்ட வழியினையும், உலகம் என்றும் மறக்க முடியா வகையில் தம் ஆராய்ச்சித் திறனால் ரேடியம் (கதிரி) என்ற பொருள் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையையும் உணர்வோடு விளக்கியுள்ளார். இது நமது

காட்டுப் பெண்களும் புதிய உணர்ச்சிப் பெற்றுக் கல்வி, கலையில் உலகப் புகழ்பெற வேண்டுமென்ற நோக்குடன் எழுதப்பெற்றது.

## அம்பிகாபதி

கோவி. மணிசேகரன், வெளியிட்டோர் கலை மன்றம், சென்னை. விலை ரூ. 1—0—0.

இந்நூல் புரட்சிக் கவிஞன் அம்பிகாபதியின் வரலாற்றைக் கூறுவது. இதில் அம்பிகாபதி அமராவதியின் காதலையும், கம்பரைத் தமிழில் இராம காதையினை எழுதத் தூண்டிய குலோத்துங்கனை அம்பிகாபதி எதிர்த்து வாதிட்டதும் அழகுற அமைத்து இருக்கிறார் இதன் ஆசிரியர். இதில் சிற்சில இடங்களில் அடுக்குச் சொற்களுக்காகவும், எதுகை, மோனைக்காகவும் வரும் கருத்தற்ற சொற்களையும், வடமொழிச் சொற்களையும் நீக்கியிருந்தால் இந்நூல் இன்னும் சிறப்புற்று விளங்கும்.

## திருநூல்-தூயவாழ்வு

ஆசிரியர் : சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: காவேரிப் பதிப்பகம், புதுக்கோட்டை. விலை ரூ. 1-1.-0

வாழ்வைப் பல பிரிவுகளாகப் பிரித்து, அதன் நுட்பத்தை ஆராய்ந்து, ஒழுக வேண்டிய நெறிகளையும் வாழும் முறைமையினையும் தெளிவுறத் தெரிவிக்கும் நூல் இத் திருநூல். தூய வாழ்வு வாழ எண்ணுவோர் அனைவரும் படித்துப் பயன்பெற உதவும் நன்னூல் இத்திருநூல்.

## கோடை நாற்பது

கவிஞர் கதி. சுந்தரம். கிடைக்கும் இடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. விலை அணு. 8

கோடைக் காலத்தில் இன்பம் தரும் கோடை மலையின் இயற்கைக் காட்சிகளைப் பற்றிய நாற்பது வெண்பாக்களை உடையது இந்நூல். அம்மலையின் இயற்கை எழிலையும், சிறப்புக்களையும் செம்மையுறப் பாடிய கவிஞரின் பாவன்மை பாராட்டு தற்குரியது. உவமை, உருவகம் முதலிய அணி வகைகளும் இச் செய்யுட்களில் இடம் பெற்றுக் கற்பவர் மனதைக் களிப்புறச் செய்கின்றன. படகுக் காட்சி, கூடி வாழும் இயல்பு, வெங்கீர் செங்குட்டுவனும் மலைவளமும், கண்டறியாக் காட்சி, கவியரசரும் புவியரசரும், என்ற பாடல்கள் என்றும் நம் நெஞ்சத்தினின்றும் நீங்கா இடம் பெறுபவை.

## இதய பீடம்

ஆசிரியர் : கமலா கந்தசாமி, பீ. ஏ. கிடைக்குமிடம்: ஸ்டார் பிரசுரம். சென்னை-5. விலை அணு 15.

இந்நூல் தாகூரின் கீதாஞ்சலியைப் போன்று வாழ்க்கையின் தத்துவங்களையும் ஆத்மிக நுட்பங்களையும் படம் பிடித்துக் காட்டுபவை. இதனை எழுதிய ஆசிரியை வாழ்க்கையை தனது அறிவின் தெளிவால் நல்ல சொல்லாற்றலால் எளிய நடையில் விளக்கியுள்ளார்கள். இதிலுள்ள ஒவ்வொரு கட்டுரையும் நமக்குப் புதுப்புது தத்துவங்களை ஊட்டி வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து ஆராய நம் சிந்தனைக்கு வழி காட்டுகிறது.

— இளவளவன்

Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd. at Ponni Achakam, 127. Broadway, Madras-1.

7789

Regd, No. M 6486 PUNNI 1st February. 1955




## விநியோகஸ்தர்கள்

சென்னை நகரம்: சுப்பு அண்டு கம்பெனி, சென்னை-17.
வட, தென், ஆற்காடு; செங்கற்பட்டு: ஆனந்தா பிக்சர்ஸ், வேலூர்
கோயமுத்தூர், நீலகிரி ஜில்லாக்கள்: ஆனந்தா பிலிம்ஸ், கோவை.
சேலம் ஜில்லா: ஜெய்லெக்ஷ்மி பிலிம்ஸ், சேலம்.
மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சை ஜில்லாக்கள்
ராமனாதன் பிக்சர்ஸ், காரைக்குடி.
மலபார் ஜில்லா: சீதா பிலிம்ஸ், கோட்டயம்.
எப். எம். எஸ்: ஷா பிரதர்ஸ் லிமிடெட், சிங்கப்பூர்.
சிலோன்: சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட், கொழும்பு.

இதர முழு விபரங்களுக்கு:

## கிருஷ்ணா பிக்சர்ஸ் மதராஸ்-17.